
கடல்
சிறு கதைகள்
"சொக்கன்"

அ. யோகராஜா

[illegible]

# கடல்

சிறு கதைகள்

"சொக்கன்"

நண்பர் வெளியீடு
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
1972.

முதலாம் பதிப்பு 1972-6-2.

அச்சுப்பதிவு :

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விற்பனையுரிமை :

ச. கிருஷ்ணசாமி,
பத்திரிகை புத்தக விற்பனையாளர்,
33, பெரியகடை — யாழ்ப்பாணம்.

விலை : 3-75.

**கடல்,** சொக்கன் அவர்களுடைய முதலாவது சிறு கதைத் தொகுதி.

20 வருடங்கள் தாமதித்து வெளியாகின்றது.

சொக்கன் (க. சொக்கலிங்கம், B. A.) பழைய எழுத்தாளர்; சோ. சிவபாதசுந்தரம், சம்பந்தன், இலங்கையர்கோன், சு. வே., வரதர், கனக செந்திநாதன், வரிசையில் இடம் பெற்றவர். பின்பு, பொன்னுத்துரை, டானியல், டொமினிக் ஜீவா சந்ததியோடு ஒன்ருனவர். அதைத் தொடர்ந்து, யோகநாதன், பெனடிக்ட் பாலன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் காலத்தில் அவர்களுடன் நின்றவர். இப்போதும் புதிய இளமையுடன் எழுதிக்கொண்டிருப்பவர்.

காலத்திற்கும், சமூக மாற்றங்களுக்கும் ஏற்பத் தம் சிந்தனையைப் பக்குவமாக்கி, எழுத்து நடையை வளர்த்து, எழுத்தின் பல துறைகளில் பிரகாசிக்கும் சொக்கன், தமிழ் இலக்கிய உலகில் தனித்தன்மை உடையவர்.

சொக்கன் சிறந்த கவிஞர், பரிசு பெற்ற நாடகாசிரியர், நாவலாசிரியர், புதுமை மிக்க சிறுகதை ஆசிரியர், கட்டுரையாளர், வானொலி எழுத்தாளர்...

## முன்னுரை

இலக்கியப் பரிசுகள் சொக்கன் ஐத் தேடி வந்தன. 14 வயதில் (1944 இல்) வீரகேசரியில் சிறுகதை எழுதத் தொடங்கிய அவர், 1946 இல் மின்னொளி மாசிகை நடாத்திய போட்டியில் முதற் பரிசு பெற்ருர் (கடைசி ஆசை). அதன் பின்பு—

**1960** இல், தினகரன் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு (பிரயாணம்).

**1960** இல் நாடகத்திற்காக இலங்கைக் கலைக் கழகத்தின் முதற் பரிசு (சிலம்பு பிறந்தது).

**1961** இல் மீண்டும் கலைக்கழகத்தின் முதற் பரிசு (சிங்ககிரிக் காவலன்).

**1966** இல் வீரகேசரி சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு (தபாற்காரச் சாமியார்).

சொக்கன் இன் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பரந்த கல்வியும், தெளிந்த உள்ளமும் அவரது படைப்புக்களில் கண்கூடு. சரித்திரம், சமயம், இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகளில் முறையாகக் கற்ற அறிவு அவருடைய எழுத்துத் தொழிலுக்குப் பெரிதும் உதவி இருக்கின்றது; சொக்கன் அவர்களுடைய கதைகளைப் பற்றித் தனித் தனி விமர்சனம் இங்கே தேவை இல்லை. கதைகளின் கருப்பொருளும், ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும், வசனமும் அவருடைய சிந்தனையின் புதுமையையும், வாழ்க்கை அநுபவத்தையும், எழுத்தின் அழகையும் எடுத்து இயம்பும்.

பரிசுகள் பல பெற்றுவரும் இந்த நவீன எழுத்தாளருக்குக் கடல் சிறுகதைத் தொகுதி மூலம் ஒரு பெரும் பரிசு காத்திருக்கின்றது. உங்கள் ஏகோபித்த ஆதரவும், பாராட்டுந்தான் சொக்கன் ஐக் காத்திருக்கும் அந்தப் பரிசு. இனி, அவரை மறைக்காமல் சற்றே விலகி இருக்கின்றேன்.

நோய்த்தடுப்பு, சமூக மருத்துவத்துறை,
இலங்கைப் பல்கலைக் கழகம், நந்தி.
பேராதனை.
1972-5-15.

"கண்முன் காண்பவற்றை அவதானித்து "இவை இவ்வாறு இருப்பது ஏன்?" என்று சிலர் காரணம் கூறுவர். நானோ, காண இயலாதவற்றைக் கனவு கண்டு "இவை இவ்வாறு இருந்தால் என்ன?" என்ற என் கருத்தை வெளிப்படுத்துகின்றேன்."

ரொபேட் கென்னடி

இருபத்தெட்டாண்டுகளாக நான் கதைகள் எழுதுகின்றேன். அவைகளில் எனக்குப் பிடித்தவையும், சக எழுத்தாளர்களதும், விமர்சகர்களதும், வாசகர்களதும் பாராட்டுக்களைப் பெற்றவையுமான பதினைந்து கதைகள் இத்தொகுதியிலே வெளியாகியுள்ளன. 1969 இலேயே, இது வெளியாயிருந்தால் எனது எழுத்து வாழ்க்கையின் வெள்ளி விழா நினைவு நூல் என நான் பெருமைப்பட்டிருக்கலாம். அதற்கு வசதியில்லாது போய்விட்டது.

என் இனிய நண்பரும், தமிழ்ப் புரவலருமாகிய திரு. இ. சரவணமுத்து அவர்களின் நிதி உதவியால் இன்று இந்நூல் வெளியாவதையிட்டு நான் மிக மகிழ்கின்றேன். அவருக்கு என் இதயங் கனிந்த நன்றி உரியதாகும்.

## முகவுரை

"சிறுகதைக்கு ஒரு கட்டுக் கோப்பு இருத்தல் வேண்டும், கருத்தும், கவர்ச்சியும் வாய்ந்த வசன நடையிலே, சமுதாயப் பார்வைத் தெளிவோடு சிறுகதை எழுதப்படல் வேண்டும். எழுத்தாளர்களின் கோபதாபங்களின் சுமைதாங்கியாகவோ, சமுதாயத்தை நோக்கி அவர்கள் சிந்தும் கேலிக்கணைகளின் தூணியாகவோ அது

அமைதல் கூடாது: உள்ளதை உள்ளவாறே உரைப்பதிலும், உள்ளதை இலக்கிய நயத்தோடு உரைப்பதே சாலச் சிறந்தது. உண்மைகளை நிருவாணக் கோலத்திலே காட்டுவதும், ஆபாசங்களை 'அப்பட்ட'மாக முன் வைத்துக் கிளுகிளுப்பினை ஏற்படுத்துவதும், எம் அருட்டுணர்வுகளுக்குக் காவிய ஆதாரந்தேடி அலைவதுமாகிய சங்கதிகள் சிறுகதை இலக்கியத்தைச் சோரம் போக வைத்துவிடும்.'' என்று எனக்கு நானே சில கோட்பாடுகளை விதித்துக் கொண்டு சிறுகதைகளை எழுதி வந்திருக்கிறேன். இவை இன்றைய இலக்கிய நோக்கிற்கும், போக்கிற்கும் முரணாக இருக்கலாம். எனினும், எனது ஆன்மாவிற்கு நான் துரோகம் செய்யவில்லை என்ற மன அமைதியை இவை எனக்கு ஏற்படுத்தி வந்திருக்கின்றன.

நான் சமுதாயத்தின் ஓர் அங்கம். அதன் விருப்பு வெறுப்புக்களையும், இன்ப துன்பங்களையும், ஆசை நிராசைகளையும் எனது கதைகளிலே பிரதிபலிக்கச் செய்வது என் கடமை. இவ்வாறு பிரதிபலிக்கையில் எனது அறிவிற்கும், உணர்விற்கும் எட்டிய அளவில், ''இந்தச் சூழ்நிலையில் இந்தச் சம்பவம் இந்த மாதிரி நிகழாது வேறுமாதிரி நிகழ்ந்திருக்கலாம். இந்தப் பாத்திரம் இவ்வாறு செயற்பட்டிருக்கலாம்'' என்று கோடி காட்டாமல் என்னால் இருக்க முடிவதில்லை. 'கலை கலைக்காக' வென்றோ, 'கலை, தான் சார்ந்து நிற்கும் இயக்கத்திற்காக' வென்றோ வரையறை செய்து கொண்டு சொற்சிலம்பம் வீசவோ, பிரசாரம் செய்யவோ நான் முனையாமையை இக்கதைகளை வாசிப்போர் உணர்ந்து கொள்வர். எழுத்தாளன் எந்தச் சூழ்நிலைக்கும், சுற்றுச் சார்புக்கும் தனது சுதந்திரச் சிந்தனைப் போக்கைப் பலியிடல் கூடாது, என்ற அழுத்தமான என் கொள்கைதான் இதற்குக் காரணமாகும்.

'பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே'

என்பதுதான் எம் முந்தையோர் கண்ட முறை; அம் முறை மீண்டும் எமது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், சிறப்பாக இலக்கிய விமர்சனத் துறையிலும் தலைதூக்கும் நாளை எதிர்நோக்கி, இச்சிறுகதைத் தொகுதியைத் தமிழ் அன்னையின் பொன்னார் திருவடிகளிலே மிகுந்த மகிழ்ச்சியோடு படைக்கின்றேன்.

இதனை உருவாக்கிய பணியிலே உதவிய நண்பர்கள், சண்முகநாத அச்சகத்தினர் யாவர்க்கும் என் நன்றி உரியது. இதன் அட்டைப்படம், என் மாணவர் வி. கே. புகழேந்தி அவர்களால் வரையப்பட்டது, அவருக்கு என் ஆசிகள் உரியன.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,
1972-6-2.

"சொக்கன்"

## கடல் சிறுகதைத் தொகுதியில்

தபாற்காரச் சாமியார் 1, தரிசனுமிர்தம் 12, கடல் 17, அபஸ்வரம் 31, ஆசிரியர் 39, பிரியாவிடை 46, ஒழுங்கை 54, குரு 64, இழப்பு 73, வறுத்தவித்து 87, சேந்தாங்குளம் 94, இருவரும் அழுதனர் 104, உறவு முறை 112, குட்டை நாய் 126, கடன் தீர்ந்தது 134;

# 1

அன்று காலையிலிருந்து சந்திரனின் மனம் ஒரு நிலையில்லாது தத்தளித்த வண்ணம் இருந்தது. தனது தொழிலுக்கான காக்கிச் சட்டையை அணிந்துகொண்ட போது, நெஞ்சில் ஏதோ குடைச்சல் ஏற்படுவதுபோல அவன் உணர்ந்தான்.

காற்சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்து இரண்டு தம் இழுத்தான். அப்பொழுது கூட அவனைப் பற்றிநின்ற சோர்வுநிலை விட்டு நீங்க வில்லை.

முற்றத்திலே இறங்கி வேலியிலே சார்த்தியிருந்த சைக்கிளை எடுத்தபோது, வழக்கம்போல ஜிம்மி வாலை யாட்டியபடி வந்து அவன் காலை நக்கியது. சந்திரன் எரிச்சலோடு 'சீ! நாயே' என்று அதைக் காலால் உதைத்தான். ஜிம்மி ஓலமிட்டபடி தலைவாயிலைப் பார்த்து ஓடியது.

"பாவம்! வாயில்லாச் சீவன். உங்கடை எரிச்சல் அதுக்குத் தெரியுமா?" என்ற மனைவியின் அனுதாபக் குரலைக் கேட்டும் கேட்காதவன்போல அவன் சைக்கிளில் ஏறினான். பழக்கப்பட்ட சைக்கிள், கால்களின் உந்தலால் ஓர் ஒழுங்கிற் சென்று தபாற் கந்தோரை அடைந்தது.

## தபாற்காரச் சாமியார்

'மெயில்' பிந்திவிட்டது என்பதால் தபாற்காரர்கள் அங்கங்கே கூட்டமாய் நின்று உலக விவகாரங்களைப் பிளந்தெறிந்து கொண்டிருந்தார்கள்.

"மச்சான்! இதைக் கேட்டியே? கொழும்பிலையோ எங்கேயோ நம்ம சகோதரத் தொழிலாளி ஒருவனிலை, அவன் தபால்களைச் சரிவர 'டிலிவரி' பண்ணுறதில்லை எண்டு கொம்பிளெயின்ற் வந்துதாம். சந்தேகப்பட்டு அவன்ரை வீட்டை போய்ப் பரிசோதித்துப் பார்த்த திலை நூற்றுக் கணக்கான கடிதங்கள் டிலிவரி பண்ணப் படாமலே கிடந்ததாம். எப்பிடி வேலை? அங்காற் பக்கங்களிலே அவங்களெல்லாம் இப்பிடித்தான்போலை". தனது 'டக்ளஸ் பெயர்பிருங்' மீசையைப் பெருவிரலால் முறுக்கியபடி கதிரவேலு உதிர்த்த வார்த்தைகள் இவை.

"அதையேன் கேட்கிருய்? அவங்கள் மணி ஓடர், போஸ்டல் ஓடர்களைக் கூடக் கள்ளக் கையெழுத்து வைத்து மாறறிப்போடுவாங்களாம். இங்கை நாங்கள் தான் கடவுள், கடமை, மனச்சாட்சி எண்டு சாகிறது. என்ன சாமியார்! சொல்லும் பார்ப்பம்." வந்த நேரத் திலிருந்து அத்துவானக் கிறக்கத்தில் மனத்தையும், சிந்தனையையும் ஓட்டிக்கொண்டிருந்த 'தபாற்காரச் சாமியா'ராகிய சந்திரனை நோக்கிச் சுப்பிரமணியம் இவ்வாறு சொன்னுன். நாள் தவறினுலும் கடவுளைப் பற்றியும், மனச்சாட்சியைப் பற்றியும், கடமையைப் பற்றியும் தவருது தர்மோபதேசம் செய்யும் தன்னைச் சீண்டிவிடத்தான் சுப்பிரமணியம் இவ்வாறு பேசுகிருன் என்பதைச் சந்திரன் உணர்ந்தாலும், வழக்கத்திற்கு மாருக அவன் மௌனம் சாதிததான். இதனுல் சுப்பிர மணியத்தின் ஆயுதம் 'பூமருங்' ஆகிவிட, அங்கு அதிர்ச்சி யும், ஆச்சரியமும், அமைதியும் சில கணங்கள் நிலவின.

அந்த அமைதி கலைந்தபோது சந்திரன் அவ்விடத் தில் இல்லை. அவன் மெதுவாக அவ்விடத்திலேயிருந்து நழுவிக் கடிதப் பிரிப்பறைக்குச் சென்று ஒரு ஸ்டூலிலே அமர்ந்துகொண்டான்.

கட், கட், கட, கட என்று ஓய்வொழிவில்லாதபடி தட்டிக்கொண்டும், தந்திச் செய்திகளை அவ்வப்போது தந்திக்காரரிடம் கொடுத்துக்கொண்டும் டெலிபோ

னிஸ்டுகள் மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தனர். "கொஞ்சம் பொறுமன் காணும். என்ன அவசரம்?... உங்களுக்கென்ன? முத்திரையோ... நீங்கள்? றிஜிஸ்ரேஷனோ? அடுத்த கவுண்டர்" என்று கதம்பமாக எழுகின்ற இலிகிதர்களின் ஒலிவேறு காதில் நாராசமாக விழுந்தது. ஆனால், அவையொன்றும் சந்திரனின் ஏகாந்தயோகத்தைக் குலைக்கவில்லை.

'வார்' ஒட்டத்தில் எதிராளியின் கையிலே தட்டிவிட்டு ஓட, அவன் துரத்தி வருவதுபோலச் சிந்தனையைத் தட்டிவிட்டு அது தன்னைத் துரத்திவர ஒளிப்பதற்கே இடமின்றிச் சந்திரன் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

தான் செய்தது பிழை என்று முடிவு கட்டவுங்கூடவில்லை. 'சரி' என்று தனக்குத்தானே 'சபாஷ்' போடவுங் கூடவில்லை.

சந்திரன், திரிசங்கு சொர்க்கத்தின் அந்தரத்திலே தொங்கித் தவித்தான்.

## (2)

"பபா! தபாற்கார மாமாவாக்கும், போய்த் தபாலை வாங்கிக்கொண்டு வாங்கோ." தனது மணியோசைக்குப் பதிலாக வீட்டினுள்ளேயிருந்து வந்த குரலின் கனிவிலே சந்திரன் மெய்ம்மறந்து போனான்.

"தபாற்காரன் வந்திட்டானே? தபாற்காரனோ? அவனிட்டைப் போய்த் தபாலை வாங்கு" என்றெல்லாம் அலட்சியமான குரல்களையும், வரவேற்புக்களையும் வீடுகள் தோறும் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட அவனுக்கு இந்த அனுபவம் புதுமையாக இருந்தது.

அந்தப் புதுமையனுபவத்தைச் சுவைத்தபடி அவன் நின்றபொழுது, நாலே வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தி வந்து, "மாமா! தபால் தாருங்கோ" என்று

தனது குஞ்சுக் கரங்களை நீட்டினுள். சந்திரன் தபாலைக் கொடுத்தபோது, "நன்றி, வணக்கம்" என்று சொல்லியபடி அவள் தபாலை மரியாதையோடு வாங்கிச் சென்றமையைச் சந்திரனுல் என்றுமே மறக்கமுடியாது.

அன்றிலிருந்து சந்திரனது உலகத்தில் அந்தக் குழந்தையும், குழந்தையை ஏவிய அந்தத் தாயின் குரலும் இடம்பெற்றுச் சிறிது சிறிதாய் ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. அத்தக் குடும்பத்திலே தானும் ஓர் அங்கத்தவனுகிவிட்ட உள்ளுணர்வு அவனுக்கே தெரிந்த பரம ரகசியமாக அவனுள்ளே இதய அந்தரங்கத்தில் ஒளிவிட்டு மின்னியபடி இருந்தது.

சிறுமி வராத நேரங்களில் தாயே வந்து தபாலை வாங்கிச் செல்வாள். மென்மையும், பெண்மையும் நெற்றியிலே குங்குமமாகத் திகழ, அதன் பின்னணியில் உலகின் பரிசுத்தமே ஓர் உருவமாகி வருவதுபோல அந்தப் பெண் வரும்பொழுது அவன் மானசீகமாக அந்தத் தாய்க்கு அஞ்சலி செய்யத் தவறியதேயில்லை.

சகோதர பாசமே இன்னதென்றறியாதவனும், குழந்தைப் பேற்றையே அடையமுடியாத மலடனுமாகிய தனக்கு ஒரு சகோதரியும், ஒரு குழந்தையும் கிடைத்துவிட்டதுபோன்ற பைத்தியகாரக் கனவிலே சந்திரன் மிதந்துகொண்டிருந்தான்.

'தபாற்கார மாமா' என்ற சொல்லுத்தான் இத்தனைக்கும் காரணமா...?

'இல்லை... இருக்க முடியாது. இது பல பிறவிகளின் சொந்தம்... பிராரத்துவம் என்பது இதுதான்'.

சந்திரன் மனத்தினுள்ளே பலவாறு போராடிப் போராடி அந்த இருவரையும், தன் நெஞ்சிலே நிரந்தரமாகக் குடியேறி வாழ்வதற்கு அனுமதித்துவிட்டான்.

இத்தனைக்கும் அவன் அந்தப் பெண்ணேடு ஒரு வார்த்தை பேசியதில்லை. குனிந்த தலை நிமிராது வந்து

கடிதத்தைப் பெற்று அவள் செல்லும்வரையில் ஏதோ ஒரு புனிதமான உலகம் தன்னைச் சூழ்ந்து நிற்பதுபோல உணர்ந்து அவன் பயபக்தியோடு குறுகி வளைந்து நின்று விடுவான்.

பபாவோடு ஒரு சிறு புன்னகை; செல்லமாக அவள் கன்னத்திலே ஒரு தட்டல்; அவ்வளவுதான்! ஆனால், இரண்டு அனுபவங்களுக்குமாகச் சந்திரன் தவமே கிடந்தான் என்று சொல்ல வேண்டும்.

## (3)

இரண்டு வாரங்கள் வரை அவளின் விலாசத்திற்குக் கடிதம் ஒன்றும் வரவில்லை. சந்திரன் துடித்துப்போய் விட்டான். எந்த முகாந்திரத்தைக் கொண்டு அந்த வீட்டு வாயிலிலே போய் நிற்பது? சந்திரனுக்கு அந்தக் கச்சடா வேலைகள் ஒன்றும் செய்யத் தெரியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் 'மனிதன்' என்ற முழுமையிலிருந்து இறங்கிவிட அவன் தயாராய் இல்லை. அதனால் அந்த வீதியாற் செல்லும்போதுகூட மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு விறைத்த நேர்ப்பார்வையோடு அவன் சென்றான்.

அவளின் குரல் கேட்கவில்லை. அந்த 'பபா'வின் தரிசனமும் கிடைக்கவில்லை. சந்திரனின் நெஞ்சுக்குள்ளே சொல்லவும், மெல்லவும் முடியாத வேதனை குமுறிக்கொண்டு எரிமலையாய்க் கனிந்து கொண்டிருந்தது.

இந்த நிலை நீடித்தால் தனக்குப் பைத்தியமே பிடித்து விடுமோ என்று சந்திரன் சந்தேகப்படுகின்ற நிலைக்கு வந்தபொழுது அந்த வீட்டிற்கு மீண்டும் கடிதம் கொண்டு செல்ல வேண்டிய தேவை அன்று ஏற்பட்டது:

சீதை, இராமனின் கணையாழியைக் கண்டதும் அடைந்த மனநிலையில், சைக்கிள் புட்பக விமானமாகி

விடச் சந்திரன் பறந்து சென்று 'கிணிங், கிணிங்' என்று அவள் வீட்டு வாயிலிலே மணியோசை எழுப்பி ஞன்.

அவன் எதிர்பார்த்த 'பபா' வரவில்லை. தாயும் வரவில்லை. மாருக அவளின் கணவன், சந்திரன் கொண்டு சென்ற விலாசத்திற்கு உண்மையாகவே உரி யவன் வந்து நின்ருன்.

சிரிப்பே அறியாத கடுகடு என்ற முகம், காலத் திற்கு முன்பே நரைதட்டிப்போன தலையும், சோர்வும், களைப்பும் நிறைந்த உடலுமாக வந்து அவன் நின்ற பொழுது சந்திரனுக்குப் பேசவே தோன்றவில்லை. தாங்கமுடியாத அதிர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு.

நளாயினி சாவித்திரி கதைகள் அவனுக்குத் தெரி யாதனவல்ல. ஆனல், இன்று உண்மையிலேயே ஒரு நளாயினியின் கதைதான் தனக்குமுன் திரையில்லா நாடகமாக நடப்பது போன்ற எண்ணம் ஏற்படுவதி னின்றும் அவனல் விலகிக் கொள்ளக்கூடவில்லை.

வந்தவன் கடிதத்தைப் பறிக்காத குறையாக வாங் கிஞன். கடித விலாசத்தைப் பார்த்தபொழுது அவனது முகம் ஏன் இப்படி மலர்கிறது? கடிதத்தைப் பிரிப்ப தற்கு இவ்வளவு அவசரம் ஏன்? பதற்றம் ஏன்?

சந்திரன் தன் வாழ்நாளிலே செய்யாத ஓர் அரு வருக்கத்தக்க செயலை அந்தக் கணத்திலே செய்துவிட் டான். வீட்டுக்குடையவன் திரும்பிச் சென்றபொழுது விரித்துச் சென்ற அந்தக் கடிதத்தின் தொடக்கத்தை அவனது கண்கள் கண்டுவிட்டன.

அதில்...

'என் ஆருயிர்க் காதல',

என்று எழுதப் பெற்றிருந்தது.

## ( 4 )

சந்திரன் ஒன்றும் குழந்தையல்ல. நாலும் மூன்றும் ஏழு என்று கூட்டிப் பார்க்க அவனுக்கு யாரும் சொல்லித் தரவேண்டியதில்லை. அந்தப் பெண்ணின் கணவன் '' கடிதத்தை வேறொருவரிடமும் கொடுக்க வேண்டாம். என்னிடமேதான் தர வேண்டும் '' என்று சொன்னதன் அர்த்தத்தை அவனால் புரிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது என்று சொல்வது, சந்திரனுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

'அட பாவி! தெய்வம்போல ஒரு பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு பேயின் பின்னால் அலைகிறாயே?' என்று குமுறிக் கதறி ஓலமிட அவனது உதடுகளும், உள்ளமும் விரைந்தது உண்மைதான். 'அந்த இடத்திலேயே அந்தப் பாதகனின் கழுத்தை முறித்துப் போட்டால் என்ன?' என்று அவனது கைகள் துருதுருத்ததும் உண்மைதான். ஆனால், அந்த உணர்ச்சிகளை அவன் பலவந்தமாக அடக்கியதும் ஒரு மகத்தான சாதனையே.

'இத்தனைக்கும் அவன் ஓர் ஆசிரியர்' என்றபொழுது ஆசிரியர் சமூகத்திலேயே சந்திரனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. சம்பள உயர்வுக்காகவும், இட மாற்றத்திற்காகவும் போராடிக்கொண்டிருக்கும் சுயநலக் கும்பல்தாம் ஆசிரியர்களென்றும், கடமையுணர்ச்சியற்ற ஏமாற்றுக்காரர்கள்தாம் அவர்களென்றும் அவ்வப் போது கேட்டும் கண்டும் வந்தவற்றை உண்மையல்ல என்று ஒதுக்க முயன்று வந்த அவனுக்குக் கண் முன்னால் காணுகின்ற உண்மை பயங்கரமாகத் தோற்றியதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஒரு காலத்தில் தெய்வங்கள் போல விளங்கி மாணவர் உள்ளங்களிலே அறிவொளி யேற்றிய ஆசிரியர் கூட்டத்தில் இன்று புல்லுருவிகள் தாம் பெருகிவிட்டனர்' என்பதற்கு அவனது மானச சகோதரியின் கணவன் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினான்.

அதைச் சந்திரனுற் சகிக்கக்கூடவில்லை. அநாதரவாக நிற்கப்போகும் அந்தப் பெண்ணையும் அவளது பாலையும் நினைத்துக்கொண்டபொழுது அவன் நெஞ்சு குருதிக் கண்ணீர் வடித்தது.

## (5)

சந்திரன் தீர்மானித்துவிட்டான். தன் 'சகோதரி'யின் வாழ்வைப் பாதிக்கும் எந்தச் தீயசக்திகளையும் அழிக்க அவன் கங்கணங்கட்டிக் கொண்டான். ஆனுல் அது எவ்வளவு பயங்கரமான விஷயம்! நினைக்கவே அவன் நெஞ்சு நடுங்கியது.

எந்தத் தொழிலால் அவனது வயிறு கழுவப்படுகின்றதோ, எந்தத் தொழிலின் புனிதத்தையும், சிறப்பையும் பாதுகாக்க அவன் தன் சகதொழிலாளரோடு போராட்டம் நடத்தி வருகின்ருனே அந்தத் தொழிலுக்கே கறை ஏற்படுத்த அவன் துணிந்துவிட்டான்.

கொழும்பிலிருந்து அவன் 'சகோதரி'க்குச் சக்களத்தியாக மாறிவிட்ட யாரோ ஒருத்தியின் கடிதங்களை அந்தக் கடிதத்தின் விலாசதாரர் அடைய முடியாத வகையைக் கையாள அவன் தீர்மானித்துச் செயற்படவும் தொடங்கியிருந்தான்.

விடுமுறைக் காலத்தில் கொழும்புக்காரி எழுதிய இரண்டாவது கடிதம் சந்திரன் கையில் கிடைத்ததும் அவன் அதை உடைத்து வாசித்து...

அது கடிதமா? ஏதோ ஒரு சுவை நிறைந்த நாவலின் எழுச்சி நிறைந்த அத்தியாயம்போல அந்தச் சிறுக்கி என்னவெல்லாமோ எழுதியிருந்தாள். தன் காதலுக்குரியவன் ஒரு குழந்தைக்குத் தந்தை என்பதையும் ஒரு பெண்ணின் கணவன் என்பதையும் அறிந்திருந்துங்கூட அவற்றின் புனிதத்தை, முக்கியத்தைக் குப்பையில் வீசிவிடுவதுபோல வீசிவிட்டுத் தனது அன்

யையும், ஆசையையும் எல்லாம் சொல்லோவியமாக அவள் வடித்திருந்தாள்.

சந்திரனுடைய கையை அந்தக் கடிதம் நெருப்பாய்ச் சுட்டது. அடுத்த கணம் அது உண்மையான நெருப்பையே தஞ்சம் அடைந்து தகனமாயிற்று!

அன்று சம்பள நாள். சந்திரன் தனது சம்பளப் பணத்தைப் பெற்றபொழுது அவன் கைகள் நடுங்கின. உள்ளம் நார் நாராய்க் கிழிந்து அவனைச் சித்திரவதை செய்தது. கடமை என்ற நூற்பாலம் அறுந்துவிட அதலபாதாளத்தில் தலைகீழாகத் தான் விழுந்துகொண்டிருப்பது போன்ற உணர்ச்சியிலே அவன் கலகலத்துப் போனான்.

அடுத்த நாள் 'சகோதரி'யின் கணவனுக்கு அரசாங்கக் கடிதம் ஒன்றை அவன் கொண்டு சென்றான். சம்பளப் பணமாய் இருக்கலாம்.

அவனே அதைத் திறந்துகூடப் பார்க்காமல் 'வேறு கடிதம் இல்லையா?' என்று ஆவலும் வேகமும் விழிகளிலே சுடர்விடச் சந்திரனைக் கேட்டான். சந்திரன் பதில் சொல்லவில்லை. கையை விரித்துவிட்டுத் திரும்பி வேகமாகச் சைக்கிள் பெடலை உதைத்தான்.

ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்ற ஆசிரியர் தனது குழந்தையின் முதுகிலே 'மொத்து மொத்து' என்று அகாரணமாக அடித்த சப்தமும் குழந்தையின் அலறலும் அவனுக்குக் கேட்கவேயில்லை.

## (6)

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பல கடிதங்கள் வந்தன, கொழும்புக்காரியிடமிருந்து. அத்தனையும் 'தூய' காதலின் பரிசுகளையும், காணிக்கைகளையும், கண்ணீர்த் துளிகளையும் ஏந்தி வந்தன. தன்னால் இனி

யும் பொறுக்க முடியாதென்றும் தன் காதலன் அவனது விவாகத் தளையை அறுத்துக்கொண்டு தன்னிடமே நிரந்தரமாக வந்துவிடும் நாள் எப்பொழுது, என்றும் அவள் கேட்டுக்கேட்டு எழுதினுள்,

சந்திரன் கடிதத்திற்குரியவனது முகத்திலே ஏமாற்றக் கரியை அள்ளிப் பூசி அவனை ஏங்க வைத்துவிட்டுக் கிரமமாகக் கடித தகனம் செய்துகொண்டிருந்தான்.

சாடைமாடையாக ஆசிரியரது வீட்டின் அமைதியின்மையும், அவனது குரூரமான நடத்தைகளும் சந்திரனுக்குத் தெரியவந்தன. ஆனாலும், சந்திரன் பயங்கர பொறுமையோடு இதயச் சித்திரவதையையுந் தாங்கிக்கொண்டு தனது தகன காரியத்தை விடாது நடத்தியே வந்தான்.

அன்று சந்திரனது இரண்டாவது திட்டம் செயற்படும் நாள். என்றும் இல்லாதது போல ''மாஸ்டர்! நீங்கள் எதிர்பார்த்த கடிதம் இதோ'' என்று அவன் ஆசிரியரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தபொழுது வாயெல்லாம் பல்லாக முத்திரையின் சீலைக்கூடக் கவனிக்காது, ஆசிரியர் கடிதத்தை உடைத்த காட்சியைச் சந்திரன் இரசித்தபடி தனது உற்சாகத்தை மணி அடிப்பதில் காட்டியபடி விரைந்தான்.

'முட்டாள்! நான் கொழும்புக்காரியின் கையெழுத்திலே எழுதிய கடிதத்தை உண்மையென்று நம்பிவிட்டான். எல்லாம் நன்மைக்கே. இனி அந்தச் சாகசக்காரியை ஐயா திரும்பியும் பார்க்கமாட்டார். ''என்னை மறந்துவிடுங்கள். நீங்கள் விடுமுறை கழிந்து திரும்பும் போது நான் ஸ்ரீமதி ஆக இருப்பேன்'' என்று இருக்கும் போது வேறு என்னதான் செய்வது?

சந்திரன் சிரித்தபடியே சைக்கிளில் ஒருநாளுமில்லாத பெருநாளாய் விரைந்து சென்ற காட்சி பலருக்கும் வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருந்தது.

## (7)

அன்று வெள்ளிக்கிழமை. நல்லூர் முருகன் சந்நிதியில் சந்திரனது 'சகோதரி'யும் கணவனும் 'பபா'வும் நின்று கும்பிட்டவண்ணம் இருந்தனர். கண்களை மூடிப் பக்திபரவசனாய் நின்ற ஆசிரியரின் கன்னங்களிலே வழிந்த நீரில் அவனது குடும்பத்தின் நல்வாழ்வு மலர்வதைக் கண்ட சந்திரன் முருகனை நோக்கிப் பின்வருமாறு வேண்டிக்கொண்டான்.

''நல்லூரானே! எனது கடமையைப் புறக்கணித்து எனது மானச சகோதரியின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தேன். ஆனால், இனியும் என் மனச்சாட்சியை ஏமாற்றமுடியாது. நான் செய்த பெரும் பிழைக்காக என்னையே தண்டித்துக் கொண்டேன். நான் இனித் தபாற்காரச் சாமியாரல்ல, வெறுஞ் சாமியார்தான்.''

(வீரகேசரி — நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.) 1966-8-30.

# 2

## தரிசனாமிர்தம்

கோயிலுக்கு முன்னால் 'மேஸிடஸ் பென்ஸ்' கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து உடம்பெல்லாம் வைரமும், முத்தும், மணிகளும், பொன்னுமாய் இழைத்தபடி பெனாரஸ் பட்டுச் சருகைப் புடைவை உடலிலே சரசரக்க ஒரு பெண் இறங்கினாள். அவள் கைகளிலே துவாய்க்குள் சுருண்டபடி அவளின் 'வாராது வந்த மாமணி' கிடந்து, அந்தத் தாயுள்ளத்திலே கனிவையும் பெருமிதத்தையும், பூரிப்பையும் அளித்த படியிருந்தது.

கடந்த பதினைந்தாண்டுகளாய் உள்ளம் ஒடுங்க, உணர்வொடுங்க, தான் மலடி என்ற எண்ணமே தன்னைக் கொல்லாது கொல்லச் சித்திரவதைப்பட்டு இக் கோயிலின் வாயிலிலே வந்து நின்று இரத்தக் கண்ணீர் விட்டவள் அவள்.

அவளின் பிரார்த்தனை நிறைவேறிவிட்டது. இன்று அவள் மலடியல்லள். இறைவன் அவளின் வயிற்றை வாய்க்கச் செய்து, உலகின் முன் தலை நிமிர்ந்து 'தாய்' எனத் தருக்கி நடக்கவைத்துவிட்டார். அந்த நன்றியைச் செலுத்தவே அவள் கோயிலுக்கு வந்திருக்கிறாள்.

கோயிலின் கண்டாமணி கம்பீர நாதம் எழுப்புகிறது. இறைவன் தேவிசமேதராய் ஒளிவெள்ளத்துள் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான். பூசகர் பஞ்சாராத்தி காட்டுகிறார். மங்கல வாத்தியங்கள், சங்கு சேமக்கல ஒலிகளினிடையே, 'சிவசிவ', 'அரஹர' முதலாம் கோஷங்களும் எழுகின்றன.

தாய், தன் செல்வத்தைச் சந்நிதானத்திலே கிடத்திவிட்டுத் தலையின்மேல் கூப்பிய கரத்தளாய், "தெய்வமே! எனது பாக்கியம் எனக்கு என்றைக்கும் நிலைக்க அருள் செய்வாய்," என்று வேண்டிக்கொள்கிறாள். அவளின் கண்கள் பனிக்கின்றன.

கோயிற் பூசை யாவும் முடிந்து அந்தத் தாய் உட்படப் பக்தகோடிகள் சிறிது சிறிதாகக் கோயிலை நீங்கிச் செல்கின்றனர். அந்த வேளையில் ஒருத்தி, கையில் ஒரு குழந்தையும், கையிற் பிடித்த ஒரு குழந்தையும், அதிலும் சற்றுச் சற்றுப் பெரியவையாய்ப் பின்னால் வந்துகொண்டிருக்கும் ஐந்து குழந்தைகளுமாக அந்தக் கோயில் வாயிலுக்கு வந்து சேர்கிறாள். அவளுடைய வயிற்றுப் பாகம் புடைத்திருப்பதை நோக்க அவளின் தாய்மைச் சேவை மேலும் தொடர்ந்துகொண்டிருப்பது துலாம்பரமாய்த் தெரிகிறது. அவளின் உடம்பில் ஒரு நகைகூட இல்லை. கழுத்தில் மாத்திரம் ஒரு தாலிக் கயிறு. குழந்தைகள் யாவும் பற்றாமை, போஷாக்குக் குறைவு என்பவற்றால் பீடிக்கப்பட்டுப் பஞ்சைகளாய் நிற்கின்றன.

அந்த ஏழைத் தாய் தன் கைக் குழந்தையைச் சந்நிதானத்திலே கிடத்திவிட்டுக் கதறி அழுகிறாள்: "ஆண்டவனே! உனது சோதனைக்கு முடிவேயில்லையா? இந்த ஏழைக்கு ஏன் இப்படி அள்ளி அள்ளிக் கொடுக்கிறாய்? நான் இவற்றை வைத்துக்கொண்டு குடிகாரக் கணவனோடு படும்பாடு நீ அறியாததா? என்வரையிலே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றும் பயனளிக்கவில்லை. நீ கண் விழித்து இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தால் உண்டு." என்று அவள் கல்லுங் கரையுமாறு வேண்டிக்கொள்கிறாள்.

## (2)

வருடம் ஒன்று உருண்டோடிவிடுகிறது. மீண்டும் அதே கோயில் வாயிலில் 'பென்ஸ்' காரிலிருந்து

சீமாட்டி இறங்குகிருள். அவளின் கைகளைக் குழந்தையின் ரோஜா வண்ண மெல்லுடல் அணி செய்யவில்லை. நகைகளோடு சோகத்தையும் தாங்கும் சுமைதாங்கியாய் இறைவனின் சந்நிதானத்தை அடைகிருள்.

வழக்கம்போல இறைவன் அம்மை சமேதராய் ஒளி வெள்ளத்தில் அமர்ந்திருக்கிருன். மங்கல வாத்தியங்களும், சங்கு சேமக்கலங்களும் ஒலிக்க, பூசகர் பஞ்சாராத்தி காட்டுகிருர்.

சீமாட்டி கைகளைச் சிரமேற்கூப்பிக் கதறுகின்ருள்.

வழக்கமான நாகரிகப் போலித்தனங்கள், செல்வத்தின் அர்த்தமற்ற போக்குக்களெல்லாம் தாய்ப் பாசத்திலே அமுங்கிப் போய்விட, அவளின் உள்ளம் உதடுகளிலே நின்று பேசுகிறது, ''கடவுளே, உனக்குக் கல் மனசு. இரக்கமே இன்னதென அறியாதவன் நீ. இல்லாவிடில் என் செல்வத்தை நான்கு மாதங்களிலேயே என்னிடமிருந்து பறித்துவிட்டாய். பாலும், தேனும், பழமும் இளநீருங் கொண்டு உன்னை அபிஷேகம் செய்தேனே? கந்தசஷ்டி முதலான கடும் விரதங்களையெல்லாம் தப்பாது பிடித்து உன்னை எப்பொழுதும் வணங்கித் துதித்துவந்தேனே? இவற்றிற்கெல்லாம் கைம்மாறு இதுதாஞ? பிள்ளையில்லாப் பெரும்பாவியாய் நான் வாழ்நாளெல்லாம் வருந்திச் சாகவேண்டுமா?''

கோயில் ஓசைகள் ஒடுங்குகின்றன. பக்தகோடிகள் சீமாட்டி உட்படக் கோயிலை நீங்கிச் செல்கின்றனர். இப்பொழுது அந்த ஏழைத் தாய் அங்கு வருகிருள். பழைய காட்சியில் இப்பொழுது ஒரு சிறு மாற்றம்; முன்னர் அவளின் கைகளிலே கிடந்த குழந்தை அவளின் சேலையைப் பிடித்திருக்கிறது. சென்ற ஆண்டு வயிற்றிலிருந்தது, கைகளை அலங்கரிக்கிறது. முன்பு கையைப் பிடித்துவந்த குழந்தை தாயைத் தொடரும் பிள்ளைக் கூட்டத்திலே சேரும் பதவி உயர்வினைப் பெற்றிருக்கிறது. மாற்றம் இல்லாதது அவள் வயிறு ஒன்றுதான்! அது சென்ற வருடம் போலவே...

குழந்தையைச் சந்நிதியிற் கிடத்தியபடி கூப்பிய கரத்தளாய் நின்று அவள் அழுகிருள். "அப்பனே! உன் விளையாட்டிற்கு முடிவேயில்லையா? சின்னஞ் சிறு குழந்தைகளுடன் வயிற்றிற்கு வழியின்றி நான்படும் அல்லல்கள் நீ அறியாதவையா? என் கண்களைப் பார். இந்தச் சிறுசுகள் ஒன்றுமாறி ஒன்று கதறி அழ, இரவெல்லாம் கண்ணே மூடாமல் இருந்து பஞ்சடைந்து விட்டன. தலை சுற்றுகிறது. உடலில் ஒரு சொட்டு இரத்தமில்லை. இன்னும் என்னை வருத்துவதால் நீ காணும் பயன் என்ன?"

சந்நிதானத்தின் உள்ளே......

அப்பன் சிரிக்கிருன். அன்னைக்குக் கோபம் கோபமாய் வருகிறது. "ஏன் சிரிக்கிறீர்கள்? உங்கள் வீரந் தான் சற்றுமுன் தெரிந்ததே! ஒருத்தி, வேண்டும், வேண்டும் என்று வேண்டி நிற்கக் கொடுத்துப் பறிக்கிறீர்கள். மற்றவள் வேண்டாம், வேண்டாம் என, அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள். அந்தப் பணக்காரப் பெண் சொன்னது உண்மைதான். உங்களுக்குக் கல் மனசு" என்று அவள் பொரிந்து தள்ளுகிருள்.

இறைவன் மீண்டும் சிரிக்கிருன். "தேவி! உனக்குமா விளங்கவில்லை? பல பகுதிகள் பல விடைகள் கொண்ட ஒரு கணக்கைத் தயாரித்து, உலகத்து மக்களெல்லாம் செய்து விடைகாணும்படி கொடுத்திருக்கிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியைச் செய்து முடித்து விட்டுக் கணக்கையே செய்து விட்டதாகக் கொக்கரிக்கிருர்கள். நான் "அந்தக் கணக்கு முடியவில்லை. இன்னும் பல விடைகள் உள்ளன. செய்து பாருங்கள்" என்ருல் அவர்களுக்குக் கோபமாய் வந்து விடுகிறது. நான் என்ன செய்வேன்?

"அப்படியானுல் ஒருவருமே முற்ருக உங்கள் கணக்கைச் செய்ய முடியாதோ?"

"ஏன் செய்ய முடியாது? அப்படிச் செய்து முடித்து விட்டால் அவர்கள் உலகத்தில் கிடந்து வருந்தாமல் என் பாதங்களை வந்து அடைந்து விடுவார்கள்......"

"அதுவரை அவர்கள் கதி?"

"இப்பொழுது இந்தப் பெண்கள் இருவரைப் பார்த்தாயே? இவர்களின் கதிதான் அவர்களுக்கு எல்லாம். செய்து முடிக்கும்வரை என்னைத் திட்டியபடியே மீண்டும் மீண்டும் கணக்கைச் செய்ய வேண்டியது தான்!"

அம்மை மௌனமானாள்.

(வீரகேசரி 1968-12-24)

# 3

கடல் கரையை முத்தமிடுகின்ற இடத்திலே, கீரிமலைச் சுடலையிலே அந்தச் சடலம் எரிந்து கொண்டிருக்கிறது......

எரிகிறது...... தீக்கொழுந்துகள் வடவைக் கனலாகி, காற்றின் பிடியிலே இருந்து திணறிக்கொண்டு வெளிப்பட்டுக் கடலையே குடித்துவிட முயல்வதுபோல அந்தத் திசையிலே திரும்பிச் சுவாலை கக்குகின்றன.

நீரின் எல்லையிலே நெருப்பு...... நெருப்பின் எல்லையிலே நீர்......... மனிதத்துவம் கடலைப்போலப் பொங்கி ஆர்ப்பரித்துக் கரையிலே மோதி மோதி அடங்கி அழிந்துபோய்ப் பிணக்கோலத்திலே சிதை ஏறி எரிந்து போகிறது என்பதற்கு நிதர்சன விளக்கம்!

தொடுவானத்திலே நெருப்புக்கோளம் ஒன்று தண்ணீரினுள்ளே அமுங்கிக்கொண்டிருக்கிறது. சிதறிப்போன சிறுச்சிறு சுடர்கள் நீலவானத்தை எரித்து, ஜுவாலை கிளப்பிக் கடலிலே பிரதிவிம்பித்துப் பொன் வண்ணம் காட்டுகின்றன.

சனசந்தடி அடங்கிப்போன ஏகாந்தப் பெருவெளியிலே, சுடலைக்கு நூறுயார் தூரத்திலே தென்னந்தோப்புக்குள் நின்றுகொண்டு சிதையை வைத்தகண் வாங்காது பார்க்கிறேன்.

அவன் எரிகிறான்...... அவனா? அதுவா? அவனாக இருந்த அதுவா? அல்லது அவனும், 'அவன்' என்று சுட்டுதற்குக் காரணமான அதுவும் இரண்டுமே நெருப்போடு நெருப்பாய், சாம்பரோடு சாம்பராய்.........

கடல்

சிரிக்கிறேன்......... முன்பொருகால் எரிகின்ற சிதையின் முன்னால் நின்றுகொண்டு அவன் செய்த தத்துவ விசாரத்தைத்தான் நானும் செய்வதாகப் பாவனை பண்ணுகிறேனோ?

அவன் பேசுகிறான்......

"ஆழம் நிறைந்த இந்தக் கடலிலே ஒரு குமிழியாக மிதந்து எட்டமுடியாத கனவுலோகங்களையெல்லாம் நான் கண்டுவரப் போகிறேன். அலைகளிலே ஊஞ்சல் ஆடுவதுபோல அங்கும், இங்கும் ஆடிக்கொண்டு முடிவேயில்லாமல் மேலே மேலே சென்றுகொண்டிருக்கப் போகிறேன். ஆஹா! அது எவ்வளவு நல்ல காட்சியாய் இருக்கும்!"

ஆ...... அதோ...... அந்த நெருப்பிலேயிருந்து ஓர் அம்பு போலக் கிளம்பி, கடலுக்குள்ளே பாய்ந்து நீரைக் கிழித்துக்கொண்டு அவன் போகிறான்...... நீந்துகிறான்...... சுழி ஓடுகிறான்......

என்ன? மனப்பிராந்தியா? அல்லது உண்மையாகவே அவன்......

கிள்ளிப் பார்த்துக்கொண்டு நிமிர்கிறேன். கால்கள் தள்ளாடுகின்றன. பீதி கண்களில் சுழல்கிறது. உடம்பே குடங்கிப்போய் இல்லை என்று ஆகி விடுவதுபோல......

நிற்கிறேன். காற்றிலே சரிந்து தள்ளாடுவது போலச் சரிந்து வெடவெடவென்று நடுங்கியபடி தடுமாறிக்கொண்டு நிற்கிறேன்.

மனக்கடலிலே நினைவுகள் குமிழியிடுகின்றன.

## (2)

நெஞ்சை நிமிர்த்தியபடி போர்வீரன் ஒருவனுடைய கம்பீரத்துடன் அவன் முன்னால் சென்று கொண்டிருக்கிறான். சதை கொழுவிய அவனது கால்கள் மணலி

னுள்ளே சதக், சதக்கென்று ஆழ்ந்து, பிறகு வெளி யேறுவது பார்க்க வேடிக்கையாக இருக்கிறது. சிரித்துக் கொண்டே பின்தொடர்கிறேன்.

அவனுடைய பிடரி மயிர் சிங்கத்தினது போலச் சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது. கருங்காலியிலே செதுக் கிய உடலும், உடுக்குப்போன்று சிறுத்த இடையும், இராஜநாகத்தின் படத்தைப் போல அகன்ற மார்பும், ஆடுகின்ற குதிரைச் சதையும்.........

"கணேசா! நீ அபூர்வப் பிறவியடா" என்று அந்தச் சிறிய வயதிலே என்னைச் சொல்ல வைக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் அவனிலே பயம், மதிப்பு, பாசம் என்ற அத்தனையும் கலந்த ஒருவகை அன்பைச் செலுத்தினேன் என்பதை மறுக்கமுடியாது.

இரண்டு பேருக்கும் கிட்டத்தட்ட ஒரேவயது. பத்துக் கும், பதினொன்றிற்கும் இடையிலே இருக்கலாம்.

'சதக் ... சதக்' அவன் மணலைக் கிழித்துக் கொண்டு போகிறான் ... நான் பின் தொடர்கிறேன்.

திடீரென்று நின்றவன் கையிலே வைத்திருந்த புத்த கத்தைச் சுழற்றிக் கடலிலே வீசுகிறான். அது காற்றிலே இதழ்விரித்து ஒரு வெள்ளைத் தாமரைப் பூப்போல மிதக்கிறது.

கலகலவென்று சிரிக்கிறான். நான் நடுங்குகிறேன். "டேய்! கணேசா! பள்ளிப் புத்தகமடா. எறிந்து விட்டாயே! உன் ஐயா அடிப்பாரேயடா!" பயந்து பயந்துதான் இப்படிச் சொல்கிறேன்.

"அப்படியா? அடிக்கட்டுமே! எனக்குப் பயமா? இன்று பள்ளிக்கூடம்போகாமல் கடற்கரைக்கு வந்தேன். அடித்தாரோ? அவ்வளவுதான்! ஒவ்வொருநாளும் ஒளித்தொளித்து இங்கே வருவேன். மிஞ்சினால் கடலுக்கே என்னைக் கொடுத்து விடுவேன். அதுதான் என் அம்மா!"

கடைசி வார்த்தைகளைச் சொல்லும்போது உலகத்தின் பாசம், கனிவெல்லாம் அவனது கண்களிலே தேங்கி நிற்க அவன் கடலையே வெறித்து நோக்குகிறான். அந்த விழிகளிலே வெட்டி வெட்டி ஒளிவீசும் மின்னற்கீற்று என் கண்களைக் கூச வைக்கிறது. குத்தி இழுக்கின்ற அந்தக் குத்தீட்டி நாசியையும், தடித்துப் பருத்த உதடுகளையும் உற்றுநோக்குகையில், எனக்கு வாய் அடைத்துப் போகிறது.

அவன் வழி நடத்தவும், நான் மறுபேச்சின்றி அவனைப் பின்பற்றவும் என்றே கடவுளால் படைக்கப்பட்டிருக்கிறோம், என்று நினைக்காதிருக்க என்னால் கூடவில்லை.

இந்த உணர்ச்சி உண்டானதும், எனது புத்தகங்களை மணலிலே புதைத்து அதற்கு மேல் கல் ஒன்றை அடையாளம் வைத்துவிட்டு அவனுக்குப் பின்னால் போகிறேன் ... போய்க்கொண்டே இருக்கிறேன்.

"சதக், சதக்" கால்கள் மணலிலே தாழ்ந்து மிதந்து செல்கின்றன. சிறிது நேரத்தில் கரை ஒடுங்கிப் போகத் தண்ணீரில் இறங்கி நடக்கிறோம். தண்ணீர் பட்டுப்பட்டுத் தேய்ந்துபோய் வழுக்கை பற்றிய கற்களிலே இலாவகமாக அவன் நடந்து சென்றபொழுது, அவனைத் தொடர்ந்து செல்வது சற்றுக் கடினமாகவே இருக்கிறது.

"கடந்த இரவு ஒரு கனவு கண்டேன்: கதாகால க்ஷேபத்தில், விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிப் பாகவதர் சொன்னாரே? அந்த அவதாரங்களைப் போலவே நானும் பல பிறவிகளை எடுப்பது போல இருந்தது. எனக்கு முன்னால் எல்லையில்லாத கடல் விரிந்து கிடப்பது போலவும், நான் திடீர் என்று மீனாகவும், நண்டாகவும், சுறுவாகவும், திமிங்கிலமாகவும் மாறி மாறி அதிலே மிதந்து செல்வது போலவும், தோற்றங்கள் உண்டாயின."

"இதிலே ஒரு விசேடத்தைப் பார்த்தாயா? வேறு வேறான எனது பிறவிகளெல்லாம் கடலிலேயே உண்

டாகின்றன. இதிலிருந்து என்ன தெரிகிறது? நான் இந்த மண்ணிற்கு உரியவன் அல்லவென்றும், கடல்தான் எனக்கு உரியதென்றும் தோற்றவில்லையா?''

சில மணித்தியாலங்களுக்கு முன்னல் வரும் வழியிலே அவன் சொன்னவை எல்லாம் என் மனத்திலே எதிரொலிக்கின்றன. 'இதெல்லாம் என்ன? இப்படியெல்லாம் இவன் ஏன் பேசுகின்ருன்?'

என்னுடைய சின்னஞ்சிறிய மூளைக்கு ஒன்றுமே விளங்கவில்லை; விளங்கவேயில்லை. கண்ணைக்கட்டிக் காட்டிலே விட்டதுபோல இருக்கிறது. ஆனுல்......

வழிநடத்துவது அவன் பொறுப்பு. பின் செல்வது என் கடமை.

நெளிந்தும் வளைந்தும் சுழியிட்டுப் புதுப்புதுக் கோலங்களைக் காட்டி, உடனுக்குடன் அழித்து......... தண்ணீர் விலகி வழி விடுகிறது.

போய்க்கொண்டே இருக்கிருேம்.

## (3)

சுடலை வந்துவிட்டது. நேரம் மத்தியானம் பன்னிரண்டுமணி. எனக்குத் திக்கென்றது. நெஞ்சின் அடிப்பே நின்றுவிட்டதுபோல இருக்கிறது.

மத்தியான வேளையிலே சுடலையில் பேய் உலாவுமாமே? பயத்திலே காலும் ஓடவில்லை! கையும் ஓடவில்லை!

''டேய்!'' கணேசன் வந்து தோளிலே தட்டி ஆதரவோடு கூட்டிக்கொண்டு போய்ச் சுடலை மத்தியிலே இருத்துகிருன்.

அப்பொழுதுதான் சுடலையிலே பிணம் ஒன்று எரிந்து முடிந்து நீறுபூத்துக் கிடக்கிறது. அவன் ஓடிச்சென்று, தன் மாமாவின் கடையிலே களவெடுத்து வந்த சுருட்

டொன்றை அதிலே பற்றிக்கொண்டு வருகிறுன். சுருட்டுக்கும் வாய்க்குமாகப் புகை முக்குளிக்கிறது.

''அடப் பாவிப் பயலே! என்னடா செய்கிறுய்? நீ பேயா பிசாசா?'' என்று கத்தவேண்டும் என்று நினேக்கிறேன். வாயையுந் திறந்துவிட்டேன். சப்தம் வெளிப்பட்டால்தானே? நாக்கு அண்ணத்தில் ஒட்டிக் கொள்கிறது.

சுடலேப் பக்கத்திலே சிதறிக் கிடந்த எலும்புகளேச் சேகரித்தும், கீழே கிடந்த இளநீர்க் குரும்பைகளே எடுத்துப் பக்கத்திலே உள்ள கிணற்றிலே எறிந்தும் அவன் தன்னே மறந்த லயத்திலே ஆடிக் களிக்கையில்......

நான் விக்கித்துப்போய் பிணத்தோடு பிணமாய்க் கிறங்கிய நிலேயில் சுடலே மடத்திலே அமர்ந்திருக்கிறேன்.

''டேய்! கோழை! ஏனடா பயப்படுகிறுய்? ஒரு நாளேக்கு நாங்களும் இப்படித்தானே? வாடா.''

சுருட்டை வீசிவிட்டுக் காறி உமிழ்ந்த வண்ணம் அவன் என்னே அழைக்கிறுன். நான் எழுந்து அவனேத் தொடர்கிறேன்.

## (4)

தண்ணீரிலும் கரையிலுமாக மாறிமாறி நடந்து செல்கிறும்.

பாறைகள் தெரிகின்றன. முடவனேப்போலும், நொண்டியைப்போலும் முண்டு, முடிச்சுக்களோடு அவை சர்வ அவலட்சணங்களாய்க் காட்சி தருகின்றன. கன்னங் கரிய பேய்க் கூட்டங்கள் தங்கள் விழிக்குகைகளின் மூலம் என்னே முறைத்துப் பார்ப்பதுபோல இருக்கிறது.

ஆங்காங்கு மணலிலே பாம்புகளும், நண்டுகளும் ஊர்ந்து சென்ற சுவடுகள்......

''இனி என்றைக்குமே இவனேடு வரக்கூடாது. பள்ளிக்கூடத்துக்குக் கள்ளம் போடக்கூடாது. கடவுளே! இந்த ஒரு முறை மாத்திரம் என்னைக் காப்பாற்றிவிடு'' என்று பயத்திஞல் பேரிகைபோல அதிர்ந்து கொண்டிருக்கும் நெஞ்சு, கடவுளை நினைத்து ஓலமிட்டுக் கதறுகையில்......

கணேசன், கயிற்றை அறுத்துவிட்ட கன்றுக்குட்டி போலப் பாறையிலும், கற்களிலும் குதித்துக் குதித்து ஓடுகிருன்; மேலே மேலே ஏறிக் குன்றின் உச்சிக்கே போய்விடுகிருன்.

இனிப் பயப்படக்கூட இயக்கம் இல்லாதவனுய் அவனை நோக்குகிறேன்.

''டேய்! மூர்த்தி! பாரடா. இந்தப் பாறையிலிருந்து குதித்துத் தண்ணீரிலே நீந்திக்கொண்டே போய், அதோ அந்த ஆகாயத்தை எட்டிப் பிடிக்கவேண்டும் என்று ஆசையாய் இருக்கிறதடா. பின்னேரங்களில் அங்கே சூரியன் வந்தால் அதைத் தொட்டுப் பார்த்து ஆனந்தப்படவேண்டும்போல இருக்கிறதடா. ஆகாயம் நான் கட்டியிருக்கும் வேட்டிபோல இருந்தால் அதைக் கிழித்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்த்து வந்து உனக்குச் சொல்லுவேன்.''

ஒரு கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, மறு கையைத் தொடுவானத்திற்கு எதிராக நீட்டி அவன் அந்தப் பாறையின் உச்சியிலே நிற்கையில், பயத்தால் அடைபட்டுப்போன என் காதுகள் கூடத் திறந்து கொள்கின்றன. அந்த வயதிலே, அந்தச் சூழ்நிலையிலே, அவன் சொன்னதை நம்பத்தான் வேண்டும் போல எனக்குத் தோற்றுகிறது. திறந்த வாய் மூடாது அவசமாகி அவனையே பார்த்து நிற்கிறேன்.

ஆ...... இது என்ன? கால்களினூடாக ஏதோ நொளு நொளுவென்று...... ''ஐயோ! பாம்......''

கணேசன் பாறை உச்சியிலேயிருந்து பட பட வென்று குதித்து ஓடி வருகிருன். கல்லைத் தூக்கி ஓடுகிற பாம்பின் தலையிலே ஒரே போடு......! பாம்பு வாயைப் பிளந்து விடுகிறது.

அதைத் தூக்கிச் சுழற்றியபடி அவன் என்னைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தபொழுது...... அதற்கு உயிர் இல்லை என்று தெரிந்துகொண்டும், உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு ஓடுகிறேன்...... அப்படி ஓடுகிறேன்.

நான் களைத்துச் சோர்ந்துபோய்க் கீழே சரிகையில், அவனுக்கு அநுதாபம் ஏற்பட்டுவிடுகிறதுபோலும்! பாம்பை எறிந்துவிட்டு எனக்கருகிலே வந்து என்னை அணைத்துக் கொள்கிருன். ''பயப்படாதே'' என்று ஆறுதல் சொல்கிருன்.

திரும்பி நடக்கிறோம்.

வழியிலே கிடந்த பலவர்ண இருல் ஓடுகள், கிளிஞ்சல்கள், இராவணன்மீசை என்று பலதும் பத்தும் அவனுடைய மடித்துக்கட்டிய வேட்டியைச் சரண் அடைகின்றன.

''பைத்தியக்காரா! ஏனடா இந்தக் குப்பைகளையெல்லாம் சேகரிக்கிருய்?'' என்று அவனைக் கேட்கலாமா என்று ஒருகணம் யோசித்துப் பிறகு மௌனமாகிறேன். கேட்டுத்தான் என்ன பயன்? தன் முட்டாள்தனத்தை விட்டுவிடப் போகிருனு? ''இவை கடல் அன்னை எனக்குத் தந்த அன்புப் பரிசில்களடா'' என்று சொல்லிப் பெருமைப்பட்டு இன்னும் இன்னும் பொறுக்கிச் சேகரிப்பான்.

என்ன பந்தமோ? என்ன பாசமோ?

அவனைப் பின் தொடர்கிறேன்.

## ( 5 )

கடலிலே கணேசன் இறங்குகிருன் என்ருல், அவனுக்குக் குஷி பிறந்துவிட்டது என்பதுதான் அதற்கு அர்த்தம்.

வேட்டியை அவிழ்த்து வைத்துவிட்டு முழு நிர்வாணமாகக் கடலிலே குதித்துக் குதித்துச் செல்கிருன்.

சுருமீனைப்போல, யந்திரப் படகைப்போல நீரைக் கிழித்துக் கொண்டு......

குரும்பையாகத் தெரிந்த தலை பனங்காய் அளவாகி விளாங்காய்ப் பரிமாணத்திற்குச் சிறுத்து எலுமிச்சங் காயளவு குறுகி......

கண்ணிற்கு மறைந்து விடுகிறது.

வருவானு? மாட்டானு?

தனிமையின் பயங்கரத்திலே அமிழ்ந்துபோய்க் குழந்தைபோல விக்கி விக்கிக் குமுறிக் குமுறி அழுகிறேன்.

கடல்போல நெஞ்சு குமுறுகிறது. ஆர்ப்பரிக்கிறது, அழுகிறது, விம்முகிறது.

என்ன செய்வேன்?

"என்னடா பயம்? மடையா! கடல் எனக்குத் தாயடா. அவள் ஒரு போதும் என்னை அழிக்க மாட்டாள். அழாதே வா, போவோம்."

அவசரம், அவசரமாக வேட்டியைக் கட்டியபடி அவன் இவ்வாறு சொல்கிருன். துடைக்கப்படாத அவனுடைய பிடரியிலிருந்து முத்து முத்தாக நீர்த்துளி சிந்துகிறது;

நடக்கிறோம்;

த— 4

கணேசன் தன் பேச்சைத் தொடர்கிறான்; "வாத்தியார் நீரரமகளிரின் கதையைச் சொன்னதிலிருந்து, நானும் அந்தச் சாதியார்போல ஆகிக் கடலினுள்ளேயே வாழவேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காக என் உயிரையும் இழக்கத் தயங்க மாட்டேன்; மண்ணிலே இருப்பதில் எனக்கு மகிழ்ச்சியில்லை."

"சில சமயங்களில் அரைகுறையாகக் கண்ணை மூடிக் கொண்டு நான் கனவு காணும்பொழுது கடல் தாய் "மகனே! வா" என்று அழைப்பது போல எனக்குத் தோற்றுவதுண்டு. இது எதில் போய் முடியுமோ? நான் அறியேன்."

அறுபது வயதுக் கிழவனைப் போலக் கண்கள் கிறங்க நடுங்கி, நடுங்கி அவன் இப்படியெல்லாம் சொன்ன பொழுது............

எனக்கு அவனைப் புரிவது போலவும் இருக்கிறது. புரியாதது போலவும் இருக்கிறது.

கடற்கரையிலே ஓவென்று இரைந்து கொண்டு சுழன்றடிக்கும் காற்றை வாயைத் திறந்து நிரப்பியபின், வாயை மூடினால் ஒன்றுமே வாய்க்குள் இல்லாத உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா? அதுபோலத்தான் இந்தச் சந்தேகமும், தெளிவும் என் நெஞ்சை நிரப்பியும் வெறுமையாக்கியும் விளையாடுகின்றன.

## (6)

நாள்கள் உருண்டோடுகின்றன.

இது நாள் வரை ஓலையால் வேயப்பட்டிருந்த சுடலை மடம் ஓடுகள் பெற்றுப் புதுமையிலே மினுமினுக்கிறது. அதற்குச் சிறிது தூரத்திலே இருந்த வீரசைவரது சமாதிகளின் எண்ணிக்கை மூன்றிலிருந்து ஐந்தாகக் கூடுகின்றன; மண்ணைத் தழுவிவிட்டு மீண்டு செல்லும் அலை

களைப் போலப் பிறப்பும், மரணமும் ஒன்றை ஒன்று தழுவி முயங்குகின்றன.

ஏகாந்த நிசாசரப் பெருவெளியாய் இருந்த கடற் கரையிலே அந்தியேட்டி மடமும், சில புதுக் கட்டடங் களும் புதுமையின் மெருகு குறையாது கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. பன்னிரண்டு வருடங்கள்!

நானும், கணேசனும் வளர்ந்து வாலிபராகி விடுகி ஹோம். சௌந்தர்ய மூர்த்தியாக, புருஷத்துவத்தின் உன்னத இலட்சியமாக நிமிர்ந்து நின்ற கணேச விரு க்ஷத்தின் பக்கத்திலே, ஒரு சிறு முருங்கை மரமாக நானும் நிற்கிறேன். இன்னமும் என்வரையிலே அவன் ஒரு வழிகாட்டிதான்.

அவனை நான் நேசிக்கிறேன். அவனுடைய ஏளனங் கள், பரிகாசங்கள் என்ற அனைத்தையுந் தாண்டி, எனது பாசக்கொடி அவனைச் சுற்றிப் படர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

எந்தக் கூட்டத்திலும் அவனுக்குத்தான் தலைமை. யாரும் அவனை மதிக்காமல் இருக்க முடியாது.

அவனுடைய கிண்டல்களும், கேலிகளும் சந்திரக் கதிர்கள் போலத் தண்மையாக இருப்பதில்லை. அவை காய்கதிர்ச் செல்வனின் கதிர்களுக்கு எவ்வகையிலும் குறையாத வெம்மை பொருந்தியவை.

அவனுடைய கேலிகள் ஈட்டிகளாய் வந்து பாயும் பொழுதும், அசடுவழியச் சிரிக்கலாமேயொழிய எதிர்த் துப் போர்க்கொடி தூக்க என்றைக்குமே முடியாது; அத்துணை சக்தி பொருந்தியவை அவை.

சில வேளைகளில் நண்பர்களோடு வம்பளந்தபடி கடற்கரையிலே இருப்பான். நான் சிறிது தாமதித்து அங்குப் போனாலோ தொலைந்தது. மற்றவர்களைத் தூண்டிவிட்டு, என்னை அலட்சியம் பண்ணச் செய்து, சம்பாஷணையிலே கலக்கவிடாமலே அலைக்கழிப்பான்,

அவனும் நண்பர்களும் தங்கள் பாட்டிலே பேசிக் கொண்டிருப்பார்கள். நான் என்ன சொன்னாலும் யாரிடமிருந்தும் பதில்வராது. இப்படிச் சில நிமிஷங்களல்ல; பல மணித்தியாலங்களுக்குக்கூட நான் அலட்சியப்படுத்தப்படுவதும் உண்டு.

ஆனால், அதற்காக அவனை வெறுப்பது மாத்திரம் என்னால் முடிவதில்லை. அவ்வளவு ஆழமாக அவன் தனது புருஷத்துவத்தை என் நெஞ்சிலே ஆழப் பதித்திருந்தான்.

## (7)

கடல்மீது அவன் கொண்டிருந்த அன்பு வெறியோ காலப்போக்கில் அவன் அளவையும் கடந்து விசுவரூபமெடுத்து அவனைத் தன்னுள் ஆக்கிரமிக்கலாயிற்று.

பல்கலைக் கழகக் கல்வியும், தத்துவ சாஸ்திரத்திலே பெற்ற சிறப்புப்பட்டமும் நெய்யாகி அவனது பாசாக்கினியைக் கொழுந்துவிட்டெரியத்தான் வைக்கின்றன.

கடற்கரைக் கிளிஞ்சல்கள் நிறைந்திருந்த அவன் அறையிலே, அலமாரிகள் பொங்கி வழியுமளவுக்குக் கடல்பற்றிய ஆராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும், துண்டுப் பிரசுரங்களும் அடைந்து கிடக்கின்றன.

கல்லூரி விட்டதும் ஓடோடி வருவான். மீதிப் பொழுதெல்லாம் சமுத்திர ஸ்நானத்திலும், கடலையே பார்த்திருக்கும் சிந்தனையிலும் கழியும். அது ஒரு யோகம்! எந்தச் சக்தியாலும் கலைக்க முடியாத ஏகாக்கிர சித்தயோகம்!

அடிவானமும், செங்கதிரும் பின்னிப்பிணைந்து கலந்து உறவாடும். கடலிலே குருதிச் செம்மையை நிழலாக விழுத்தி, அதைத் தழுவிச் சிலிர்ப்பான் வெய்யோன்.

சிறிது பொழுதில் வானத்திலே நட்சத்திரப்பூக்கள் பூத்துக் குலுங்கும். சந்திரப் பாற்குடம் கவிழ்க்கப்பட்டு

களைப் போலப் பிறப்பும், மரணமும் ஒன்றை ஒன்று தழுவி முயங்குகின்றன.

ஏகாந்த நிசாசரப் பெருவெளியாய் இருந்த கடற்கரையிலே அந்தியேட்டி மடமும், சில புதுக் கட்டடங்களும் புதுமையின் மெருகு குறையாது கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. பன்னிரண்டு வருடங்கள்!

நானும், கணேசனும் வளர்ந்து வாலிபராகி விடுகிறோம். சௌந்தர்ய மூர்த்தியாக, புருஷத்துவத்தின் உன்னத இலட்சியமாக நிமிர்ந்து நின்ற கணேச விருக்ஷத்தின் பக்கத்திலே, ஒரு சிறு முருங்கை மரமாக நானும் நிற்கிறேன். இன்னமும் என்வரையிலே அவன் ஒரு வழிகாட்டிதான்.

அவனை நான் நேசிக்கிறேன். அவனுடைய ஏளனங்கள், பரிகாசங்கள் என்ற அனைத்தையுந் தாண்டி, எனது பாசக்கொடி அவனைச் சுற்றிப் படர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

எந்தக் கூட்டத்திலும் அவனுக்குத்தான் தலைமை. யாரும் அவனை மதிக்காமல் இருக்க முடியாது.

அவனுடைய கிண்டல்களும், கேலிகளும் சந்திரக் கதிர்கள் போலத் தண்மையாக இருப்பதில்லை. அவை காய்கதிர்ச் செல்வனின் கதிர்களுக்கு எவ்வகையிலும் குறையாத வெம்மை பொருந்தியவை.

அவனுடைய கேலிகள் ஈட்டிகளாய் வந்து பாயும் பொழுதும், அசடுவழியச் சிரிக்கலாமேயொழிய எதிர்த்துப் போர்க்கொடி தூக்க என்றைக்குமே முடியாது. அத்துணை சக்தி பொருந்தியவை அவை.

சில வேளைகளில் நண்பர்களோடு வம்பளந்தபடி கடற்கரையிலே இருப்பான். நான் சிறிது தாமதித்து அங்குப் போனாலோ தொலைந்தது. மற்றவர்களைத் தூண்டிவிட்டு, என்னை அலட்சியம் பண்ணச் செய்து, சம்பாஷணையிலே கலக்கவிடாமலே அலைக்கழிப்பான்.

அவனும் நண்பர்களும் தங்கள் பாட்டிலே பேசிக் கொண்டிருப்பார்கள். நான் என்ன சொன்னாலும் யாரிட மிருந்தும் பதில்வராது. இப்படிச் சில நிமிஷங்களல்ல; பல மணித்தியாலங்களுக்குக்கூட நான் அலட்சியப்படுத் தப்படுவதும் உண்டு.

ஆனால், அதற்காக அவனை வெறுப்பது மாத்திரம் என்னால் முடிவதில்லை. அவ்வளவு ஆழமாக அவன் தனது புருஷத்துவத்தை என் நெஞ்சிலே ஆழப் பதித்திருந்தான்.

## (7)

கடல்மீது அவன் கொண்டிருந்த அன்பு வெறியோ காலப்போக்கில் அவன் அளவையும் கடந்து விசுவரூப மெடுத்து அவனைத் தன்னுள் ஆக்கிரமிக்கலாயிற்று.

பல்கலைக் கழகக் கல்வியும், தத்துவ சாஸ்திரத்திலே பெற்ற சிறப்புப்பட்டமும் நெய்யாகி அவனது பாசாக் கினியைக் கொழுந்துவிட்டெரியத்தான் வைக்கின்றன.

கடற்கரைக் கிளிஞ்சல்கள் நிறைந்திருந்த அவன் அறையிலே, அலமாரிகள் பொங்கி வழியுமளவுக்குக் கடல்பற்றிய ஆராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும், துண்டுப் பிரசுரங்களும் அடைந்து கிடக்கின்றன.

கல்லூரி விட்டதும் ஓடோடி வருவான். மீதிப் பொழுதெல்லாம் சமுத்திர ஸ்நானத்திலும், கடலையே பார்த்திருக்கும் சிந்தனையிலும் கழியும். அது ஒரு யோகம்! எந்தச் சக்தியாலும் கலைக்க முடியாத ஏகாக் கிர சித்தயோகம்!

அடிவானமும், செங்கதிரும் பின்னிப்பிணைந்து கலந்து உறவாடும். கடலிலே குருதிச் செம்மையை நிழலாக விழுத்தி, அதைத் தழுவிச் சிலிர்ப்பான் வெய்யோன்.

சிறிது பொழுதில் வானத்திலே நட்சத்திரப்பூக்கள் பூத்துக் குலுங்கும். சந்திரப் பாற்குடம் கவிழ்க்கப்பட்டு

அதிலிருந்து ஒளியமுதத்துளிகள் உலகின்மீது தெளிக்கப் பட்டிருக்கும். கடலே வெள்ளியாய் உருகி வழியும்.

இந்தக் காட்சிகளிலே அத்துவிதமாகி, மெய்ம் மறந்துபோய் அவன் கடற்கரையிலேயே வீழ்ந்து கிடப் பான். கனவுகள் செறிந்த விழியும், கற்பனை பொதிந்த நெஞ்சும், கவித்துவம் நிறைந்த சிந்தையும் அவனிலிருந்த 'அவனைத்' தட்டி எழுப்பி விழிப்பு நிலையில் வைக்கை யில்......

அவன் என்னவெல்லாமோ புலம்புவான். "உலகின் தோற்றமூலம் தண்ணீர் தான்" என்று கிரேக்க தத்துவ ஞானத் தந்தையாகிய தேல்ஸ் கூறியிருக்கிறார். உலகின் சராசரப் பொருளெல்லாம் நீரிலேயிருந்தே தோன்றி யிருக்குமாயின் நானும் நீரின் ஓர் அம்சந்தானே? உங் கள் எல்லாரிலும் அதிக அளவிலே நீரின் தன்மை என் னில் அமைந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தக் கடலிலே எனக்கு இத்தனை பாசம் ஏன்? எந்தவோ ஒரு காலத்தில் சமுத்திர புத்திரனாக நான் வாழ்ந்திருக் கிறேன் என்று சொன்னால் அது உனக்குப் பைத்திய காரத் தனமாகத் தெரியலாம். ஆனால், அதுதான் உண்மை."

"நான் விஞ்ஞானம் படித்தவன். குருட்டுத்தனமான எண்ணங்களில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும் கட லோடு எனக்குள்ள சம்பந்தத்தைக் குருட்டு நம்பிக்கை என்று என்னால் தள்ளமுடியவில்லை."

"இந்த வெள்ளலைக் கரங்கள் எனது உடலை அளைந்து கொண்டே இருக்க என் கடைசி மூச்சு என்னை விட்டு நீங்குமானால்...... நான் உண்மையிலே பெரும் பாக்கிய சாலிதான்."

## ( 8 )

"எப்படிப்பட்ட பிள்ளை? எத்தகைய அறிவாளி! இவனுக்கா இந்த நிலை? கணேசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாமே! 'என் தாயிடம் போகிறேன்.

விடுங்கள், விடுங்கள்' என்று கத்திக்கொண்டு கடலை நோக்கி ஓடுகிறுனுமே.'' ஊரெல்லாம் அவனைப் பற்றி அநுதாபத்தோடு பேசிக்கொள்கிறது!

பெற்ற வயிற்றைப் பிசைந்துகொண்டு அவனுடைய விதவைத் தாய் செய்யாத வைத்தியமே இல்லை.

பைத்தியம் என்றுலல்லவா தெளிவதற்கு?

அது ஒரு வெறி. தாயின் முலையிலே பாலைக் குடித்த படி, அவளின் மடியிலேயே சயனிக்கத் துடிக்கும் குழந்தையின் வெறி.

அது அடங்கவே மாட்டாது!

விலங்கு அறுகிறது; அவன் ஓடுகிறுன். கையை விரித்த படி, கடல் அன்னையை அணைத்துக் கொண்டு அவன் மேலே மேலே போகிறுன்......

குரும்பையாய்த் தெரிந்த தலை, பனங்காய் அளவாகி, விளாங்காய் பரிமாணத்திற்குச் சிறுத்து, எலுமிச்சங்காய் அளவிற்குக் குறுகி......

கண்ணிற்கு மறைந்து விடுகிறது......

நிரந்தரமாக......

நெருப்பு அணைகிறது.

அவனில் அது செத்து அவன் எஞ்சி......

கடல் கோஷிக்கிறது!

கொலை வெறியா?

இல்லை......

குழந்தையைத் தழுவி அணைத்த ஆனந்த வெறி.

(தினகரன் 1962-9-23)

# 4

இருவருமாக நீராவிப் படகில் ஏறினுர்கள். அவன் அவளின் கையைப் பிடித்து மிகச் சாவதானமாகப் படகில் ஏற்றினுன். நீராவிப் படகு தளும்பி ஆடுகையில் குறுக்கே இடப்பட்டிருந்த மிதி பலகையில், சேலையை முழங்கால் வரையிலே தூக்கியபடி மெதுவாக அவள் நடந்து படகிற்குள்ளே காலை வைத்ததைப் பார்க்க அவனுக்கு வேடிக்கையாய் இருந்தது. "இந்த வயதிலும் இத்தனை பயமா?" என்று கேட்க நினைத்தவன் சொற்களைப் பலவந்தமாக உதட்டினுள் விழுங்கியபடி அலட்சியமாக மிதி பலகையிற் கால் வைத்துப் படகினுள் இறங்கினுன்.

அவள் அவனைப் பதற்றத்தோடு நோக்கி, "கவனம், மெல்ல, மெல்ல," என்று ஜாக்கிரதைப் படுத்தினுள். அது அவனுக்கு எரிச்சலாய் இருந்தது. பிரயாணிகள் தன்னையும், அவளையுமே வேடிக்கையாகப் பார்ப்பதாய் எண்ணிய கூச்சத்திலே அவன் தலையைக் குனிந்தபடி நடந்து சென்று, ஆண்கள் பக்கத்து ஆசனத்திலே அமர்ந்து கொண்டான்.

மறு பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அவனுக்கும் இடத்தை ஒதுக்கிவிட்டு, அவன் தன் பக்கத்திலே வந்திருப்பான் என்று எதிர்பார்த்திருந்த அவளுக்கு ஏமாற்றமாகி விட்டது. கருகிய முகத்தை நிமிர்த்தி அவள் அவனை நோக்கினுள். தனக்குப் பக்கத்திலே இருந்த ஆசனத்தை அவனுக்குக் காட்டி வந்திருக்குமாறு கண்களால் சைகை காட்டினுள்.

## அபஸ்வரம்

அவன் பலவந்தமாகத் தலையை அசைத்து விட்டு மறுபக்கம் திரும்பிக் கடலையே நோக்கினன். தனது பிடரியினுள்ளே அவளின் கூரிய பார்வை புகுந்து துளைத்துத் துளைத்து மேலே மேலே செல்வது போன்ற உணர்வு ஏற்படுகையில், அவன் அருவருப்போடு கடலுக்கப்பால் உள்ள தொடுவானத்தில் தனது பார்வையோடு சிந்தனையையும் மேயவிட்டான்.

படகினுள்ளே ஏறுபவரதும், இடந்தேடுபவரதும் இரைச்சல்கள், குழந்தைகளின் கதறல்கள், கூச்சல்கள் என்ற ஒன்றிலும் கவனத்தைச் செலுத்தாது, அவன் அமர்ந்திருக்கும் கோலத்தைக் கனிவோடு அவள் பார்த்துப் பார்த்துப் பூரித்து ஏங்கினள், ஏங்கிப் பூரித்தாள்.

அலையலையாக நெளிந்த "கிராப்பு" மயிரும், கம்பீரமான நாசியும், செக்கச் செவேலென்று சிவந்த மேனியும், திரணை திரணையான சதைபொலிந்த உடலும் அவளின் உள்ளத்தையே கிறங்க வைத்தன. "இத்தனையும் எனக்கே சொந்தம்" என்று பூரித்தாள் அவள்......

அவளின் கண்கள் கலங்கின. உள்ளம் பொருமஉதடு துடித்தது. ஆனல், அடங்கிக் குமுறும் ஆருக அவள் தன்னுள்ளே ஓடுங்கி ஆழ்ந்து போனுள். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு தனது வாழ்க்கையில் ஏற்பட்ட ஏதோ ஒரு தவறை நோக்கி அவளின் மனம் கசிந்து உருகியிருக்க வேண்டும்.

நீராவிப் படகு கட முட சப்தத்தோடு புறப்பட்டுக் குலுங்கி ஆடியபடி சென்றது. சுழிநிறைந்த சமுத்திரத்தில் புயலினிடையே வாழ்க்கைப் படகினைச் செலுத்திச் செல்கையில் இளமைக் கனவுகள் எட்டிச் சென்று மறைந்து விடுவது போல, நயினுதீவு நாகம்மாளின் கோபுரம் சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருந்தது. அவளின் கைகள் தம்மை அறியாமலே சிரசில் குவிந்தன. "அம்மாளாச்சி! பிள்ளையில்லாக் குறையைத் தீர்ப்பாய் என்று மாத்திரம் நான் நாகப்பிரதிஷ்டை செய்யவில்லை.

வயதிற்கிடையில் உள்ளத்திற்குக் காஷாயம் கொடுத்து உடலாலே இல்வாழ்வு வாழ்ந்து...தூ...!

அவனுடைய மேனி தீயாய் எரிகிறது. நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்கிறது. நெஞ்சினுள்ளே ஒளித்திருந்த அந்தராத்மா குருதிக் கண்ணீர் வடிக்கிறது..............

இருவரும் மிகவும் நெருங்கிய அத்தியந்த நண்பர்கள். ஒருவருக்கு மற்றவரின் இரகசியங்கள் என்றுமே மறைக்கப்பட்டதில்லை. சாவிற் செத்து, நோவில் நொந்து வாழும் அகநக நட்பு அது.

இருவரும் புத்தளம் — காரைத்தீவின் சூனியம் படிந்த, வெங்கிருன் வெளிக்கூடாக நடந்து கொண்டிருக்கிருர்கள். மாலை மங்கி மடிகின்ற வேளை.

''ராஜா! இந்த விஷயத்தில் நீ ஒன்றும் தடையாக வராதே. நான் தீர்மானித்துவிட்டேன். உண்மையான காதல், வயதை, சமூக அந்தஸ்தை, உயர்வு தாழ்வை எல்லாம் கடந்தது என்பது என் உறுதியான நம்பிக்கை. செல்வராணிக்கும் எனக்கும் ஒன்பது வயது வித்தியாசம் இருக்கலாம். ஷேக்ஸ்பியர், நெப்போலியன், சாமுவேல் ஜோன்சன் வரலாறுகள் எல்லாம் உனக்குத் தெரிந்தவைதானே? தம்மிலும் மூத்த பெண்களை அவர்கள் மணந்து இன்பமாய் வாழவில்லையா? தயவுசெய்து தடை சொல்லாதே. செல்வராணி இல்லாமல் நான் வாழமுடியாது.'' கைகளை மேலே தூக்கி, உணர்ச்சியால் கழுத்து நரம்புகள் புடைத்து நிற்க, அவன் படபடக்கிருன்.

ராஜா அமைதியாகச் சிரிக்கிருன். ''மடையா! உனது குழந்தைத் தனமான உணர்ச்சிகளைத் தாம்பத்திய வாழ்க்கையிலுங் கொட்டி உன் எதிர்காலத்தைப் பாழடிக்காதே. உனது உணர்ச்சிகள் கவிதைகளாய் மலரலாம். கதைகளாக வடிவம் கொள்ளலாம். ஆனுல்,

அவை வாழ்க்கையாக உருக்கொள்வது நடவாத காரியம்.''

'நீ என்னடா சொல்கிறாய்? உணர்ச்சிகள் தாம் உயர்ந்த இலட்சியங்களாய் உருவங்கொண்டு வாழ்க்கையை அர்த்தமுள்ளதாய் ஆக்குகின்றன. வெறும் உடலல், அதன் இளமையால் மாத்திரந்தான் உண்மையான காதல் உருக்கொள்ளும் என நான் நினைக்கவில்லை. முப்பத்தொரு வயதான செல்வராணியின் உடலையா நான் நேசிக்கிறேன்? அவளின் உள்ளத்தை, பண்பை, நீக்கமற நிறைந்துள்ள அன்பைத்தான் நான் நேசிக்கிறேன். உயிரெனப் போற்றுகிறேன். அவளின் இதயக் கோயிலிலே குடி கொண்ட காதற் தெய்வத்திற்கு என்னையே நான் அர்ப்பணித்து விட்டேன்.'' அவன் ஒரு பைத்தியக்காரனைப்போல் துடித்து அழுது உருகிப் போய்ப் பட படக்கையில் ராஜா அடங்கி அமைந்து போகாமல் என்ன செய்வது?

என்றாலும் ஈனஸ்வரத்தில் அவன் சொல்கிறான். ''இனி உன் இஷ்டம். ஆனால், இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களில் அவள் முதியவளாகி இன்றைய அழகுருவம் அழிந்து நிற்கும்போது, இளமையின் வாயிலிலே நிற்கும் நீ இழந்துவிட்ட உன் பெருநட்டத்தை நினைத்துக் கழிவிரக்கப்படாமல் இருப்பாயானால் அன்று... நல்லது... அந்த நாள் வருவதாக. உனக்கு என் வாழ்த்துக்கள்............''

''எனக்கும் அவருக்கும் திருமணம் நடந்தது. ஒன்றாகப் படிப்பித்த சக ஆசிரியர்களாகிய நாம் வாழ்க்கைப் பாதையிலும் சக பிரயாணிகளானோம். எமது திருமணத்தைக் கண்டு மனப்பூர்வமாக வாழ்த்தியவர்களிலும், மனந்திறந்து சிரித்தவர்களே அநேகர். ''அடி, பைத்தியக்காரி! உன் தம்பிக்குச் சரியான ஒருவரை நீ விவாகஞ் செய்து எப்படித்தான் வாழ்க்கையை ஓட்டப் போகிறாயோ? ''பெண்கள் செடிகள் போன்றவர்கள், விரைவில் வளர்ந்து முதிர்ந்து விடுவார்கள். ஆண்

களோ மரங்களைப்போலப் படிப்படியாக வளர்ந்து முதிர்கிறார்கள்'' என்று மகாகவி தாகூர் கூறியதை உனக்கு ஞாபகப்படுத்துகிறேன். நீ வாழ்க்கையின் பிற்பகலில் நிற்கும்போது உன் கணவர், வாழ்க்கையின் மத்தியான வேளையில் நின்று ஏங்குவார். அப்போது தான் உன் பிழை உனக்கு விளங்கும்'' என்று என் நெருங்கிய தோழி கமலா என் திருமணத்தன்று இடித்துரைத்தாள்.''

''அடி பாவி! வாழ்த்த வேண்டிய இந்த வேளையில் இப்படிச் சாபம் போடுகிறாயே'' என்று அவள் மீது சீறி விழுந்தேன். ஆனால், இன்று.........

அவரின் ஆசை சில வருடங்களிலேயே தீர்ந்து விட்டது. அவரின் இளமை வெறிக்கு, வேகத்திற்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது போய்விட்டது.

''ஆமை — முயல் ஓட்டப் பந்தயமாகிவிட்டது எங்கள் கதை. ஆனால், ஒரு திருத்தம். முயல் என் கதையிலே முயலாகவே இருந்தது. ஆமையால் நகரத்தான் முடிந்தது!''

''நான்கு முறை கருப்பமுண்டாகி நான்கு முறையும் சிதைவு ஏற்பட்டு நான் நோயின் வடிவமாகி விட்டேன். காலம் என்மீது மூதுமையாய்ப் படர்ந்து செல்கையில் அவர் என்னை விட்டு விலகி விலகி எங்கோ செல்லத் தொடங்கினார்.''

''அவருக்குச் சமமாக இளமை பொருந்தியவளாய்ச் சிறுமி போல நடந்தால் அது அவருக்குக் கேலியாகி விடும். ''என்ன? பதினெட்டு வயதுச் சிறு பெண் என்ற எண்ணமோ?'' என்று குத்திக் காட்டுவார். வயதிற்குரிய பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டால் ''ஏது நீ கிழவியாகிவிட்டால் நானும் உன்னைப்போல் கிழட்டு வேடம் பூண வேண்டுமோ?'' என்று சீறுவார். ''ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்'' என்ற கதைதான்.''

''எங்கள் வாழ்க்கை நரகமாகி விட்டது. அவரைத் திருப்திப்படுத்த எனது எல்லாமே அர்ப்பணிக்கப்பட்டும் போதாது என்ற நிலையில் கடவுளிலே பாரத்தைப் போட்டேன். என் வயிறு வாய்த்து ஒரு குழந்தை பிறந்தால்.........''

''சோதிடர்கள் நாக தோஷம் என்று கூறி நாகம் மாளுக்கு நாகப் பிரதிஷ்டை செய்யச் சொன்னார்கள். அதை இவரிடம் சொன்னதும் அவர் ''செல்வராணி! எனக்குக் குழந்தை பிறக்கும். ஆனால், எங்களுக்குக் குழந்தை பிறக்கும் என்று இன்னமும் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?'' என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தார்.''

''அந்தச் சிரிப்பில் நான் எரிந்து போயிருப்பேன். ஆனால், இந்தக் கட்டைக்கு உயிர் கெட்டி. ரோசத்தை விடுத்துக் கெஞ்சி மன்றாடி இவரை இன்று அழைத்து வந்து நாகப் பிரதிஷ்டை செய்து திரும்புகின்றேன்.''

அவளின் சிந்தனை கண்ணில் உருகி வழிய முயல்கையில் மீண்டும் இருவரின் கண்களும் சந்திக்கின்றன.

பழைய ஏக்கம்...... பழைய வெறுப்பு

பழைய எதிர்பார்ப்பு...... பழைய குரூரம்!

பழைய அன்பு...... பழைய அலட்சியம்!

புங்குடுதீவுத் துறை வந்து விடுகிறது. அவன் துள்ளிப் பாய்ந்து இறங்கி அவளுக்குக் கை கொடுக்கிறான். அவள் தனது மாமிச மலையை மிதிபலகையில் ஏற்றித் தரையில் இறக்குகிறாள்.

அவன் கம்பீரமாக விரைந்து நடக்க, அவள் இரைக்க இரைக்க ஓட்டமும் நடையுமாக அவனைத் தொடர்கிறாள், இன்னும் எத்தனை காலமோ?

(ஜோதி 1968-3-5)

# 5

செல்வரத்தினத்திற்கு அந்தக் கிராமம் புதியதல்ல. சரியாக நாற்பது ஆண்டுகளை அவர் அதன் புழுதியிலும், மண்ணிலுந்தான் கழித்து விட்டிருந்தார். புதிதாக அங்குப் 'பஸ்' சேவை ஏற்பட்டபொழுது பஸ்ஸிலே ஏறிய முதற்பிரயாணி அவர். உபதாபற்கந்தோரில் முதல் 'காட்' வாங்கிக் கால்கோள் விழா நடத்தி வைத்த பிரமுகரும் செல்வரத்தினந்தான். பத்து மைலுக்கு அப்பால் இருந்த இளம் மனைவிக்கு எழுதிய முதலுங் கடைசியுமான 'காட்' அது! அதன் பெறுமதியே தனிதான்.

அவருடைய கம்பீரமான ஒலியை மிரட்சி கலந்த மதிப்போடு கேட்ட மூன்று தலைமுறைகள் அங்கிருந்தன. புடைவை வியாபாரி பரமலிங்கம் தொடக்கம், சமீபத்தில் 'டாக்டர்' பரீட்சையில் முதல் வகுப்பில் தேறிய சிவஞானம் வரை எல்லோருமே அவரிடம் மூக்கை உறிஞ்சி, உறிஞ்சி அரிச்சுவடி படித்தவர்கள்தாம். செல்வரத்தினத்தின் பிரம்பு பட்ட தழும்புகள் மறைந்திருக்கலாம். ஆனால், அவரின் அறவுரைகளும், அறிவுரைகளும் என்றைக்கும் மறையப்போவதில்லை.

அவர் ஏணிபோல் இருந்தார். அந்த ஏணியைத் துணைக்கொண்டு ஏறியவர்கள் மேலே, மேலே போய் விட்டார்கள். அவரோ 'எல்லையறு பரம்பொருள்' போல் இருந்தபடியே இருந்தார். ஆசிரியப் பயிற்சி கூடப் பெறாத சாதாரண தமிழ் ஆசிரியராகவே செல்வரத்தினம் இளைப்பாறினார். இப்பொழுது அவருக்கு முப்

**ஆசிரியர்**

பதோ, நாற்பதோ உபகாரச் சம்பளமாக வந்துகொண் டிருக்கிறது.

செல்வரத்தினத்திற்குப் பிள்ளை குட்டி என்ற பிக்கல் பிடுங்கல் எதுவும் இல்லை. மனைவியும் சில ஆண்டுகளுக்கு முன்பு போய்விடத் தனிக்கட்டையாகத்தான் அவர் வாழ்ந்துவந்தார். அவருடைய தங்கையின் மகன் முப்பது ரூபா வாங்கிக்கொண்டு நேரத்திற்குச் சோறு போட்டுவருகிறான்! மிச்சம் மீதியும் அவனது பிள்ளைகளுக்கே செலவாகிவிடும்.

ஆனால், செல்வரத்தினம் எதைப்பற்றியும் கவலைப் பட்டவர் அல்லர். 'ஆடலே புரியும் அம்பலவாணர் அவரவர்க் கமைத்தன'வே கிடைக்கும் அல்லாது, அதிக ஆசைப்படுவது தவறு என்பது அவரின் சித்தாந்தம். வயது அறுபத்தைந்தைத் தாண்டியிருந்தும், கம்பீரம் குறையாத ஆஜானுபாகுவாய், சிரித்த முகத்தோடு அவர் இருப்பதைப் பார்க்க ஆச்சரியம் உண்டாக வேண்டியதில்லை. அவரைப் போன்றவர்கள் அப்படித் தான் இருப்பார்கள்.

இன்று, செல்வரத்தினம் தமது மாணவன் ஒருவனின் அழைப்பின் பேரில் அவனுடைய மகளின் கலியாணத்திற்காய் அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தார்.

செல்வரத்தினத்தின் வருகையால் விவாகவீடே அமர்க்களப்பட்டது. அவரைக் காணவேண்டும் என்றே அவனுடைய மாணவ பரம்பரை அங்குப் படையெடுத் திருந்தது. அவர்களில் ஐம்பதைக் கடந்த கிழங்களும் இருந்தார்கள். பூனைமீசை அரும்பிய கிழங்களும் இருந் தார்கள்.

அவர்களைத் தனித்தனி பெயர் சொல்லி அழைத்து, அவர்கள் பாடசாலையிலே செய்த குறும்புகளையும், அவர்களின் குறை நிறைகளையும், பட்ட அடி உதைகளையும் எடுத்துச் சொல்லி மகிழ்வித்துக் கொண்டிருந் தார் செல்வரத்தினம்.

அவருடைய கூர்மை மழுங்காத நினைவாற்றல் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. வயதைப் புறமுதுகிடச் செய்து கலகலப்போடு, குண்டுக் கல்லாய் இருக்கும் அவரின் ஆரோக்கியநிலை பொறுமையை ஏற்படுத்தியது!

அவர் என்ன செய்வார்? பரீட்சைத்தாள்களுக்கும், பாடப்புத்தகங்களுக்கும் பலியாகாமல் நிம்மதியாக இருந்தது அவர் குற்றம் அல்லவே!

விவாக ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. வாழை கட்டுபவர்களும், அலங்காரங்கள் செய்பவர்களும், அங்கும் இங்கும் ஓடி ஆடி வேலை செய்துகொண்டிருந்தனர். இரவு பத்து மணிக்கு முகூர்த்தம்.

அதுவரை வீட்டிற்குள் அடைந்துகிடக்க விரும்பாதவராய்ச் செல்வரத்தினம் வெளியே புறப்பட்டார். அவருடைய மாணவர் குழாம் அவருடன் சிறிதுதூரம் வந்து கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்துவிட்டது. செல்வரத்தினம் தனியாக அந்தக் கிராமத்தையே சுற்றி வந்தார். அவர் கற்பித்த பாடசாலை........

ஓலைக்கீற்றுக் கொட்டகையாய் இருந்த அது, இன்று புதிய ஓட்டுக் கட்டடம் பெற்றுத் தலை நிமிர்ந்து நின்றது. சூழவரப் பொட்டற்காடாகக் கிடந்த இடங்களில், வழுக்கைத் தலையில் மயிர் முளைத்ததுபோலச் சிறு சிறு வீடுகள் எழுந்திருந்தன.

அவர் வழக்கமாக அமர்ந்திருந்து இலக்கியம் கற்பிக்கும் மகிழமரம் அவரைக் கண்டதும் முறுவலிப்பதுபோலக் காற்றில் அசைந்து பூக்களாய்ச் சொரிந்தது. பழைய நினைவுகள் படையெடுத்தன. இந்த மரத்திற்குக் கீழேதான் சங்கரன் தன் இனிமையான குரலிலே சந்திரமதி புலம்பலை முகாரிராகத்தில் படித்தான்; சம்பந்தன் முன்னால் இருந்த பையனுக்கு வாழைநாரால் வால் கட்டியதற்கு, அடி வாங்கியதும் இந்த மகிழின் கீழேதான்.

செல்வரத்தினம் அந்த மகிழின் கீழே அமர்ந்திருந்து பழைய நினைவுகளை அசைபோட்டார். ஆஹா! எவ்வளவு இனிய நாள்கள் அவை? நாற்பது வருடங்களில் நாற்பது நாள்கள்கூட லீவு எடுக்காது, பாடசாலையும் தாமுமாய் அத்துவிதமாகிப்போன காலங்களை அவரால் எப்படி மறக்கமுடியும்?

உலகத்திலே உயர்ந்த தொழில் ஆசிரியத் தொழில் தான் என்று நினைத்துத் தலைநிமிர்ந்து நடந்த நாள்கள், வாழ்க்கையின் பொற்காலம் என்பதை அவரால் உணராதிருக்கக்கூடவில்லை. அந்த உணர்வில் அவர் கனிந்து கரைந்து போனதுபோலக் கண்களிலே நீர் முட்டிப் போய் நின்றது.

''பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போயினவே'' என்று எண்ணியவராய் நெடுமூச்சை உதிர்த்த படி எழுந்து நடந்தார்.

செல்வரத்தினம் விவாக வீட்டிற்குத் திரும்பிய பொழுது அங்கே சாக்களை குடிகொண்டிருந்தது. பழைய கலகலப்பைக் காணமுடியவில்லை. வாழைமரங்களிற் சில கட்டியபடி நின்று சோர்ந்தன; சில கட்டப்படாமலே கீழே கிடந்தன. அரைகுறை அலங்காரங்கள் அப்படி அப்படியே கிடந்தன.

வீட்டுக்காரர் மாத்திரம் முன்னால் இருந்த சாய் மனைக் கதிரை ஒன்றிலே சாய்ந்து, கூரையைப் பார்த்த படி இருந்தார். வேறு ஒருவருமே அங்கில்லை.

வீட்டினுள்ளே இருந்து மெல்லிய விசும்பல் ஒலி சற்றைக்கொருதரம் வந்து கொண்டிருந்தது. அந்த விசும்பல் ஒலி, தம்மிடம் ஐந்தாம் வகுப்பிலே கற்ற பூமணியிடமிருந்துதான் வருகிறது என்பதைச் செல்வரத்தினம் கேட்டது மூலமே அறிந்து கொண்டார்; மூக்கை உறிஞ்சி உறிஞ்சி, இடை இடையே கேருகிற குரலில் அழுவதற்குப் பூமணியால்தான் முடியும்......... அவள் தான் மணமகள்...... ஏன் அழுகிறாள்?

செல்வரத்தினத்தைக் கண்டதும் வீட்டுக்காரராகிய பொன்னுத்துரை எழுந்து நின்றார்...... எழுந்ததுமே மேல்துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு அழத் தொடங்கிவிட்டார்.

செல்வரத்தினம் அவரின் தோள்களிலே ஆதர வோடு கைகளை வைத்து, ''என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

பொன்னுத்துரை பதில் கொடுக்கவில்லை. மௌன மாகத் தமது மடியிலிருந்து கடிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு, மீண்டும் அழுதார்.

செல்வரத்தினம் கடிதத்தை வாசித்தார். கடிதம் மணமகன் வீட்டிலிருந்து வந்தது. அதில், பூமணி யாரையோ காதலித்ததாகவும், காதலித்தவனோடு ஓடிப்போக எண்ணி இருந்ததாகவும் அறியவருவதால் இந்தத் திருமணத்திற்குத் தங்களால் இணங்கமுடியாது என்று கண்டிருந்தது. குறித்த செய்தியை அறிவிக்கும் மொட்டைக் கடிதம் ஒன்றும் அதனுடன் இணைக்கப்பட் டிருந்தது. ''உண்மை விளம்பி'' அதை எழுதியிருந்தான்!

செல்வரத்தினம் அந்த மொட்டைக் கடிதத்தை வாசித்தார், திரும்பத் திரும்ப வாசித்தார்...... அவர் முகம் மலர்ச்சியடைந்தது......

அந்தக் கடிதத்தோடு விரைவாக அவர் வெளியே சென்றதைப் பார்க்கப் பொன்னுத்துரைக்கு ஆச்சரிய மாக இருந்தது.

பொன்னுத்துரை பின்னால் செல்ல முயல, செல்வ ரத்தினம் அவரைத் தடுத்து விட்டுத் தாம் மாத்திரம் சென்றார்.

செல்வரத்தினம் ஓட்டமும் நடையுமாக நடந்து சென்று, அரைமைல் தூரத்திலிருந்த ஒரு வீட்டின் கத வைப் படீரென்று திறந்துகொண்டு உள்ளே சென்றார்; ''திருநாவுக்கரசு!'' என்று அவர் போட்ட சப்தத்தில்,

பழைய அதிகார மிடுக்குச் சற்றுங் குறையாமல் இருந்தது: திருநாவுக்கரசு பீதிப்புன்னகையோடு வந்து, தமது முன்னாள் ஆசிரியர் முன் நின்றார்.

"இந்த மொட்டைக் கடிதத்தால் நீ என்ன சுகம் கண்டாய்; அநாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்குவதிலே உனக்கு என்ன லாபம்? என்னிடம் படித்ததற்கு இதுதானா பயன்?" என்று அவர் இரைய இரைய, நாற்பது வயதைக் கடந்து சற்றே நரைவிழத் தொடங்கியிருந்த திருநாவுக்கரசுவிற்குக் கண்கள் இருண்டு வந்தன.

"நான்...... நான்...... இதை...... எழுதவில்லை......" பழைய மாணவ நடுக்கத்தோடு இந்தச் சொற்களை உதிர்க்க அவர் பட்ட பாடு கொஞ்சமல்ல.

திருநாவுக்கரசு சொல்லி முடிக்கவில்லை. செல்வரத்தினம் எரிமலையாய்க் கனிந்தார். "முட்டாள்! என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்? இந்தக் கடிதத்தைப் பார்." செல்வரத்தினம் கடிதத்தைக் காட்டினார்.

அன்பார்ந்த சுந்தரலிங்கம் அவர்களுக்கு,

உங்கள் மகனுக்கு, பொன்னுத்துரையின் மகள் பூமணியை விவாகஞ் செய்விக்க எண்ணியிருப்பதாய் அறிந்தேன். அதற்க்கு ஒரு தடையுண்டு. பூமணி கெட்டழிந்த பெண். அவளிற்க்கு ஒரு காதலன் இருக்கிறான். அவனோடு ஓடிப்போகக்கூட இந்தப் பெண் நினைத்திருந்தாள்...... உங்கள் நன்மைக்காகவே இந்தப் பயங்கர உண்மையை வெளியிடுகிறேன். இதற்க்கு ஆதாரங்கள் உண்டு.

இங்ஙனம்
உண்மை விளம்பி.

"அதற்க்கு, இதற்க்கு, அவளிற்க்கு என்று எழுதாதே: அதற்கு, இதற்கு, அவளுக்கு என்று எழுது என்று எத்தனைநாள் சொல்லியிருப்பேன்? எத்தனை

அடிகளை வாங்கியிருப்பாய்...... திருநாவுக்கரசு! எழுதியதைத்தான் வேறு யாரைக்கொண்டோ எழுதுவித்தாய்...... ஆனால், ஈயடிச்சான் காப்பி அடிப்பவனையல்லவா பார்த்துப் பிடித்தாய், முட்டாள்!'' செல்வரத்தினம் சிரித்தார். திரிபுராந்தகச் சிரிப்பு அது! காலத்தால் தேயாத அந்தச் சிரிப்பு திருநாவுக்கரசை ஏழு வயதுப் பையனாக ஆக்கி ஆசிரியரின் காலடியில் விழ வைத்தது.

'மன்னித்துக் கொள்ளுங்கள் வாத்தியார். பொன்னுத்துரையின் மகளுக்குப் பேசிய 'பொடியனைத்' தான் முதலிலே என் மகளுக்குப் பேசியிருந்தேன். சீதன விஷயத்தால் அது குழம்பிப் போய்விட்டது. அவனைப் பொன்னுத்துரை தன் மகளுக்கு மாப்பிள்ளையாக்க நினைத்தது பொறாமையைத் தந்தது. அதனால்தான்...... என்னை மன்னியுங்கள்!' திருநாவுக்கரசு அழாத குறையாக மன்றாடினார்.

''மன்னிக்க என்ன இருக்கிறது? இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் விஷயத்தை மாப்பிள்ளை வீட்டாருக்கு விளங்கப்படுத்து. பொன்னுத்துரையின் இருண்டுவிட்ட வீட்டிலே விளக்கேற்றிவை; போ.''

திருநாவுக்கரசு மறு பேச்சின்றித் தோளிலே துண்டைப் போட்டுக்கொண்டு, மாப்பிள்ளை வீட்டிற்குப் பயணமானார்.

(கலைச்செல்வி 1966-1-15)

# 6

காரியாலயத்தில் இருந்து தினவரவு இடாப்புக்களை எடுத்துக் கொண்டு புறப்படுகையில் கனகலிங்கத்தின் கண்கள் கலங்கின. வழக்கத்திற்கு மாறாகக் கால்கள் தள்ளாடுவது போன்றிருந்தது. தலையைச் சுற்றியது. மேசையில் கையை அழுத்தமாக ஊன்றிச் சமாளிக்க முயன்றான்.

அவனது நிலைமையைப் புரிந்துகொண்ட காரியாலய இலிகிதர் கருணாகரம்பிள்ளை அவனை அனுதாபத்தோடு நோக்கினார். ''இன்றைக்கும் நீ வேலை செய்ய வேண்டுமா? பேசாமல் அந்த வாங்கில் போய் இரு. நான் சின்னத்தம்பியை அனுப்புகிறேன்'' என்று அவர் அன்பொழுகக் கூறினார்.

சிடுசிடுவென்று எந்நேரமும் எரிந்து புகைந்து கொண்டிருக்கும் கருணாகரம்பிள்ளையின் வழக்கத்திற்கு மாறான இன்சொற்களால் அபிஷேகம் செய்யப்பட்ட குளிர்ச்சியில், அவரின் வேண்டுகோளைப் பணிவோடு மறுத்துக் கனகலிங்கம் இடாப்புகளைச் சுமந்தவனாய் வகுப்பறைகளை நோக்கிச் சென்றான்.

காலைப் பிரார்த்தனை முடிந்தது. வகுப்புக்கள் களை கட்டத் தொடங்கியிருந்தன. கடமைக்கும், மனச்சான்றிற்கும் போக்குக் காட்டிவிட்டு, வகுப்பறையைத் தங்கள் சொந்த வீடாகப் பாவித்துச் சோம்பிக் கிடக்கும் சில ஆசிரியர்களுங்கூட முதற்பாடம் என்பதால் ஏதோ படிப்பிப்பதாகப் பம்மாத்துப் பண்

ணிக் கொண்டிருந்த நேரம் அது. எனவே, வகுப்பறைகளில் ஆசிரியர்களின் குரல்களைத் தவிர அமைதியே குடிகொண்டிருந்தது.

கனகலிங்கம் ஒவ்வொரு வகுப்பறையாகச் சென்று இடாப்பை வகுப்பு மேசையில் வைத்துவிட்டு வந்தான். அவ்வேளையில் ஆசிரியர், மாணவர்களெல்லாம் அவனை நோக்கி ஓர் அன்புப் புன்னகையைச் செலுத்துவதாக அவனுக்குப் பட்டது. அந்த அன்பு அவனது இதயத்தை இதமாகத் தடவிக்கொடுக்க, அந்த இதமே வேதனையாய் வளர்ந்து அவனைத் துயருறுத்தியது.

கனகலிங்கத்தைப் பொறுத்தவரை பாஸ்கரோதயக் கல்லூரி வெறும் கல்லாலும், சாந்தாலும் ஆன கட்டடம் அன்று. அது அவன் சகோதரிபோல. சாதாரண கூரைக் கொட்டிலாய்த் தொடங்கப் பெற்ற அது இன்று வான் உயர்ந்த மாடிக் கட்டடங்களைப்பெற்று இலங்கையின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்ருய் விளங்குவது வரையுள்ள அதன் படிப்படியான வளர்ச்சிகளையெல்லாம் காணும் பாக்கியம் பெற்றவன் அவன். அதனுல் அதனேடு அவனுக்கு ஓர் இரத்தபாசமே ஏற்பட்டிருந்தது.

ஒரு வருடமா? இரு வருடங்களா? சரியாக நாற்பத்திரண்டு ஆண்டுகள்! கல்லூரியின் மூலைமுடுக்கெல்லாம் அவனுக்குக் கரைந்த பாடம். கல்லூரியோடு தொடர்புகொண்ட நாளில் இருந்து அங்கு மாணவராய்க் கற்ற மூன்று தலைமுறைகளை அவன் கண்டிருக்கிருன். மீசை கூட அரும்பாத சிறுவயதிலே பியோனுக வந்து, இன்றுவரை எவரும் குறை சொல்லாத வகையிலே அவன் தன் கடமையைச் செய்திருக்கிருன்.

இலங்கையின் மிகப்பெருங் கல்விமான்கள், பொறியியலாளர்கள், டாக்டர்கள், பேராசிரியர்கள், நியாயவாதிகள், அரசியல்வாதிகளை எல்லாம் ஈன்றெடுத்த கலைக்கோயிலின் அடியவனுக இடையீடின்றிச் சேவை

புரிந்த பெருமையில் அவனது மார்பு நிமிர்ந்தது. இன்று நரைத்த தலையோடும், திரைந்த உடலோடும், முதியோராய்க் காட்சி தரும் பல பெரியார்களை, அரைக் காற்சட்டைச் சிறுவர்களாய்க் கண்டவனல்லவா அவன்? ஏன்? இன்றைய அதிபர்கூட ஒருநாள் வால் பேத்தைபோலத் தமக்கு அளவில்லாத சட்டைகளைத் தரித்துக்கொண்டும், பேந்தப் பேந்த விழித்துக்கொண்டும் இந்தக் கல்லூரியின் மண்டபங்களிலே ஓடித் திரிந்தவர்தாம்.

கனகலிங்கத்திற்கு வேதனையின் இடையேயும் சிரிப்பாய் இருந்தது. அன்றொருநாள் பென்னம்பெரியதொரு காரிலே தடபுடலாக வந்திறங்கிய கல்விப்பகுதி நிரந்தரக் காரியதரிசி முப்பது வருடங்களுக்கு முன் வேட்டி சால்வையுடன் ஏழாம் வகுப்பிலே படித்தவர்தாமே? மனிதர் நல்லவர், கலகலப்பாகச் சிரித்தபடி, "என்ன கனகலிங்கண்ணை! இன்னமும் இங்கேதானே இருக்கிறாய்? என்னை ஞாபகம் இருக்கிறதா?" என்று கனகலிங்கத்தின் தோளிலே தட்டி அன்பாக விசாரித்தார்.

அந்த வேளையிலே கனகலிங்கத்திற்கு மிகப் பெருமையாய் இருந்தது. கல்லூரியின் பண்பு வாய்ந்த ஆசிரியப் பெருமக்களின் வழிகாட்டலிலே வளர்ந்த ஒரு பரம்பரை, எந்த நிலையிலும் தனது ஆன்மாவை இழக்காமல் இருப்பதை நினைத்து அவன் உண்மையாகவே மகிழ்ச்சியிலே திளைத்தான்.

உம்...... அது ஒரு காலம். அன்று ஆசிரியர்கள் நடமாடும் தெய்வங்களாய் இருந்தார்கள். நடை, உடை, பாவனை என்ற எல்லாவற்றிலும் ஒரு பரிசுத்தம். ஒரு தெய்வீகம். கல்வியைப் புனிதப் பணியாகக் கருதி, மாணவரைத் தம் பிள்ளைகளாய் எண்ணி ஒரு குடும்ப உணர்வையே வளர்த்து விட்ட அந்தப் பெரியார்களிடம் படிக்கும் பாக்கியம் தனக்குக் கிட்டாவிட்டாலும், அவர்களைக் கண்டு பழகும் வாய்ப்புக் கிடைத்ததே அவனுக்குப் பெறற்கரிய பேறாய்த் தோற்றியது.

மதிப்பை மதிப்பளித்தே பெறலாம் என்று கருத்து நிலவிய காலம் அது. மனிதனை மனிதனுக நினைத்துப் பழகிய மனிதர்கள் உலாவிய நாள்கள் அவை. கல்வியின் முழு அர்த்தத்தையும் புரிந்துகொண்டு, உள்ளத்தையும், ஆன்மாவையும் ஒரு சேர வளர்த்த மகா புருஷர்கள் வாழ்ந்த அந்த நாள்கள் இனித் திரும்புமா?

அக்காலத்திலே ஆசிரியர்கள் தொடக்கம் மாணவர் ஈருக யாவரும் அவனைக் ''கனகலிங்கண்ணை'' என்று தான் அழைப்பார்கள். எப்போதாவது அதிபரோ, துணை அதிபரோ பெயரைச் சொல்லி அழைத்ததுண்டு.

கனகலிங்கம் அந்த மகிழ்ச்சி நிறைந்த நாள்களை நினைத்துக்கொண்டான். கல்லூரியின் பரிசளிப்பு விழாக் கள், விளையாட்டுப் போட்டிகள், கலை விழாக்கள் என்ற பலவும் அவன் நினைவில் திரை விரித்தன. வருடம் முழு வதும் விழாக்கோலம்பூண்டு மகிழ்ச்சியின் பிறப்பிடமாக அல்லவா கல்லூரி விளங்கியது?

அந்தக் காலத்தில் சம்பளம் மிக மிகக் குறைவு. ஆரம்பத்தில் அவனுக்கு மாதம் ஐந்து ரூபா தான் கிடைத் தது. ஆனுல், அதில் இரண்டு ரூபாவை மாதந்தோறும் தாய்க்கு அனுப்பி விடுவான். விடுதிச்சாலையிலே சாப் பாடு கிடைக்கும். தீபாவளிக்கு ஆசிரியர்கள பணம் சேர்த்துப் புதுத் துணிமணிகள் வாங்கிக் கொடுப்பார் கள். சித்திரை வருடப் பிறப்பன்று கை விசேஷமும் கிடைக்கும். அப்பொழுதைய ஐந்து ரூபாய் இன்றைய நூறு ரூபாவிற்குச் சரியாய் இருக்கும். வாழ்க்கை ஓர் இன்பக் கனவாகவே அன்று இருந்தது.

இரண்டாவது உலக யுத்தம் வந்தாலும் வந்தது. எல்லாம் தலை கீழாக மாறின. அன்றைக்கு ஏறத் தொடங் கிய அத்தியாவசிய பொருள்களின் விலை இன்றுவரை இறங்கவேயில்லை.

அரசாங்கம் கல்லூரியை எடுத்த நாளிலிருந்து அவ னுக்கு நூற்றைம்பது ரூபா சுளையாய்க் கிடைத்தும்

என்ன பிரயோசனம்? பெருகிவிட்ட அவனின் குடும்பச் செலவுகளுக்கு இது உறைபோடவும் போதாது. முதுமை, பிணி, வறுமை என்ற பலவற்றிற்கும் ஈடுகொடுத்து ஒரு நரக வாழ்க்கையைத்தான் அவன் நடத்திக்கொண்டு வருகிறுன்.

என்ருலும் ஓர் ஆறுதல். தவணைதோறும் கட்டுகின்ற கல்லூரிச் சகாயப்பணமோ, புத்தகச் செலவுகளோ இன்றிப் பிள்ளைகளைக் கல்லூரியிலே படிப்பிக்கக் கிடைத்தமை கடவுளின் வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனுல் காலமாற்றத்தில், சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் பேயாட்டத்தில் புதிய சில பிரச்சினைகளுக்கும் அவன் ஈடுகொடுக்க வேண்டித்தான் இருந்தது.

கனகலிங்கம் கல்லூரியின் பியோன். அவன் மகன் அங்கே ஓர் உயர் வகுப்பு மாணவன். இந்த இரண்டு எதிர் நிலைகளையும் அவன் அண்மையில்தான் உணர்ந்து மனம்புழுங்க நேரிட்டது.

ஆங்கிலேய கல்விச் சம்பிரதாயங்களும், அவற்றின் பயனுக ஏற்பட்ட மனப்போக்குகளும் நாட்டின் இருதயத்தையே அரிக்கும் கசக்கிருமிகளாய் மாறின என்று சொல்லக் கேட்டிருக்கிறுன். அது அவனுடைய மூளைக்கு அப்பாற்பட்ட விஷயமாயிருப்பினும் அவன் வாழக் கிடைத்த நாற்பதாண்டுச் சூழலின் அநுபவத்தால் அதில் உண்மை இருப்பதாகவே அவனுக்குப் புலப்பட்டது. வகுப்புக்களிலே தமிழ் பேசினுல் தண்டனைப் பணம் இறுக்க வேண்டும், என்றிருந்த ஒருகாலப் பிரிவினை கண்டபொழுது தனித் தமிழையே கற்று, அதிபர் தரும் சுற்று நிருபங்களில் ஆசிரியர்களின் பெயர்களைச் சிரமத்துடன் தடவிப்பிடித்த கனகலிங்கத்திற்குக் கசப்பாக இருந்ததில் நியாயம் இருக்கவே செய்தது.

ஆனுல், அந்தக் காலம்மாறிச் சுதந்திரம் கிடைத்து, சுயபாஷை கோலோச்சத் தொடங்கிய பின்னர், மாணவ

சமுதாயம் ஏதாவது திருந்தியுள்ளதா என்று சிந்திக்கையில் "இல்லை" என்ற பதிலே அவனுக்குக் கிடைத்தது.

குடும்ப வறுமையையும் சிந்தியாது டெரிலின் சட்டையும், "பிளானல்" லோங்சும் அணியவும், காவாலித் தனங்களை வளர்க்கவும், கண்ட கண்ட படங்களையும், பத்திரிகைகளையும் பார்த்தும் படித்தும் உள்ளங்களோடு உடல்களையும் கெடுக்கவுந்தான் இக்கால மாணவர்கள் அறிந்திருக்கின்ருர்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

இப்படிப்பட்ட மாணவர்களிடையே அவனது மதிப்பு வரவரக் குறையத் தொடங்கியதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? கனகலிங்கண்ணை, கனகலிங்கமாக மாறி மிகச் சாதாரண நிலைக்கு இறங்கி விட்டான்.

கல்லூரியின் ஒரு தூண் என்று தன்னை நினைத்திருந்தவன் இப்போது, தான் வெறும் "பியோன்" என்றே நினைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டமை காலத்தின் கோலமல்லாமல் வேறு என்ன?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்பில் கனகலிங்கத்தின் மகன் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய வகுப்பிற்குச் சுற்றுநிருபங்களையோ, இடாப்புக்களையோ கொண்டு போகையில் அவனுக்கு உயிர் போய்த் திரும்பும். ஆசிரியர் இல்லாத வேளையிலோ சொல்லவே வேண்டாம். "ஏ கனகலிங்கம்!" என்று மாணவர் அழைக்கும்போது, மகன் வேதனையோடு தன்னையே பார்ப்பதுபோலத் தோன்றுகையில், தனது சாதாரணத் தன்மையை நினைத்து அவன் கூனிக் குறுகிப் போய்விடுவான்.

ஒருநாள் கனகலிங்கத்தின் மகனும், அவன் சகபாடி ஒருவனும் அடிபட்டுக் கொண்டார்கள். பார்க்கப் போனுல் இது ஒரு சாதாரண விஷயம். ஆனுல் அந்தச் சகபாடி, நாடாளுமன்ற அங்கத்தவர் ஒருவரின் மகன். எனவே சிக்கல் பெரிதாகி விட்டது. அவனுடைய தந்தை அடுத்தநாள் வந்து கல்லூரியிலே போட்ட கூப்பாட்டில் கனகலிங்கம் அஞ்சி நடுங்கிப்போய்விட்டான்.

"ஏ! கனகலிங்கம், உன் மகனைக் கண்டித்து வை. அவனுக்குக் கண்கடை தெரியவில்லை; ஆர் ஆருக்கு என்ன மாதிரி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொடு. கண்ட நிண்டதுகளெல்லாம் என்ரை பிள்ளையிலை கைவைக்கவும் ஆச்சோ?" என்று மனிதன் குதியாய்க் குதித்த அந்த வேளையில்......

கனகலிங்கம் உள்ளத்தால் செத்து விட்டான். செத்தே போய்விட்டான்.

பழைய புதிய சிந்தனைகளிலே ஈடுபட்டு யந்திர கதியிலே திரும்பிய கனகலிங்கத்திற்குக் காரியாலயத்தில் ஓர் அழைப்பிதழ் காத்திருந்தது. அதை இலிகிதர் கருணாகரம்பிள்ளை அவனிடம் கொடுத்தார்.

திரு. சு. கனகலிங்கம் அவர்கள்.

அன்புடையீர்,

தாங்கள் கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளாய் எமது கல்லூரியில் ஆற்றிய தன்னலமற்ற சேவையைப் பாராட்டு முகமாக ஒரு பிரியாவிடை வைபவம் இன்று பிற்பகல் நிகழும். அதற்குத் தாங்கள் தவறாது வருகை புரிந்து கௌரவிக்க வேண்டும் என அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்பும் உண்மையும் உள்ள
அதிபரும், ஆசிரியரும், ஊழியரும், மாணவரும்.

கனகலிங்கத்திற்கு மீண்டும் தலையைச் சுற்றியது; பியோன் கனகலிங்கம் திரு. கனகலிங்கம் அவர்களாக மாறி, பிரியாவிடை நாயகனாக அதிபர், ஆசிரியர்களுக்குச் சமதையாக அமரப் போகின்றானா?

கைநிரம்பிய பரிசுப் பொருள்களோடும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் அன்புரைகளோடும் அன்று பிற்பகல் வீடு திரும்பிய போது, கனகலிங்கத்தின் கண்களோடு இதயமும் கண்ணீர் வடித்தது.

இந்தக் காலத்திலும் மனிதத்தன்மை, நன்றியுணர்ச்சி என்பன செத்துவிடவில்லை. இடைக்கிடை மூர்ச்சையாகிக் கிடந்தாலும் சந்தர்ப்பம் வரும்போது அவை விழித்துக் கொள்ளத்தான் செய்கின்றன என்பதை அவன் தன் அநுபவத்திலே அறிந்துகொண்டான்.

"கடந்த நாற்பத்திரண்டாண்டுகளாய் எமது கல்லூரியில் உண்மையோடுழைத்து வந்த திரு. கனகலிங்கம் அவர்கள் எமது நன்றிக்கு உரியவர். இக் கல்லூரியின் மூன்று தலைமுறைகளைக் கண்ட அவரின் அநுபவம் நிறைந்த உழைப்பு, கல்லூரி வரலாற்றில் பொன் எழுத்துக்களிலே பொறிக்கப்படும். அவரின் இடத்தை இன்னொருவரால் ஈடுசெய்யவே முடியாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவரை நினைத்துக் கொண்டே இருப்போம். அவரது ஓய்வு நாள்கள் மகிழ்ச்சி நிறைந்து விளங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

உணர்ச்சியாலே தளதளத்த குரலில் அதிபர் கூறிய இந்த வார்த்தைகளிலே கனகலிங்கத்தின் தன்னம்பிக்கை துளிர்த்தெழ, அவனைச் சுற்றிப் படர்ந்திருந்த தாழ்வு மனப்பான்மை சிறிது சிறிதாகக் கழன்று கொண்டிருந்தது.

(சிந்தாமணி 1967-11-24)

# 7

மூன்ருவது தலைமுறையின் கடைக்குட்டிப் பெண்ணுக்கும் சீதனம் தேடிவைக்கும் யாழ்ப்பாண மண்ணிலே, தப்பிப் போய் முளைத்த காளான் என்று நல்லதம்பியைச் சொல்வது, அவன் வரையிலே பெருமை தரத்தக்க விஷயந்தான். அடுத்த நேரக் கவலைக்குக்கூட இடமில்லாத வகையில் அவன் வாழ்க்கை உருண்டு கொண்டிருந்தது.

ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவன் பாத்தியதை கொண்டாடத் தொடங்கி, பாரம்பரிய உரிமை காரணமாகத் தனக்குச் சொந்தமாகி, ஈட்டுக்காரன் கையிலே இழுபறிப்படுங் காணியிலே அவன் 'இராசா' மாதிரி இருந்து வருகிருன்.

தெருவுக்கும் நல்லதம்பியின் காணிக்குமிடையே, சாதி, இன, வர்க்கப் பிரிவுகளின் ஏற்றத் தாழ்வை எடுத்தியம்புவதுபோல, மேட்டுப் பள்ளப் பிரச்சினை அன்றிருந்து இன்றுவரை அழியா மேனியாய் நிலவி வருகின்றது. மழைக்காலத்திலே ஊர்காவற்றுறையின் கடற்கோட்டைபோல வெள்ளக் கடலிலே அவனது 'அரண்மனை' மிதந்துகொண்டிருக்கும். கோடை நாள்கள் கொஞ்சம் மேல். இரட்டை இந்திரக் கண்கள் போல், குடிசைக் கூரையின் இரண்டாயிரம் துளைகளிலும் சூரிய ஒளி ஊடுருவிப் பாயும்போது, நல்லதம்பியின் வம்ச விளக்குகள் புறங்கையால் அந்த ஒளிப் பொட்டுகளை மறைத்துக்கொண்டு 'எக்ஸ்ரே' பிடிக்கும் காட்சி மறக்க முடியாதது.

**ஒழுங்கை**

அந்தப் பதினுறடிக் குச்சினுள்ளே அந்தப்புரமும், அத்தாணி மண்டபமும், அட்டிற்சாலையும் அமைத்துக் கொண்டு வாழ்வதற்கு நல்லதம்பியின் 'பட்ட மகிஷி' பழக்கப்பட்டிருந்தாள் என்ருல், அதற்கு நல்லதம்பியின் அதட்டல், மிரட்டல், அடியுதைகள் மாத்திரம் காரணமல்ல. 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிடாத' அந்தப் பெட்டைப் பண்பையுந்தான் கூற வேண்டும். அவள் இலங்கைச் சனக் கணிப்புக்கு ஒரு சவால். பூர்வ ஜென்மத்திலே பன்றியாகவோ, பூனை யாகவோ பிறந்திருப்பாளோ? அந்த வாசனுமலம் இந்தப் பிறவியையும் தொடராதிருந்தால், ஒற்றையும், இரட்டையுமாக வருடந் தவருது 'போட்டு'க்கொண் டிருக்க முடிந்திராது. 'மருத்துவ மனைகளிலே' பாத பங்கயங்களைப் பதித்திடும் பாவையர் வரிசையிலே அவ ளது பெயர் இடம்பெருமைக்குக் காரணம், மகப்பேற் றையும் அவள் அவசிய கருமங்களிலே ஒன்றைப்போலக் கருதி நடத்தி வந்ததாக இருக்கலாம். இப்பொழுதும்...

நல்லதம்பியின் குழந்தைச் செல்வங்களால் காற் றைத் தவிர மற்ற எதையும் சாப்பிட்டுச் சீரணிக்கவும் முடியும். காற்றுக்கு வடிவம் இல்லாமல் இருந்ததோ, அது தப்பியதோ! இல்லாவிட்டால் மாதத்தில் பத்து நாள்கள் சுருட்டுச் சுற்றி ஐம்பதோ, அறுபதோ உழைத்து எழுபது, எண்பது ரூபாவிற்குத் 'தாகசாந்தி' செய்யும் தந்தைக்கு அவர்களால் ஈடு கொடுக் முடிந் திராது.

நல்லதம்பியின் மூத்தவனுக்கு வயது பதின்மூன்று. இரண்டாமவனுக்குப் பதினென்று. இருவரின் தொடை களும் கன்றிப்போகிற நாட்களிலேதான் வீட்டிலே அடுப்பு புகையும். அவர்கள் அன்று சுருட்டுக்கு நூல் சுற்றி — அடிகள் ஏச்சுக்களுக்கிடையில் — ஒன்ருே, அரையோ கொண்டுவந்து 'கூப்பன் அரிசி' வாங்கிவிட் டார்கள், என்பதுதான் அதன் அர்த்தம்.

நல்லதம்பிக்கு இதைப்பற்றியெல்லாம் அக்கறையில்லை. அவன் ஒரு ஞானி. 'தாமரை இலைத் தண்ணீர்', 'புளியம்பழ ஓடு' என்பவையெல்லாம் இந்த நிஷ்காமிய கர்மிக்காகவே ஏற்பட்ட உவமைகள். 'சோறு கண்ட நாளே திருநாள்' என்று சல்லாரி தட்டிச் சங்கூதிப் பாடாத குறை! மனைவியின் பன்னுடைச் சேலைக்கும், நல்லதம்பியின் 'குசேல' வேட்டிக்கும், பெரும்பான்மை வாரிசுகளின் பிறந்தமேனிக் கோலத்திற்குமிடையே பருவகாலங்கள் வந்து வந்து போய்க்கொண்டிருக்கின்றன.

நல்லதம்பி 'கன்னித்தமிழ்' போல இருந்தபடியே இருந்து வருகின்றான்.

## (2)

நல்லதம்பியின் வீட்டிற்குக் கிழக்குப் பக்கமாக ஒருச்சொழுங்கை. அதற்கு இரண்டு பக்கங்களிலும் பெரிய பனங்காணிகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குடும்பம் பரம்பரை பரம்பரையாக வசித்து வருகின்றது.

இவர்களிலே வீதியோரக் காணிகளில் வசித்துவரும் நல்லதம்பியும், சின்னப்புவும் அதிர்ஷ்டம் செய்தவர்கள். மற்றவர்களுக்குப் போக்குவரத்து எப்பொழுதும் கஷ்டந்தான். ஆறே அடி அகலமான ஒழுங்கையான படியால் காரோ, மாட்டுவண்டியோ அதற்குள் வந்ததென்ற சரித்திரமே இல்லை!

ஆனால், கலியாண வீடுகளோ, மரண வீடுகளோ, நோய் நொடிகளோ வராமல் இருக்கின்றனவா?... அந்த காலங்களிலேதான் தொல்லை.

நல்லதம்பியின் பின்வளவுக்காரனான செல்லையா, தன் மனைவி பிரசவ வேதனை வந்து துடித்துக்கொண்டிருந்தபொழுது, அவள் கதறக் கதறக் குண்டுக் கட்டாய்த் தூக்கிவந்துதான் தெருவிலே காரில் ஏற்ற வேண்டியிருந்தது. சின்னப்புவின் இரண்டாவது வளவு

உரித்தாளியான கந்தசாமி இறந்தபொழுதும் இப்படித்தான். கந்தசாமி தூலதேகி; யானைப் பாரம்! அந்தப் பாரிய சடலத்தைப் பெட்டிக்குள் வைத்துத் தெருவரை தூக்கி வந்தது ஒரு பெரிய சாதனை. பிரேதப் பெட்டியைச் சுமந்தவர்களில் ஒருவன் இராசையா. அவனுக்கு அன்று பிடித்த 'நாரிப்' பிடிப்புத்தான்; இன்றும் அது அவனை விடாப்பிடியாக அலைத்துக் கொண்டிருக்கிறது.

இப்படித் தலைமுறை தலைமுறையாகப் பல கஷ்டங்கள் என்றாலும் ஒழுங்கையைப் பெருப்பிக்க வேண்டும் என்று ஒரு ஈ, காக்கை கூட எண்ணிப் பார்த்ததில்லை. எப்பொழுதோ ஒரு நாளுக்கு ஏற்படுகிற கஷ்டம் பற்றிக் காலமெல்லாம் யோசிக்கவும், தீர்க்கதிருஷ்டியோடு செயற்படவும், அவர்களுக்கு ஓர் 'அரசியல்வாதி'யின் மூளை தேவைப்பட்டது போலும்!

## (3)

இந்தச் சூழ்நிலையிலேதான் செல்லையாவின் காணி விலைக்குப் போயிற்று. ஏதோ 'பிஸினஸ்' செய்யப் போவதாகப் பாவனை பண்ணிக்கொண்டு கிடைத்த காசுக்குக் காணியைத் தள்ளிவிட்டு, அவனுங் குடும்பமும் ரெயிலேறிவிட்டார்கள்.

அந்தக் காணியின் புதிய உரிமையாளரான கி. க. மு. நாகலிங்கம்பிள்ளை பெரிய பணக்காரர். கெக்கிராவையிலும், கொழும்பிலும் அவருக்குச் சுருட்டுக் கடைகள் உண்டு. எட்டு வயதிலே ஊர்மண்ணைத் தட்டிவிட்டு, அநாதையாக எங்கெல்லாமோ சுற்றித் திரிந்த 'சந்நாசி' நாகலிங்கம், ஊருக்கு நாகலிங்கம் பிள்ளையாகத் திரும்பிப் பெரிய இடத்திலே விவாகம் செய்துகொண்டு, இன்று இலட்சம் இலட்சமாகப் புரட்டுகின்றார்.

அவருக்குக் காணிகள் வாங்கி வீடுகள் கட்டுவது ஒரு கலையாகி, யோகமாகி இன்று வெறியாகவே மாறியுள்ளது. காணிகளை மலிவாகத் தட்டுவதிலே மனிதன் புலி

தான்! பணத்தையும் நிலத்தையும் நிறுத்துப் பார்த்து, எதிர்காலத்தில் நிலத்தின் நிறையே கூடும் என்பதை உணர்ந்தவராய், எங்கெல்லாம் காணி கிடைக்கும் என்று மோப்பம் பிடித்துத் திரிந்தவருக்குச் செல்லையா கிடைத்தான்.

வெளியிடங்களிலே வியாபாரஞ்செய்து ஆயிரம் ஆயிரமாய்க் குவிக்கலாமென்று சங்கக்கடை 'சேல்ஸ்மன்' செல்லையாவை இந்த அறுபத்து மூன்றும் ஆண்டிலுங்கூட ஆசைகாட்டி, மூட்டை முடிச்சுகளோடு அனுப்பிவைத்த பிள்ளையின் திறமையே அலாதியானது தான்!

(4)

பிள்ளை காணியை வாங்கினார். அடுத்த கட்டம் வளவின் பெறுமதியைக் கூட்டுவது. "அதற்கு வழி...? ஒழுங்கையைப் பெருப்பித்தால்...? அதற்குப் பிறகு ஓர் 'அமெரிக்கன் பாஷன்' வீடு கட்டி ... அதையும் மிக விரைவாகச் செய்யவேண்டும். காலம் போகிற போக்கில் வாடகைக்கு விடுவதிலேயே ஆயிரக் கணக்கில் 'அப்பி' விடலாம். யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வரும் சிங்கள உத்தியோகத்தர்கள் இருக்கவே இருக்கிறார்கள்... அவர்களுக்கு ஒன்றுக்குப் பத்தாய் வாடகை சொல்லிக் கண்ணைக் கட்டி அடிக்கலாம்... நேற்றைக்குக் கூடக் கல்விக் கந்தோர்க் 'கிளாக்' பெரேரா — கெக்கிராவையில் பிள்ளையின் வாடிக்கைக்காரன் — வீடு விசாரித்தான். அவரின் கெட்டகாலம்! ஒரு கிழமைக்கு முன்புதான் அவருக்குச் சொந்தமான, 'வைமன் ரோட்டு' வீடு குறைந்த வாடகைக்குத் தூரத்து உறவினன் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டது.

'அது இருந்தால்...?'

'பரவாய் இல்லை... இந்த வளவும் 'டவுனு'க்குக் கிட்டத்தான். வீடும் ஒழுங்கையும் சரியென்றால் இரண்டு மாதத்திலேயே 'பறத்தி'விடலாம்; பார்ப்போம்.'

நாகலிங்கம்பிள்ளை திட்டம் தீட்டுவதிலே 'நெப் போலியன்' தான்! பிறகென்ன? பக்கத்து வளவுக்காரர் களுக்குப் பசையடித்து ஒழுங்கையைப் பெருப்பிப்பதன் அவசிய அவசரம் பற்றி வலியுறுத்தத் தொடங்கிவிட் டார். ஏதோ அவர்களுக்காகத்தான் சொல்வதுபோல வும் தமக்கொன்றும் அவசியமில்லை என்ற மாதிரியும் அவர் கதைத்தார்.

ஆரம்பத்திலே அவருடைய 'தூது' தோல்வியைத் தான் காண நேரிட்டது. யாழ்ப்பாணத்து மண் அல்லவா? ஒருவரிடமும் அவரின் பாச்சா பலிக்கவில்லை. "போங் காணும்" என்று உதறி எறிந்துவிட்டார்கள். "ஒவ் வொரு காணிக்காரரும் தமது வேலிகளிலிருந்து மூன்றடி தூரம் நிலம் விட்டால் எல்லாருக்கும் வசதியான ஒழுங்கை அமையுமே!" என்று பிள்ளை கெஞ்சாத குறை யாகக் கேட்டபோது, "மூன்றடி என்ன, மூன்று அங்குலங் கூட விடமுடியாது" என்று அவர்கள் முரண்டு பண்ணி னுர்கள். பூர்வகால அசுரர்களின் உயிர்கள் கிளி, மைனு போன்ற பறவைகளின் உடல்களுக்குள்ளே பாதுகாக்கப் பட்டனவாம். யாழ்ப்பாண வாசிகளின் உயிர்களோ அவர்களின் வளவு நிலங்களுக்குள்ளேதான் ஒளித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்! நிலத்தை விடும்படி கேட்டபொழுது அவர்கள் துடித்த துடிப்பு!

ஆனுல், பிள்ளை சோர்ந்து போய்விடவில்லை. கிராமச் சங்கத் தலைவரையும், அங்கத்தவரையும், அவரையும் இவரையும் கூட்டிக்கொண்டு 'ஞானுேபதேசம்' செய்ய லானுர். சிறிது சிறிதாக நாகலிங்கப் பரமாத்மாவின் கீதோபதேச வலையிலே, அந்த ஒழுங்கைப் பார்த்திபர் கள் ஒவ்வொருவராய் விழுந்து கொண்டிருந்த வேளை யிலே...

நல்லதம்பி மாத்திரம் அழுங்குப்பிடி பிடித்துக் கொண்டேயிருந்தான்...

எதையுமே அக்கறைப்படுத்தாத அவன், இந்த விஷயத்திலே மாத்திரம் இவ்வளவு பிடிவாதம் பிடிப்பது ஏன் ?

யாருக்கும் விளங்கவே இல்லை.

ஆச்சரியமாக இருந்தது.

## ( 5 )

விரலிடுக்குகளுக்கிடையே பாலைப்பழங்களின் வடிவில் குமிழி கட்டியிருந்த கொப்பளங்களை, நகங்களாலே குத்தி, பாய்ந்தோடுகிற சீழின் அழகிலே தன்னை மறந்து ஈடுபட்டுக்கொண்டிருந்தாள் நல்லதம்பியின் கடைக் குட்டி இராசாத்தி. கொட்டிலுக்கு முன்புறத்திலே காலைப்பரப்பி நீட்டியபடி தொடையிடுக்கிலே, நல்லதம்பி முதலாள் வாங்கிவந்த ஊசிப்போன சுண்டலைக் கிழிந்த 'குஞ்சு'ப் பெட்டியிலிருந்து எடுத்தெடுத்துக் கொறித்துக்கொண்டு எங்கோ ஞானக்கொலுவில், சாயங்கால மயக்கத்தோடு மயக்கமாய் ஒன்றிக் கிடந்தது, ஆறுவது குருத்து. முதலாம், இரண்டாம் இலக்கங்கள் இன்னும் சுருட்டால் திரும்பவில்லை. கால்முளைத்த மூன்றும், நாலும், ஐந்தும் பின்வளவுக் கொய்யா மரத்திலே ஏறிக் குரங்காட்டம் ஆடிக்கொண்டிருந்தன.

கொட்டிலுக்குள்ளே அப்புவும் ஆச்சியும் பிடிக்கும் சண்டையைப்பற்றி அங்கிருந்த 'ஜூனியர்' ஒன்றுக்குக் கூட அக்கறை இருந்ததாகத் தெரியவில்லை. சூரியன் உதிப்பதும், அஸ்தமிப்பதும், இரவு வருவதும் போவதும், பட்டினி கிடப்பதும் சாப்பிடுவதும் எல்லாம், அப்பு ஆச்சியின் ஊடலும் கூடலும் போன்றவைதாம் என்று நினைத்துப் பழக்கப்பட்டவை, அவை. குதித்துக் குதித்து ஓடிவரும் பசுக்கன்று பூமியை இடித்துக் கொம்புக்கு மண் எடுப்பதுபோல, ஏதோ ஒரு துன்ப இன்பானுபவ நிலையிலே அங்குமிங்குமாகக் குழுவிக்கொண்டு நின்றுங்.

கிடந்தும், ஓடியும், பாடியும் விளையாடின; விளையாடிக் கொண்டே இருந்தன.

"இஞ்சை பாருங்கோ, அயலோடை கொழுவிக் கொண்டு அச்சமில்லாமல் இருக்கலாமே? நாகலிங்க மையாவும், கிராமச்சங்க நொம்பரும் திரியாமல் திரியுதுகள். எல்லாருக்கும் போலைதானே எங்களுக்கும்? ஒழுங்கை வந்தால் எங்கடை காணியையும் மூண்டு நாலாய்ப் பிரிச்சுப் பிள்ளையளுக்கு ஒரு காலத்திலை குடுக்கலாம்...உம்... எண்டைக்கோ ஒருநாளைக்கு அதுகளும் வாழத்தானே வேணும்?"

நல்லதம்பி சிரிக்கிறுன்... "போடி மடைச்சி! அவை திரிஞ்சால் என்னவாம்? என்ரை மூதாதையள் ஆண்டனுபவிச்ச நிலம் இது. இதிலை ஒரு ஊசி குத்துற இடத்தையும் விட்டுக்கொடுக்க மாட்டன். ஓ! நான் ஆர் தெரியுமே? கறுப்பற்றை காசியர் பரம்பரை... உவங்கள் நேற்றைக்கு வந்தவங்கள் — உவங்கடை சொல்லுக்கு நான்... நான்... இந்த நல்லதம்பி கட்டுப்படுறதோ? ஒருக்காலும் நடவாது." நல்லதம்பி நெஞ்சிலே தட்டித் தட்டிப் பேசும்போது, வெறியேறிச் சிவந்த கொள்ளிக் கண்களிலே ஆணவம் நெறிகட்டி நிற்கிறது.

'பட்டமகிஷி' சாந்தமாகப் பதிலளிக்கிறுள். "ஏனணை? உங்கடை காணியை ஈட்டுக்காரன் எடுத்துக் கொண்டால் என்ன செய்வியளாம்?"

நல்லதம்பிக்குப் பொறுக்கக்கூடவில்லை. எல்லை கடந்த ஆத்திரத்திலே அவனது உதடுகள் வலிகாரனுடையவைபோலக் கோணிக்கோணி இழுக்கின்றன. தட்டியிலே செருகியிருந்த கொடுவாக்கத்தியை உருவியெடுத்துப் பத்திரங்காட்டியபடி பல்லை நெருமுகிறுன்; "என்ரை காணிக்கை எந்தக் கொம்பனடி கால்வைக்கப் போறவன்? கரிக்குடல் எடுத்துக் கையிலை குடுப்பன்... ஓ!"

சிறிது மௌனம்... பட்டமகிஷி செருமிக் கொண்டு, "ஏதோ ஐம்பதை நூறைத் தருகினமாம். விட்டுக்

கொடுத்தால்...'' என்று அவள் தொடுத்த வார்த்தைகள் வாயிலிருந்து விடுபடவே இல்லை... அங்கு இரத்தம் குபுகுபு என்று பாய்கிறது. இரத்தம்... நல்லதம்பியின் கைவண்ணம் அது...

அத்தோடு அவன் நின்றுவிடவில்லை. அவனது கால் வண்ணம் எக்கச்சக்கமாகப் படாத இடத்திலே பட்டு அவள் சரிகிருள்...

வழக்கம்போல ஒப்பாரி... பிள்ளைகள் ஓடிவந்து கலுமுலுவென்று கத்துகின்றன... அதையும் விஞ்சியபடி, நல்லதம்பி வீரமுழக்கம் செய்துகொண்டு வெளியே கிளம்புகிருன்...

''உந்தப் பயல் நாகலிங்கத்தின்ரை ஐம்பதையும் நூறையுமே நான் நம்பியிருக்கிறன்? என்ரை ஆச்சி வழிச்சுக் குடுக்கத் திண்ட எச்சிக்கல்லை, நாலு சேம் உளைச்சு இரண்டு வீட்டைக் கட்டினுல் எனக்குப் பயமோ? இல்லைக் கேக்கிறன்... என்ரை உசிர் போனுலும் அவனிட்டைக் கை நீட்டுவனே? உது நடவாது.''

## (6)

நல்லதம்பி வீடு திரும்பியபோது அழுகையும் புலம்பலுமாகப் பிள்ளைகள் அவனை வரவேற்ருர்கள். ஒரு நாளுமில்லாத திருநாள்... 'ஏன்? எதற்கு?...' என்ற கேள்விகளுக்கே இடமில்லாது உள்ளே இருந்து வெளிவந்த அனுக்கம், 'பட்டமகிஷி'யின் நிலையை எடுத்துரைத்தது.

கச இருட்டுக்குள், நெருப்புக் குச்சியின் மின்மினி ஒளியிலே வழி தடவிக்கொண்டு அவளுக்கருகே அவன் போனுன். அவள் கிடந்த கிடை... இரத்தச் சகதியிலே, வேதனையில் நெளிந்தபடி... ஐயோ!

அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது... அவனுடைய ஒன்பதாவது வாரிசு உலகத்தைப் பார்க்காமலே, திரும்பிச் சென்று... அதனுல்...

'பட்டமகிஷி' உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு எழுந்திருக்கப் பார்த்தாள். முடியவில்லை...

நல்லதம்பி போத்தல் விளக்கை ஏற்றிவிட்டு அவள் பக்கத்திலே வந்து உட்கார்ந்தான்... பிள்ளைகள் புலம்பிக்கொண்டே இருந்தார்கள்...

'ஆச்சி! ஆச்சி! ஆச்சி! எங்கடை ஆச்சி.'

நல்லதம்பியின் நெஞ்சின் அடித்தளத்திலே தூங்கிக் கிடந்த பாச உணர்விலே 'அந்தச் சொற்கள்' முட்டி எதிரொலித்தன.

பதினேந்தாண்டுகளின் ஊமைத் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த பாசத்தலை அவனை முறுக்கிப் பிழிந்தது. அநாதைத்தனத்தை முகத்திலே எழுதி ஒட்டிக்கொண்டு நின்ற பிள்ளைகளின் விம்மலோடு விம்மலாய்க் கண்ணீரோடு கண்ணீராய் கரைந்துகொண்டிருந்தான் அவன்.

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள்... நான்காம்...

அந்த நாள் நல்லதம்பியின் பட்டமகிஷிக்கு விடியவேயில்லை. அவளின் பாரம் அனைத்தும் நல்லதம்பியின் தலையிலேதான் விடிந்தது...

ஐந்தாம் நாள்...

படலைப்பக்கம் போதாதென்று ஒழுங்கை மூலைப் பக்கத்தால் வேலியை வெட்டி, அந்த வழியாலே 'பட்டமகிஷி' தனது நெடும்பயணத்தைத் தொடங்கினுள்.

ஒரு மாதத்திற்குப் பிறகு அவளின் அந்தியேட்டிக் கிரியைகள், ஒழுங்கையை விஸ்தரித்த நாகலிங்கம்பிள்ளை தந்த நூறு ரூபாக் காசிலே, சுற்றமித்திரர் சூழச் சிறப்பாக நடந்தேறின.

(தினகரன் 1965-11-14)

# 8

அன்று ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணப் புகையிரத நிலையம் பிரயாணிகளால் நிரம்பி வழிந்தது.

மத்தியானவேளை, அனற் காற்று வீசிக்கொண்டிருந்தது. ஒரே புழுக்கம், புழுக்கத்தை மீறிய சன நெரிசல்.

யாழ்தேவி வருவதற்கு அறிகுறியாக மணி அடித்தது. இளைஞர்கள் சிலர் 'பிளாட்போமி'லிருந்து இறங்கி மறுபக்கத்திற்கு ஓடினார்கள். அந்தப் பக்கத்தாலே நெருக்கடி இல்லாமல் ஏறிக்கொள்ளலாம், என்ற நப்பாசைதான் காரணம்.

யாழ்தேவியும் வந்தது, இடி தள்ளுகளுக்கிடையே ஒருபடியாகப் புகைவண்டிக்குள் ஏறிவிட்டேன். இனி இடந்தேடு படலம்.

ஏறக்குறைய எட்டு மணித்தியாலங்களைப் புகைவண்டியிலே கழிக்க வேண்டும். 'கோணர் சீட்' கிடைத்தால் நல்லது. சன நெருக்கிடையே அந்த ஆசை கானல் நீர்தான். என்றாலும் மனம் கேட்கிறதா? 'கொறிடோர்' வழியாகச் 'சூட்கேசை'யும் சுமந்தபடி நடந்தேன். சூட்கேஸ் பிணப் பாரமாயிருந்தது. அதற்குள்ளேதான் எத்தனை பொருள்கள்! நல்லெண்ணெய்ப் போத்தல் இரண்டு, புழுக்கொடியற் பார்சல் ஒன்று. ஒரு முருங்கைக்காய்க் கட்டு. இத்தனையும் அயல்வீட்டுக்காரர்கள் தத்தம் உறவினர்களிடம் சேர்ப்பிக்கும்படி சுமத்திய சுமைகள்! இவற்றைவிட எனது உடைகள், சேட்டிபிக்கற்றுகள் அடங்கிய 'பைல்' ஒன்று.

குரு

'கோணர் சீட்' ஆசையிலே கிடைத்த சிறிய ஆசன வசதிகளையும் இழந்து, வழியில் நின்ற பிரயாணிகளையும் இடித்துத் தள்ளியபடி முன்னேறினேன்.

எத்தனையோ தெரிந்த முகங்கள். ஆனால், தெரியாததுபோலப் பாவனை! இடம் கேட்டுவிடுவேனோ என்ற அச்சம்! எனக்கும் அவர்களைத் தெரிந்துகொண்டதாய்க் காட்ட விருப்பம் இல்லை. நின்று பேசிக்கொண்டிருந்தால் 'கோணர் சீட்' கிடைக்காது.

ஒன்று, இரண்டு மூன்று பெட்டிகள் கடந்தாயிற்று. என் எண்ணம் இன்னும் நிறைவேறவில்லை.

அயர்வோடு பெட்டியை நடுவழியில் வைத்தபடி பக்கங்களிலுள்ள ஆசனங்களைப் பார்த்தேன். ஒன்றில் ஏறக்குறைய ஐந்து பேர் நெருக்கியடித்தபடி அமர்ந்திருந்தார்கள். மறு ஆசனத்திலே ஒரே ஒருவர் நீட்டி நிமிர்ந்து தலைக்குத் தலையணையாகச் 'சூட்கேஸ்' ஒன்றை வைத்தபடி கண்களை மூடிப் படுத்திருந்தார்.

எனக்கு எரிச்சலாய் இருந்தது. இத்தனை பேரின் கஷ்டத்திலே ஒருவருக்குச் சுகம்! ஏதோ சீதனப் பொருளிலே உரிமை பாராட்டுவதுபோல அந்த ஆசனத்தைத் தனியுடைமையாக்கிக் கொழும்புவரை அவர் சுகமாகப் பள்ளிகொள்ளப் போகிறார். இதற்கு விடக்கூடாது.

அவரின் காலிலே தட்டி எழுப்ப எண்ணினேன். அதேவேளையில் வேறோர் எண்ணம் தடுத்தது. 'இவர் தட்டி எழுப்பினாலும் எழும்பப்போவதில்லை. எழுந்தாலும் ஏதோ சுகவீனம் என்று நடித்துக்காட்டிச் சாக்குப்போக்குச் சொல்லுவார். அல்லது சீறி விழுவார். அநுராதபுரம் வரை அவரின் வீரத்தனத்துக்கு 'லைசென்ஸ்' உண்டு!

எனவே அவரை எழுப்பாமல் அடுத்த ஆசனத்தை நோக்கிச் சென்றேன். சூட்கேசை வைக்க நான் குனிந்த

பொழுது "சேர்! இப்படி வாருங்கோ" என்றது ஒரு குரல்.

நிமிர்ந்தேன், அங்கே என் பழைய மாணவன், சக்திகுமார் தன் ஆசனத்திலிருந்து எழுந்து என்னை அதில் இருக்க வருமாறு அழைத்தான்.

தயங்கினேன். ஒருவருடைய வசதியீனத்தில் இன்னொருவர் வசதி பெறுவதா என்று மனிதத் தன்மை சற்று மேலோங்கி நின்றது, ஒருகணம்.

ஒருகணந்தான், ஆனால் 'கோணர் சீட்' ஆசை அந்தத் தயக்கத்தை உதட்டளவிலே கொண்டுவந்து நிறுத்தியது! "பறுவாயில்லை, நீர் இரும். நான் வேறு இடம் தேடுறன்" என்று சொல்லியபடியே அவன் எழுந்திருந்த ஆசனத்தை நோக்கி முன்னேறினேன்!

"நான் கிளிநொச்சிவரை தானே? நீங்கள் வசதியாய் இருங்கோ சேர்" என்று கூறியபடி சக்திகுமார் என் சூட்கேசை வாங்கிக்கொண்டான்!

அவன் அதை மேலேயிருந்த தாங்கியில் வைத்த பொழுது நான் வசதியாக அவன் இருந்த 'கோணர் சீட்டில்' அமர்ந்தேன்.

அவன் எனக்குச் செய்த மரியாதையையும், உதவியையும் கண்ட சக பிரயாணிகள் எங்கள் இருவரையும் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். 'இந்தக் காலத்திலும் இப்படி ஒரு மாணவனா?' என்ற கேள்விக்குறி அவர்களின் உள்ளங்களிலே விழுந்திருக்க வேண்டும்.

எனக்கும் வியப்புத்தான். இரண்டு ஆசனங்களுக்கு அப்பால் நான் வந்துகொண்டிருந்தபொழுது, என்னை ஒரு காலத்தில் கற்பித்த ஆசிரியர் என்னைப் பார்த்து, அறிந்ததற்கு அறிகுறியாக முறுவல் பூத்துத் தலையசைத்தபோது, தொணதொணப்புக்காரரான அவருக்குத் தப்பிவர அவரைத் தெரியாததுபோலப் பாவனை பண்ணி வந்தவன் நான். ஆனால், இங்கோ...

(2)

சக்திகுமாரை நிமிர்ந்து தலையிலிருந்து கால்வரை பார்த்தேன். கால்களை இறுக்கும் 'ரைற்.பான்ற்', டெரிலின் சேட், கன்னத் தாடி, அரும்பு மீசை, பரட்டைத் தலை ஆகிய அலங்காரங்களோடு இருக்க வேண்டியவன், என்று என்னால் கற்பனை பண்ணுதிருக்கக்கூடவில்லை.

ஆனால், அவனோ, அரைக் கை வெள்ளைச் சட்டையும், கோடன் சாறம் ஒன்றும் அணிந்திருந்தான். கன்னத் தாடியோ, அரும்பு மீசையோ, பரட்டைத் தலையோ இல்லை. சாதாரணமாகத்தான் இருந்தான், எனக்குச் 'சப்' என்று போய்விட்டது.

அவனைப் பார்த்துச் சிரித்தேன். அவனும் சிரித்தான். ''கொழும்புக்கா போறியள் சேர்'' என்றான்.

''ஓமோம்! ஓர் 'இன்டெர்வியூ'விற்குப் போறன்.''

''அடிக்கடி மாஸ்டர்மாரைப் புகைவண்டியிலை சந்திக்கிறன். எல்லாரும் 'இன்டர்வியூ' எண்டுதான் சொல்லினம்'' என்று எனக்குப் பக்கத்திலிருந்தவர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

சக்திகுமார் சிரிக்கவில்லை. அவன் பார்த்த பார்வையில் அவர் அடங்கிப்போய்விட்டார். அவர் அதற்குப் பிறகு எங்கள் உரையாடலில் தலையிடவில்லை.

''இப்பவும் அங்கைதானே படிப்பிக்கிறியள் சேர்'' என்று சக்திகுமார் கேட்டான்.

''ஓம், நீர் என்ன செய்கிறீர்?''

''நான் கிளிநொச்சியில் வயல் செய்யிறன் சேர்'' என்று அவன் சொன்னபொழுது என்னால் நம்பமுடியவில்லை.

அவனுடைய தகப்பனார் கல்லூரி ஒன்றின் அதிபராயிருந்தவர். தாய் இப்பொழுதும் ஆசிரியையாகக்

கடமையாற்றுகிருர். சக்திகுமார் அவர்களின் ஒரே மகன்.

"என்ன, வயல் செய்யிறீரோ? நீர் எஞ்சினியருக்குப் படித்துக்கொண்டு இருக்கிறீர் என்றல்லவோ நினைத்தேன்?" என்று என் வியப்பைக் கேள்விச் சரங்களாய் அடுக்கினேன்.

சக்திகுமார் சிரித்தான். "எல்லாரும் எஞ்சினியராஞல் இலங்கை தாங்காது சேர். எனக்குத்தான் படிப்பு அவ்வளவு ஓடாது என்று உங்களுக்குத் தெரியுந்தானே? கல்லூரியை விட்டதும் கொழும்பிலே நாவலர் ஹோலிலே சேர்ந்து 'அட்வான்ஸ் லெவல்' இரண்டு முறை எடுத்தன். சரிவரவில்லே. விட்டுவிட்டு அப்பாவின் வயலைச் செய்யத் தொடங்கிட்டன்."

எனக்கு இன்னமும் நம்பமுடியவில்லே. சக்திகுமாரின் தந்தை தம் மகனின் எதிர்காலத்தைப் பற்றிப் பெரிய பெரிய கனவுகளேக் கண்டது எனக்குத் தெரியும். கீழ் வகுப்புக்களில் அவன் படித்த காலத்திலேயே அடிக்கடி எங்கள் கல்லூரிக்கு வருவார். அவனுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களேத் தனித்தனி சந்தித்து அவன் முன்னேற்றம்பற்றி விசாரிப்பார். சிலவேளைகளில் இந்த விசாரணை எங்களுக்குத் தலைவேதனையாய் இருப்பதும் உண்டு. ஆஞலும் ஒரு கல்லூரியின் அதிபர் என்ற வகையில் அவரின் தொந்தரவுகளேயெல்லாம் சகித்து வந்தோம்.

"சக்திகுமாருக்கு இலங்கைக் கல்வி சரிப்படாது' அவன் 'அட்வான்ஸ் லெவல்' பாஸ் பண்ணினதும் இங்கிலாந்துக்கு அனுப்பப் போறன். 'மெக்கானிக்கல் எஞ்சினியரிங்' பயிற்சி பெற்று வந்தாஞல், நல்ல எதிர்காலம் உண்டு. அந்தப் பயிற்சி முடிந்து 'போஸ்ற் கிருட்யுவேற்' படிக்க விரும்பிஞலும் படிப்பிக்கத் தயாராய் இருக்கிறன்" என்று அடிக்கடி அவர் சொல்லுவார்.

"அப்பா இதற்கு எப்படிச் சம்மதிச்சார்? அவருக்கு நீர் படிப்பைவிட்டது பெரும் அதிர்ச்சியாய் இருக்குமே!" என்று கேட்டேன்.

"ஆரம்பத்திலே பெரும் வருத்தம்தான். இப்போது எல்லாம் சரியாய்ப் போட்டுது. மண்ணையும், பயிரையும் வாழ்க்கையையும் அவர் இப்ப நல்லாய் நேசிக்கப் பழகி விட்டார்" என்று சக்திகுமார் சிரித்தபடி சொன்னான்.

## (3)

படிக்கிற காலத்தில் சக்திகுமார் பெரிய வால். அதிபருக்கே அவன் பயப்படமாட்டான். அவன் வகுப்பிலிருந்தால் ஆசிரியர்களுக்கும் கலக்கந்தான்! அவர்கள் அவனோடு முரண்டினால் தொலைந்தது. அவர்களுக்குப் பட்டங்கள் வைத்துக் கல்லூரிச் சுவர்களிலும், கரும்பலகையிலும் எழுதிவிடுவான். கல்லூரி நாள்களில் அவன் நடாத்திய திருவிளையாடல்கள் மிகப்பல.

எனக்கு அவன் வைத்த பட்டம் தளிசை. எனக்குச் சற்றே கொழுத்த உடம்பு. கன்னங்களும் உப்பியிருக்கும். சக்திகுமாரின் கற்பனையிலே நான் 'தளிசை.'

ஒருநாள் தமிழ்ப் பாட நேரத்தில் சில மாணவர்கள் புத்தகம் கொண்டு வரவில்லை. அவர்களில் சக்திகுமாரும் ஒருவன். புத்தகம் கொண்டு வராதவர்களை வேறு வகுப்புக்களுக்குச் சென்று புத்தகம் வாங்கிவரச் சொன்னேன். சக்திகுமாரைத் தவிர மற்ற யாவரும் புத்தகங்களை வாங்கிவரச் சென்றார்கள். சக்திகுமார் செல்லவில்லை. எனக்குச் சரியான கோபம். ஆனாலும் அவன் செயலைக் கவனியாதது போல இருந்தேன்.

சென்றவர்களில் ஒரு சிலருக்குத்தான் புத்தகம் கிடைத்தன. "புத்தகம் உள்ளவர்களோடு புத்தகம் இல்லாதவர்கள் சேர்ந்திருங்கள்" என்று நான் கட்டளையிட்டேன். அதற்கும் அவனைத் தவிர்ந்த மற்றவர்கள் பணிந்து அவ்வாறே செய்தார்கள். ஆனால், சக்திகுமார்

தன் இடத்திலேயே இருந்தான். அவனைக் காப்பாற்ற எண்ணி அவன் பக்கத்திலே போயிருந்த அவன் நண்பன் செல்வராஜனையும் சக்திகுமார் அதட்டிக் கலைத்தான்.

இது என் பொறுமைக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. சக்திகுமார் இருந்த இடத்திற்குச் சென்று அவனை இழுத்துக் கோபந்தீர அவன் கன்னம் - முதுகு - பிடரி எல்லாம் அறை அறை என்று அறைந்தேன். அவன் அடி வேகம் தாங்காமல் வகுப்பறையிலிருந்து எழுந்து ஓடிவிட்டான். ஓடும்பொழுது, "வெளியிலே வாரும் உம்மைக் கவனித்துக் கொள்ளுறன்" என்று சொன்னான்!

நான் பயந்தேன்! அவனுக்குக் கல்லூரியின் சூழலிலிருந்த காவாலிகளோடு சிநேகிதம் உண்டு. தெருவில் நான் சைக்கிளிலே போகும்போது அவனும் அவன் கூட்டத்தினரும் ஏதாவது செய்துவிட்டால்... அடிபடுவதிலும் பார்க்க அதனால் உண்டாகும் அவமானத்தை எவ்வாறு சகிப்பது? நாளைக்கு மற்ற மாணவர்களும் இவன் வழியிலே செல்வார்களே!

நல்லகாலம். நான் பயந்ததுபோல ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், கல்லூரிச் சுவர்களெல்லாம் 'தளிசை' மயமாகிவிட்டது!

அதை நான் சகித்துக் கொண்டேன். தலைக்குமேல் வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்ற ஒரு திருப்தி!

பத்தாம் வகுப்பிலேயே 'லோங்ஸ்' அணிந்து நவநாகரிகச் சின்னமாய் நடமாடியவன் சக்திகுமார். படமாளிகைகளிலும், ஏன் கள்ளுக் கொட்டில்களிலும் தன் பாதபங்கயங்களைப் பதித்துத் திரிந்தவன்தானே?

இன்று......

எவ்வளவு அடக்கம்! எவ்வளவு மரியாதை! என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை,

(4)

எனக்கு ஒரு பழக்கம். படமாளிகையின் இருளிலும், றெயில் வண்டிகளிலும் ஒளிவு மறைவாகச் 'சிகரெட்' பிடிப்பதுதான் அது. 'சைவாசாரமுடையவர், ஒழுக்க சீலர் என்ற புகழுரைகளைக் காப்பாற்ற வேண்டுமென நினைத்து, மறைவிலே யாருக்கும் தெரியாமல் 'சிகரெட்' பிடிப்பதில் அப்படி ஓர் ஆசை! புகைவண்டியில் ஏறும் பொழுதே 'பிறிஸ்டல் பைக்கட்' ஒன்றும், தீப்பெட்டியும் வாங்கிச் சட்டைப் பையுள் போட்டிருந்தேன். பையினுள்ளே கை வைத்தபொழுது அவையிரண்டும் தட்டுப்பட்டன. ஆனால், சக்திகுமாருக்கு முன்னால் புகைக்கும் திருப்பணியைச் செய்யக் கூச்சமாயிருந்தது. ஆனால், புகைக்கும் ஆசையோ உள்ளத்தில் நெருப்பாய்ப் பற்றி எரிந்தது, ஆனாலும் அடக்கிக்கொண்டேன்.

''உமக்குப் படிக்கேல்லை என்ற மனக்குறை இல்லையா? கமம் செய்வதற்கு உமக்கு வெட்கம், கூச்சம் ஏற்படவில்லையா?'' என்று சக்திகுமாரைக் கேட்டேன்.

சக்திகுமார் சொன்னான்: ''கமத்தொழிலை நானே விரும்பி ஏற்றனான். காவாலி, கடைப்புளி எண்டு ஏச்சுப் பேச்சுக் கேட்பதிலும் இது மேல். இந்த வருடம்கூட எனக்கு வயல் செய்ததிலை எல்லாச் செலவும் போக இரண்டாயிரம் ரூபா மிஞ்சியது. என் முயற்சியாலை கிசுகிசு எண்டு வளர்ந்து பச்சைப் பசேலெண்டு நிற்கிற பயிரைக் காணுகையில் உண்டாகும் சந்தோஷத்துக்கு ஈடே இல்லை சேர்'!' இவ்வாறு சொல்லியபொழுது அவன் கண்களிலே புலப்பட்ட கனிவை என்னால் மறக்க முடியாது.

இருபது வருடமாக ஆசிரியராகக் கடமையாற்றி நான் இரண்டு ரூபா மிச்சம் பிடிக்கவில்லை. சக்திகுமாரோ ஒருசில வருடத்திலேயே இரண்டாயிரம் ரூபா மிச்சம் பிடித்துவிட்டான். கமத்தொழில் இவ

லேப் பொறுப்பு வாய்ந்த பெரிய மனிதனுக்குரியுள்ளது. இவனுக்கு முன்னால் நான் ஒரு தூசு... நான் கூனிக் குறுகிப் போனேன்.

## ( 5 )

சக்திகுமார் 'புபே' சென்று எனக்குச் சோடா வாங்கி வந்து தந்தான். கிளிநொச்சி வரும்வரை அவன் நின்றபடியே என்னோடு பேசிக்கொண்டு வந்தான். நான் இருக்கும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் கேட்க வில்லை.

இறங்கும்பொழுது கதவடியில் வைத்திருந்த பெரிய தொரு சாக்குச் சுருளை அநாயசமாகத் தூக்கித் தோளிலே வைத்தபடி எனக்குக் கையசைத்துப் பிரியா விடை அளித்தான்.

மெலிந்துயர்ந்த அவன் கம்பீரமாக நடந்து புகை வண்டி நிலையத்தைக் கடக்கும்வரை, நான் அவனையே பார்த்தபடி புகைவண்டிக் கதவருகில் நின்றேன்.

அவனது உருவம் மறைந்ததும், எனது சட்டைப் பையுள் இருந்த சிகறற் பைக்கட்டையும், தீப்பெட்டி யையும் எடுத்து வெளியே எறிந்துவிட்டு என் இடத் திலே வந்தமர்ந்தேன்.

(ஈழநாடு 1972-4-30)

# 9

தாங்கமுடியாத அவமான உணர்ச்சியும், நாணமும் மேலிடக் குந்திதேவி தன் கண்களை மூடிக்கொண்டாள். ஆனல், பார்க்க விரும்பாத உருவத்தின் கேட்டேயாக வேண்டிய கலகலச் சிரிப்பானது, அவளின் இதய அந்தரங்கமெங்கும் வியாபித்து அவளைச் சித்திரவதை செய்தது. மார்கழி மாதத்தின் சீதளக் காலைப் போதிலே கங்கா நதியின் பனிப்புனலில் மூழ்கியது போன்ற ஒரு விறைப்புணர்ச்சி, அவளின் உடலெங்கும் பரந்தது.

புனித கங்கை...... யுகாயுகாந்தரங்களாகப் பரத கண்டத்து மக்களின் பாவக்கறைகளைக் கழுவி, அவர்களையெல்லாம் புனித ஆன்மாக்களாய் மாற்றிவரும் அன்புத் தாய்... ஆனல், அந்தக் காருண்ய மாதா குந்தியைப் பொறுத்தவரை மிகமிகக் கொடியவளாகவே தோற்றினள். பல ஆண்டுகளுக்கு முன் குழந்தைத் தனத்திலே அறியாது செய்த ஒரு பாவத்தைச் சுமந்து சென்று அதற்கு வாழ்வளித்து, இன்று குந்தியின் இழிவுக்கு ஓர் எடுத்துக் காட்டாக நிறுத்தி வைக்கக் காரணி யார்? யார்?

இழப்பு

கேள்விகளின் பாரத்தையும், அவற்றின் பின்னணி அர்த்தத்தையும் தாங்கிக்கொள்ள இயலாது, குந்தியின் இதயம் துவண்டது. வெறுக்கவும், மறக்கவும் நினைத்தவையெல்லாம் விசுவரூபம் எடுத்து அவளை முற்றுகையிட்டன. மூடியிருந்த கண்களினுள்ளே அவை படலம், படலமாய் விரிந்து கொண்டிருந்தன.

தாயை இழந்த அநாதைச் சிறுமியாக அவள் தனது தந்தை சூரனின் அரண்மனையிலே, தனிமைக்கும் கொடுமைக்கும் இலக்காகி வளர்ந்த கதை... அதன் பிறகு தாய் மாமன் குந்தி போஜனின் அரவணைப்பிலே வாழ்ந்த கதை...

இரண்டாவது கதையின் முடிவிலே மூன்ருவது கதை தொடங்குகிறது. குந்திதேவியின் வாழ்க்கையிலே இன்பமாக ஆரம்பித்து, மாளாத் துன்பத்திலே ஆழ்த்திவிட்ட கதை அதுதான்.

கங்காநதி தீரத்திலே 'நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும், குளிர் பூந்தென்றலும், கொழும்பொழிற் சுமையும்' நிறைந்திருந்த இன்பச் சூழலிலே அவள் ஒரு பட்டுப் பூச்சியாய்ச் சிறை விரித்துப் பறந்து திரிந்த நாள்கள்... அவை எத்துணை இனிமையானவை!

பசிய இலைகளால் வேய்ந்து தூய்மைக்கும், தெய்வீகத்திற்கும் நிதர்சன சாட்சியாய் நின்ற ஒரு சிறிய குடிசையிலே துர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்வதில், அவளது காலம் கழிந்துகொண்டிருந்தது.

'துர்வாசர் மகா கோபக்காரராம்; சற்றே தவறினுலும் சபித்துவிடுவாராம்; அவரைத் திருப்தி செய்ய யாராலும் முடியாதாம்.'

இப்படி எத்தனையோ சொன்னுர்கள்!

குந்தியும் பயந்துகொண்டுதான் அவருக்குப் பின்னுல் வந்தாள்; அவரது சிவந்த விழிகளைக் கண்டு மிரண்டபடி, அவரது தீச்சுடர் மேனியின் தேஜசிற் கூசியபடி தான் வந்தாள்.

ஆனுல், அவர் எவ்வளவு நல்லவர்! குந்திதேவியா அவருக்குப் பணிவிடை செய்தாள்? அவரல்லவா அவளுக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து பேணி வளர்த்தார்?

பிறந்த இடத்திலே கிடைக்காத பாசம், தாய் மாமனின் மனையிலே பெருத அன்பு, குந்திக்கு அந்த ஏகாந்த ஆசிரமத்திலே கிடைத்தது.

மனித சமூகத்தின் முன்னுல் மகா கோபியாய்க் காட்சி தந்த அந்த மாமுனிவர் தனிமையிலே, பொறுமையின் சிகரமாகவே தோற்றினுர்; குழந்தைமையின் பேதைமையால், குந்தி இழைக்கின்ற தவறுகளையெல்லாம் ஒரு புன்னகையாலே சந்து செய்து, அவள்மீது தம் பாசத்தையெல்லாம் சொரிந்தபடி இருந்தார்.

## (2)

கண்ணீர்ப் புனலால் முனிவரின் கால்களைக் கழுவியபடி தரையிலே கிடந்த குந்தியைத் தூக்கி நிறுத்தினுர் துர்வாசர். அவரின் விழிகளிலும் கண்ணீர், மணிமணியாய் உருண்டு 'விழுவதா, வேண்டாமா' என்று தயங்கிக்கொண்டிருந்தது. அவர் அதனைத் தடுத்து நிறுத்த எண்ணிப் புன்னகை பூண முயன்ருர்.

கூடவில்லை; கூடவேயில்லை!

"குழந்தாய்! இளமையிலேயே உலக பாசபந்தங்களைத் துறந்து முனிவனுனவன் நான். யாரிலும், எதிலும் பற்றற்றிருந்த என்னை, பாசவலைபோட்டு நீ இழுத்துவிட்டாய். இனி, இமயத்தின் பனிச் சிகரங்களிலும், புனித கங்கையின் அன்புக் கரங்களிலும், ஆசிரமங்களின் ஓமப் புகையிலும் உனது பால் வடியும் முகமே எனக்கு அடிக்கடி தோற்றிக்கொண்டிருக்கும். நான் நேற்றுச் சொல்லித் தந்த மந்திரங்களை உச்சரிக்கும் போதெல்லாம் உனக்கும் என் நினைவு தோற்றவே செய்யும். இந்தப் பாசப் பிணைப்பை எதனுலும் அறுத்து விட முடியாது."

"இன்னும் சிறிதுபோதில் உன் மாமனின் ஏவலர், உன்னை அழைத்துச் செல்ல இங்கு வருவர்; அதுவரை இங்கேயே இரு. நான் வருகிறேன்."

முனிவர் தமது கால்களைப் பெயர்த்து வைத்தபடி, தளர்நடை நடந்து இளமரக்காவினூடே சென்று மறையும்வரை, அவரையே நோக்கி நின்ருள் குந்தி.

## (3)

குந்தியின் முன்னல் ஓர் ஒளிச்சுடர் வடிவம் தோன்றி அவளின் கண்களைக் கூசவைத்தது. அந்த வடிவிற்குரியோனின் விழிகளிலேதாம் எத்தகைய பயங்கரக் கவர்ச்சி!

பார்க்க வேண்டும் போலவும் இருந்தது; பாராதிருக்கவும் மனம் விரும்பியது!

ஆனல், முந்திய வேட்கை பிந்திய எண்ணத்தை விழுங்கிவிட, அந்த மகாபுருஷனின் அழகார்ந்த கோலத்தைக் கண்களால் மாந்தி, இதயத்தாற் சிரணித்தாள் குந்தி.

'சூர்யாய நமோ, நமஹ!
சூர்யாய நமோ நமஹ!'

மகாபுருஷன் புன்முறுவல் பூண்டான். "நீ அழைத்த குரல் கேட்டுத்தானே ஓடோடி வந்தேன்? பின்னும் பின்னும் ஏன் அழைக்கிருய்?" என்று கூறியபடி அவன் குந்தியின் அருகே சென்ருன்.

குந்தியின் உடல் அதிர்ந்தது; மேனியெங்கும் வியர்வை வெள்ளமிட்டது; கண்கள் பஞ்சடைந்தன. பசுங்கொடி ஒன்று துவள்வது போலத் துவண்டு சூரிய தேவனின் காலடியிலே அவள் விழுந்தாள். தேவன் அவளைத் தூக்கி நிறுத்தி, அன்போடு அவளின் வியர்வையைத் துடைத்தான்.

"செஞ்சுடர்த் தேவே! உலகின் தந்தை நீ. உன்னை என் குழந்தைத் தனத்தால் அழைத்துவிட்டேன். என்னை மன்னித்தருள். என் விழிகளையும், ஆன்மாவையும் குருடாக்காது மறைந்துவிடு; போ; என்னை விட்டுப் போய்

விடு.'' குரல் நடுங்க, உரை தடுமாற இவ்வாறு கதறினாள் அவள்.

சூரியதேவனின் முகத்திலே தவழ்ந்து விளையாடிய புன்னகை நழுவி விழ, அவன் சிந்தாகூலனாய் நின்று கூறுவான்: ''சித்தத்தை ஏகாக்கிரமாக்கி, உடலைச் சிறிது சிறிதாக வருத்தி, ஆன்மச் சுடர்விளக்கினை ஏற்றி அதன் ஒளியிலே உண்மை கண்டவர்கள் முனிபுங்கவர்கள். அவர்களின் மந்திரங்கள் எம்மை அடிமைகளாக்கி விடுகின்றன. அவர்கள் எதனை நோக்கி மந்திரத்தை ஆக்கினரோ, அதனைச் செய்து முடிக்கும்வரை எம்மால் அமைதியாக வாழ இயலாது. ஆகையால், என்னை மன்னித்துக்கொள். எனது கடமையை நான் நிறைவு செய்ய அருள்வாய்''. கைகளை மன்றாடும் கோலத்திலே நீட்டி, குரலிலே இரக்கக் குழைவையும் சேர்த்துக் கூனிக் குறுகி நின்ற கதிரவனைக் காண வியப்பாகவும், வேதனையாகவும் இருந்தது. குந்தி கேட்டாள். ''தேவே! முனிவரின் மந்திரம் தங்களுக்கு இட்டுள்ள கட்டளை யாதோ?''

தினகரன் சற்றே மௌனமானான். ''துர்வாசர் முக்காலமும் உணர்ந்த ஞானி. என்ன காரணத்தாலோ தெரியவில்லை. உனக்கு உபதேசித்த மந்திரங்கள் புத்திர வரத்தைக் கோருவனவாய் இருக்கின்றன... எனவே... நான்.''

குந்தி சிறுமியானாலும் பேதை அல்லள். சூரியதேவன் கூறியதன் பொருள் அவளுக்குப் புலப்பட்டது.

கண்கள் இருண்டு வந்தன.

எரிமலைகள் இதயத்திலே வெடித்துப் பற்றி எரிந்தன.

சிந்தையிலே இடி இடித்து, புயல் அடித்து, மின்னல் மின்னி... தடுக்க முடியாத, தவிர்க்க முடியாத ஒரு சுழியினுள்ளே அகப்பட்டு முக்குளிக்கின்ற நிலையில், குந்தி பேச்சற்று, செயலிழந்து மரமானாள்...,

செங்கதிர்ச் செல்வன் அவளின் கரத்தை மெல்லப் பற்றி அருகில் இழுத்தான்.

## ( 4 )

குழந்தை வீரிட்டழுதது. இன்பம், வேதனை, இழக்க முடியாத இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிட்ட தாபம் என்ற பலவகைப்பட்ட உணர்ச்சிகளிலே தவித்துத் தத்தளித்த குந்தி மெல்லக் கண் விழித்தாள்.

அழப் பிறந்தது அழுதது. அடங்கி ஒடுங்கவேண்டிய தாய், அதனைப் பார்த்துக் குருதிக்கண்ணீர் வடித்தாள்.

ஒரு கணம்......
எல்லாங் கடந்த தாய்மையின் தீவிர பாசவேகத்தில் அதனை அணைத்துக் கொண்டபோது, அவளுக்கு வாழ்க்கையின் அர்த்தம் சிறிதே புரிவதுபோல இருந்தது.

ஆனால்...... அடுத்தகணம்...... துர்வாசர் கூறிய கதைகள், கற்புச் செல்விகளின் வரலாறுகள் யாவுமாய்ச் சேர்ந்து அவளது தலையைப் பலமாகக் குனிய வைத்தன; பிடரியிலே ஊர்ந்து இதயத்தை அடைந்து சித்திரவதை செய்தன. குந்தி வெறுப்போடு குழந்தையை நிலத்திலே விட்டவள், அதைத் தன் பயங்கர விரோதிபோலத் தீ கனலும் கண்களாற் பார்த்தாள்.

குழந்தை அவளின் பேதைமையைக் கண்டு சிரிக்கவில்லை. அது அழுதது. தனக்காக, தன் தாய்க்காக, இந்த உலகிற்காக அது கதறி அழுதது! குந்தியின் நெஞ்சு பாசத்தாற் கனிந்து வெகுளியை விரட்ட......

அவள் அதனை அணைத்து, தனது நெஞ்சிற் பெருகிய அமுதத்தை அதற்குக் கொடுத்தாள்.

குழந்தை, குண்டலம் முளைத்த காதில் ஒரு கையும், கவசம் பூண்ட நெஞ்சில் ஒரு கையுமாக வைத்துக்

கொண்டு பாலையும் வேண்டாது அழுதது; எதிர்காலத்தில் கேட்கக்கூடாதவற்றைக் கேட்கவும், அவற்றைத் தாங்கிக்கொண்டு வாழவும் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தது.

அந்த வேளையிலே தூரத்திற் குதிரைகளின் குழம்புச் சப்தம் கேட்டது. குந்தி ஜாக்கிரதையானாள்; தனது ஆடை அணிகள் வைத்திருந்த பேழையை வெறுமையாக்கி, அதனுள்ளே குழந்தையைப் பத்திரமாகக் கிடத்தினாள்.

சிறிது போதில் குந்தியின் சேலை ஒன்றை அரவணைத்தபடி கங்கா நதியிலே, பேழையுள் கிடந்து தனது ஜீவிய யாத்திரையை அது தொடங்கியது.

( 5 )

அத்தினபுரியில், விதுரனின் அரண்மனையிலே பல வருடங்களுக்குப் பிறகு, கண்ணனின் வாயிலிருந்து அந்தப் பயங்கர உண்மை வெளிப்பட்டபோது குந்தி நாணிக் குறுகி இல்லையே ஆகிவிட்டவள் போலானாள். அந்தவேளையிலேதான் கண்ணனின் கலகலச் சிரிப்பின் பின்னணியில், பழைய வாழ்வுப் படலங்கள் அவளது மூடிய கண்களில் விரிந்தன.

அவள் கண்களை விழித்தபோதும், கண்ணன் தன் மாயச் சிரிப்பால் அவளைக் கொன்று கொண்டுதான் இருந்தான்.

எத்தகைய அவமானம்! தன் பிள்ளைக்குச் சமமான ஒருவன், தனது கடந்தகாலக் கறைபடிந்த வரலாற்றை விரித்தபோது... குந்திக்குப் பூமியே தன்னைப் பிளந்து ஏற்றுக்கொள்ளாதா, என்ற எண்ணம் அதி தீவிரமாய் ஏற்பட்டு வளர்ந்தது.

அவள் தலையை நிமிர்த்தவேயில்லை. அவளுடைய உடம்பனைத்துமே பற்றி எரிந்தது. இரத்த நாளங்களை

வெடித்துப் பிளந்துவிடுவது போன்ற ஒரு வேதனை அவளை ஆட்கொண்டது.

'கங்கா நதியைத் தவிர வீசுகின்ற காற்றிற்குக் கூடத் தெரியாது' என்று கட்டிக் காத்து வந்த இரகசியம் ஒன்று, எதிர்பாராத சூழ்நிலையில், எதிர்பாராத இடத்திலிருந்து அம்பலமாகிவிட்டது.

அதனை அவளால் தாங்கவேகூடவில்லை. "கண்ணா! இந்தப் பயங்கரத்தை இனி உன் வாயாற் சொல்லாதே. என் பிள்ளைகளின் முன்பு என்னைத் தலைகுனியச் செய்து விடாதே. 'நான் ஓர் உத்தமி' என்று பெருமையோடு தலைநிமிரும் அவர்களை, அவமானக் குழியினுள்ளே ஆழப் புதைத்துவிடாதே, அப்பா!"

ஞானவடிவினனும் மாயக்கண்ணன் சற்றும் சலனமடையாத முகத்தோடு, முறுவல் விளையாடும் தனது திருவாய்க்கமலத்தைத் திறந்து சொன்னான். "அத்தை! பாண்டுவின் அநுமதியோடு நீ எமதருமனையும், வாயுவையும், இந்திரனையும் கூடினாயே? உன் மருமகள் பாஞ்சாலி உன் மக்கள் ஐவரையும் மணந்தாளே? திருதராட்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோரின் பிறப்பு இரகசியம் உனக்குத் தெரியாததா? இவையெல்லாம் அறத்தோடியைந்த செயல்களென்றால், நீ கன்னனைப் பெற்றது மட்டும் மறச்செயலா? அவமானத்திற்குரியதா? அத்தை! நீ என்ன சொல்கிறாய்? எனக்கு விளங்கவில்லை."

குந்தியின் உதடுகளிலே சோகச்சிரிப்பொன்றைக் கண்ணனின் வார்த்தைகள் விதைத்தன. "கோபாலா! உலகதர்மத்தில் ஒரு பெண்ணின் பெருமையை நிர்ணயிக்கும் கருவி அவளது திருமணந்தான். ஓமத்தீயிலே புனிதமான நெய்யைச் சொரிவது போலத் தன் கணவனது பாத கமலங்களிலே கன்னிமை நிறைந்த தன் உடலையும், உள்ளத்தையும் அர்ப்பணிப்பதைவிட அவளுக்கு நிறைவு தரவல்லது வேறு ஒன்றுமே இல்லை. ஆனால்... நான்... இந்தப் பதிதை... என் கணவனுக்கு

அளித்தவை கறைபடிந்த உடலும், கற்பழிந்த உள்ள முந்தானே, கண்ணு!''

விம்மலிலே பொருமிக் கண்ணீரிலே திணறிக் கொண்டு குந்தி உதிர்த்த வார்த்தைகள் கல்லையும் இளகச் செய்திருக்கும். ஆனால், அவை அந்தக் கள்வனை இளக்கவில்லை. அவன் மீண்டும், மீண்டும் சிரித்து, அந்தச் சிரிப்பால் குந்தியைக் கொன்றபடி சொன்னான். ''அத்தை! உலகத்தில் மிக்குயர்ந்த பாசத்தை தாய்மை அல்லவா? நீ ஒரு தாய்; பாண்டவர்களின் தாய்: அவர்கள் கௌரவரை வென்று மன்னராய் வாழ வேண்டும் என்பது உன் விருப்பமானால், நீ கன்னனிடம் செல்ல வேண்டும். அவனுக்கு நீ யார் என்று உரைத்தல் வேண்டும்.''

''கண்ணு!'' குந்தி கதறினாள். ''என் மகனுக்கு முன்னால் நானே சென்று, என் பாவக்கதையைச் சொல்ல வேண்டும், என்கிறாயா? ''நான் உன்னைக் கன்னிப்பருவத்தில் பெற்றெடுத்தேன்'' என்று அவனிடம் சொல்வதா? ஐயோ! இதைவிட என்னைத் தண்டிப்பதற்கு வேறு வழியொன்றும் நீ காணவில்லையா?'' உயிரும் உடலும் உருகிக் கண்ணீராய்ப் பெருகிட, காற்றிலே ஆடுகின்ற சருகுபோல நடுங்கியபடி கேட்டாள் அவள்.

''அத்தை! உன் தியாகத்திலேதான் உன் மக்களின் எதிர்காலம் மலரவேண்டும் என்றிருந்தால், நீ அதனைச் செய்துதானே ஆகவேண்டும்? வேறுவழி ஒன்றும் எனக்குத் தெரியவில்லை.'' எல்லாந் தெரிந்தவன் ஒன்றுமறியாதவன் போலச் சிந்தனையை முகத்திலே தேக்கி உரைத்த வார்த்தைகள் இவை!

பயங்கரமான மௌனம் அங்குச் சிறிதே ஆட்சி செலுத்தியது. குந்தி அந்தரத்திலே சுழன்று கொண்டிருந்தாள். அங்குமிங்குமாய்ச் சிந்தனை காட்டி நடந்த கண்ணபிரான் சிறிதே நின்றான். ''நீ கன்னனிடம் சென்று இருவரங்கள் கேட்கவேண்டும். ஒன்றினால்

நாகாஸ்திரத்தை அவன் அருச்சுனன் மீது ஒரு தடவைக்கு மேற் செலுத்தக்கூடாது என்று கேள். மறு வரத்தினுல் அருச்சுனன் தவிர்ந்த மற்றவரோடு உன் மூத்த மகனைச் சண்டை செய்தல் வேண்டா என்று வேண்டு. கன்னன் கொடைவள்ளல். நீ கேட்பதெல்லாம் தருவான்."

குந்தி நடுங்குகின்ற தன் கரங்களைப் பிச்சை கேட்கும் கோலத்திலே நீட்டிக் கண்ணனிடம் மன்ருடினுள். "வேறு வழியே இல்லையா?"

"அத்தை! நீ ஒன்றை மனத்திற் கொள்ளல் வேண்டும். நீயும், நானும், உன் மக்களும், என் மூதாதையரும் தோன்றி, வாழ்ந்த, வாழ்கின்ற மண் இது. இந்த மகா புனித பூமியிலே தர்மத்தை மீண்டும் நிலை நாட்டத் தோன்றியவர் உன் மக்கள். அவர்களைக் காப்பாற்றுவது இந்த நாட்டின் உன்னத தர்மங்களைக் காப்பாற்றுவதாகும். இன்று இந்த இரட்சிப்பு உனது கைகளிலேதான் இருக்கின்றது. நீ தாய் மாத்திரமல்ல. யுகதர்மத்தைக் காக்க வந்த பெண் தெய்வமுமாவாய். போ, உன் கடமையைச் செய்."

"கண்ணு! நான் தெய்வமா? இந்தப் பாவி, பதிதை தெய்வமா?" என்று கதறிக்கொண்டு குந்தி தரையிலே விழுந்தாள்.

அவளின் கதறலைக் கேட்கக் கண்ணன் அங்கு இல்லை. அவனது பாதச் சுவட்டொலி மெல்ல மெல்ல அடங்கி, அவிந்தது.

மானம்...... மக்களின் உயிர்... தேசத்தின் தர்மம்... இவற்றில் எதைக் காப்பது?

(6)

கன்னனை நேருக்கு நேர் கண்ட அந்தக் கணத்தில், குந்திதேவி தன் துன்ப துயரங்களையெல்லாம் மறந்து பரவசமாகி நின்ருள்...

தருமனின் ஞானச் சுடரும், வீமனின் வலிமைச் சிறப்பும், அருச்சுனனின் வீரத் திறனும், நகுல சகா தேவரின் கம்பீரம் கலந்த அமைதியும் ஒன்று திரண்டு கன்னனாய் நிற்பது போன்ற பிரமை, குந்திக்கு ஏற்பட் டது உண்மையே.

'கன்னனைப் போன்ற புதல்வனைப் பெறுவதற்காக எந்த இழிநரகச் சேற்றிலும் இறங்கி உழலாம்' என்று கூட அவளுக்கு அந்த வேளையில் தோற்றியது! கன் னன் வாய் திறந்து பேசுகையில், கங்காநதி தீரத்தில் அன்று ஒளி வடிவாய் நின்ற மகாபுருஷனின் குரலே கேட்பதுபோல இருந்தது. அந்தப் பயங்கர மாதுரிய வசனங்களின் சுவையை மீண்டும் ஒரு தடவை குந்தி அநுபவித்தாள். அந்த மகானுபாவனுடைய ஆன்ம சக்தி பின்னிப் பிணைந்த சுந்தரத் திருக்கோலத்தைப் பாதாதிகேசம் கண்டு, கனிந்து கரைந்தாள்......

''ஆஹா! எத்தகைய பெரியதொரு செல்வத்தை இத்தனை ஆண்டுகளாய் இழந்திருந்தேன்'' என்று அவள் தன் அந்தரங்கத்திலே குரலெடுத்துப் புலம்பி, அழுது கதறினாள்,

''இவன் எனக்கு மகனாகப் பிறக்கும் தகையன் அல் லன். இவன் தெய்வத்திற்குச் சமமானவன். இவ னுக்கு எதையும் மறைக்க வேண்டுவதில்லை. எதை யும் தாங்கும் இதயம் படைத்தவனான என் மகன், எனது பாவச் செயலை மன்னிப்பது உறுதி'' என்று முழு மனத்தோடு நம்பி, குந்தி கடந்த காலக் கதையை அவ னுக்கு விவரித்தாள்.

குந்தியின் நம்பிக்கை வீண்போகவில்லை: அவளது வார்த்தைப் புயல்கள் கன்னபர்வதத்திலே முட்டி மோதி அடிக்கையில், அது விழி நீரையும் மென்று விழுங்கிய படி கம்பீரமாய் நிமிர்ந்து நின்றது. ''இதுவன்றோ வீரம்?''

குந்தி கன்னனைத் தழுவிக்கொண்டாள். என்ன இது ?...... முதுமையால் திரைந்து தொங்கிவிட்ட தாய்மைச் சுரப்பிகளில் கசிவு ஏற்படுகின்றதா ? 'ஆ! தாய்மையே ! உனக்கு முதுமையும் அழிவும் என்றுமே இல்லை. நீ சிரஞ்சீவி !'

நன்றிக் கடனுக்காகவும், நட்பின் பிணைவிற்காகவும் எதையுமே தியாகம் செய்யமுடியும் என்பதைக் காட்டி நின்ற கன்னன், குந்தியின் இதயம் முழுவதையுமே ஆக்கிரமித்துக் கொண்டான். இப்பொழுது அங்கு அருச்சுனன் இல்லை ; வீமன் இல்லை; நகுல சகாதேவர் இல்லை. ஏன் ! தருமனுக்குக்கூட இடப்பிரச்சினை ஏற்படும்போன்றிருந்தது !

( 7 )

''அம்மா ! நீங்கள் எனக்கு இரண்டு வரங்கள் தரல் வேண்டும். நான் இறக்கும்வரை எனது பிறப்பின் இரகசியத்தை யாருக்கும் வெளியிடாதீர்கள்; நான் போர்க்களத்திலே பார்த்திபன் கணையால் பட்டு வீழ்ந்து கிடக்கும் வேளையிலே, என்னை உங்கள் மடிமீதிருத்தி, நான் உங்கள் மகனென்று உலகுக்கெல்லாம் எடுத்துரையுங்கள்.''

'எத்தகைய பயங்கர விபரீத ஆசை ! போர்க்களத்தின் மத்தியிலே நின்று ஊரும் உலகமும் அறிய, நானே கன்னனின் கன்னித்தாய்' என்று எடுத்துரைத்தல் வேண்டும்.'

'நடக்கக்கூடிய காரியமா ?'

கன்னனின் வேண்டுகோள் குந்தியை மீண்டும் சேற்றுச் சகதியுள்ளே அழுத்திப் புதைத்தது......

அவளின் உள்ளம் மேற்கூறிய வரங்களால் ஒவ்வொரு கணமும் சல்லடைக் கண்களாய்த் துளைக்கப்பட்ட வண்ணமேயிருந்தது.

"என் மகனுக்குச் சமமான கண்ணன் என் கறை வரலாற்றை எடுத்தியம்பினுன். அந்த வேளையிலே எனது கால் உயிர் போயிற்று. என் மகன் முன்னுல், அவனது பெருந்தன்மை ஒன்றையே நம்பி என்னுல் அவனுக்கு ஏற்பட்ட கறையை எடுத்தியம்பினேன். அதுகாலை எனது அரை உயிரும் போயிற்று. கன்னனின் வரங்கள் என் முழு உயிருக்குமல்லவா உலைவைப்பனவாய் உள்ளன? என்ன செய்வேன்?"

"இந்தச் சிக்கலிலிருந்து நீங்க ஒரே வழி...? ஆ! அதுதான் வழி! 'இந்தப் பாரத யுத்தமே வேண்டாம்' என்று கூறி என் புதல்வரை மீண்டும் காட்டுக்கு அனுப்பினுல்...? தருமன் என் கட்டளையை மீருன். தம்பிமாரையும் அழைத்துக்கொண்டு வனவாசம் செய்யக் கிளம்பிவிடுவான்... அதனுல் என் வரலாறு மீண்டும் இரகசியக் குகையுள் சேமமாகப் புதைக்கப்பட்டுவிடும்..."

'ஆ...... எத்தகைய கொடியவள், சுயநலக்காரி நான்!'

'என் செல்வங்கள் மீண்டும் வனமாள்வதா?'

'அவர்களைப் பிரிந்து விதுரனின் மனையிலே நான் மீண்டும் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதா?'

'......வேண்டாம்... நான் கன்னனின் வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன்...'

'எனது அவமானக் கதையை நானே அவனிக்கெல்லாம் எடுத்துரைக்கிறேன்...'

'என் வாழ்வு சிறிது... ஆனுல், தருமத்தின் வாழ்வு பெரிது...... என் மக்களின் வாழ்வு மிகமிக உயர்ந்தது...'

'அதற்காக நான் இந்தத் தியாகத்தைச் செய்துதான் ஆக வேண்டும்...'

'கண்ணு! என் புலே எண்ணங்களுக்காக என்னே மன்னித்துவிடு...;'

இவ்வாறு பலவேறு போராட்டங்களிலே ஆழ்ந்து போய்க் குந்தியின் உள்ளமே குருக்ஷேத்திரமாய் நின்றது.

குந்தி 'எதிர்பார்க்க வேண்டாம்' என்றே எதிர் பார்த்த அந்த நாளும் வந்தது.

கண்ணனின் மாயங்களாலும், காண்டீபனின் பாணங்களாலும் வடுப்பெற்றுக் குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே, பொய் கெட்டு மெய்யானுன் கன்னன்.

அவனேக் குந்திதேவி மடிமீதிருத்தி "மகனே! மகனே!" என்று அழுதரற்றினுள்.

அந்த அரற்றலேத் தொடர்ந்து அவளின் கண்கள் இருண்டன. ஆழ்கடலின் சுழிகளினுள்ளே புதைந்து, புதைந்து மூச்சுத் திணற அமுங்கிப்போவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அவள் மூர்ச்சையாகி உலகை இழந்து கிடந்தாள்.

மீதிக் கதையைக் கண்ணபிரான் பாண்டவர்க்கும், மற்றையோர்க்கும் எடுத்துரைத்தான்.

(யாழ். இலக்கிய வட்டக் 'கதை அரங்கில்' 1966-7-14 இல் வாசிக்கப்பட்டது. 'விவேகி'யில் செப். 66 இல் வெளியானது.)

# 10

நகரத்தின் சன சந்தடிகளையும், ஆரவாரங்களையும் விட்டுத் தொலைதூரத்தில், ஒதுக்குப்புறமான கிராமமொன்றிலே சத்தியேந்திரர் தமது ஆச்சிரமத்தை அமைத்துக்கொண்டபொழுது அவரைத் தெரிந்தவர்களெல்லாம் அவரின் செயல் ஏற்றது என்றே முடிவுக்கு வந்தனர். பகட்டையும், புகழையும் என்றைக்குமே விரும்பாத மகாசாதுவான அவர், துறவாசிரமத்தை ஏற்றுக்கொண்டு சத்தியேந்திரரானபோது எவ்விதம் அவரைத் தங்கள் நெஞ்சங்களிலே வழிபட்டுப் போற்றினார்களோ, அதுபோலவே இன்றும் அவரை அவர்கள் போற்றத் தவறவில்லை.

"சத்தியேந்திர சுவாமிஜியின் ஆச்சிரமத்திற்கு இன்று சென்றிருந்தோம். சூழவர விழுதுகள் விட்டு வளர்ந்து நிற்கும் ஆலமரங்கள். பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற பசிய புல்வெளி. அதன் எல்லையிலே வரம்பு கட்டியது போன்ற பலவகைப் பூஞ்செடிகள், இவற்றின் நடுவிலே சிறியதொரு குடிசை. சாணகத்தால் மெழுகிய தரையும், செம்மண் தீற்றிய சுவரும் பொருந்திச் சுவாமிகளின் நெஞ்சம் போலவே பரிசுத்தமாய் அது விளங்குகிறது. கிராமத்தின் வயல்களிலும், தென்னந் தோப்புக்களிலுமிருந்து மெல்லெனத் தவழ்ந்து வருங் காற்று, தமது பஞ்சு பொதித் தாடியை வருடத் தமது குடிசையின் முன்னிருக்கும் ஆலமரத்தின் கீழ்ச் சந்தியேந்திரர் நிட்டை கூடியிருந்த காட்சி, எங்களை வேதகாலத்திற்கே இழுத்துச் செல்வது போன்றிருந்தது. நாங்கள் மெய்ம்மறந்த நிலையிலே சுவாமியின் கால்களிலே வீழ்ந்து நமஸ்கரித்தோம்."

வறுத்த வித்து

இதே பாணியில் சந்தியேந்திரரைப் பற்றியும் அவர் அமைத்துக்கொண்ட ஆச்சிரமத்தைப் பற்றியும் தாந் தாம் நேரிற் சென்று கண்டுவந்த அனுபவங்களைப் பத்திரிகை நிருபர்கள், விவரமாகவும், அழகாகவும் வருணித்திருந்தார்கள். இவற்றை வாசித்தவர்களுடைய நெஞ்சங்கள் சத்தியேந்திரரின் நினைவுகளால் நிறைந்து கனிந்ததற்கும், மானசீக அஞ்சலிகளை அவர்கள் கணக்கின்றிச் செலுத்தியதற்கும் சொல்லவா வேண்டும்?

இச்செய்திகள் வெளியான நாளிலிருந்து சத்தியேந்திரர் வசித்த கிராமத்திற்கு அதிர்ஷ்டம் அடிக்கத் தொடங்கிவிட்டது. நாட்டின் பல திசைகளிலுமிருந்து அவரைக் காண்பதற்கும், அவரின் அறிவுரைகளைக் கேட்பதற்கும் மக்கள் திரள்திரளாக வரலாயினர்.

பிரதான பஸ் வீதியிலிருந்து ஒற்றையடிப் பாதை ஒன்றே சத்தியேந்திரரின் ஆச்சிரமத்திற்கு ஆரம்பத்தில் இருந்தது. இப்போது கிராம மன்றம் அந்த ஒற்றையடிப் பாதையை விசாலமாக்கித் தார் போட்டு அகலமான வீதி ஒன்றை அமைத்துக் கொடுத்தது. வீதியின் இரு மருங்கிலும் வருவோரின் வசதிக்காகக் கடைகள், விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன. சில நாள்களில் மின்சாரத் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு அமைதியை நாடிவந்த சத்தியேந்திரரைச் சூழ்ந்து பழையபடி சந்தடிகளும் ஆரவாரமும் ஏற்பட்டபொழுது அவரின் உள்ளத்திலே எத்தகைய எண்ணங்கள் ஏற்பட்டிருக்கும் என்று நாம் சுலபமாக ஊகித்துவிடலாம்.

ஆனால், துறவிகளும், ஞானிகளும் எந்த வேளையில் எவ்விதம் சிந்திப்பார்களென்று நாம் ஊகித்துப் பார்ப்பனவெல்லாம் சரியா என்பது வேறு விஷயம்.

சந்தியேந்திரரின் தியான நேரம் குறையலாயிற்று. நாளின் பல மணித்தியாலங்களை அவர், தம்மைத் தரிசிக்க வருவோருக்குக் காட்சி கொடுப்பதிலும், அறிவுரைகள் அளிப்பதிலுமே கழிக்க வேண்டியிருந்தது.

அவருடைய குடிசை விசாலமாக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டபொழுது கிராம மக்களே முன்வந்து ஓர் அழகான ஓட்டு வீட்டைக் கட்டிக் கொடுத்தனர். இதற்காக இரண்டொரு ஆலமரங்களைத் தறிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

சத்தியேந்திரரின் உள்ளத்திலே இந்தச் செயல் எத்தகைய விளைவை ஏற்படுத்தியிருக்கும் என்று சொல்ல முடியாதிருந்தது.

வழக்கம்போல அவருடைய முகத்திலே என்றும் மாருத புன்னகையே தவழ்ந்த வண்ணம் இருந்தது.

அவருக்கு இப்பொழுது பல சீடர்கள். அவர்களின் அதிகாரம் வேறு அங்குக் கொடிகட்டிப் பறந்தது. வருபவர்களைக் காக்க வைப்பதும், சுவாமிஜியின் அருகில் செல்லவிடாது தடுத்து நிறுத்தி வைப்பதும், அவர்களுக்குத் தனியான ஓர் இன்பத்தை அளித்தன.

சுவாமிஜியின் புகழ் வளர்ந்ததுபோலவே, அவரின் தரிசனத்திற்கான இடையூறுகளும் வளரலாயின.

அவரின் தரிசனத்துக்காய்க் காத்துக் கிடந்து எப்பொழுதோ அருமையாக அவரைக் கண்டு அவரிடம் விபூதி, பிரசாதம் பெற்றவர்களுக்குக் கூட நாட்டில் பெருமதிப்பு ஏற்பட்டது.

அவர்கள் சுவாமியின் மகிமைகளை வானளாவப் புகழலாயினர். பத்திரிகைகள் சுவாமியைப் பல நிலைகளிலே படமெடுத்துப் போட்டுப் புகழோடு பணமும் சம்பாதிக்கலாயின. அவரின் வாழ்த்துச் செய்தி என்ற பெயரிலே அவரது சீடர்கள் எழுதியனுப்பும் செய்திகளைத் தங்களின் ஆண்டு மலர்களிலே வெளியிடுவதையே பெரும் பாக்கியமாய்க் கருதிப் பத்திரிகைகள் தவம் கிடந்தன.

சினிமா நட்சத்திரங்கள், அரசியல்வாதிகள், பத்திரிகைக்காரர்கள், பிரமுகர்கள் என்று சமுதாயத்தின்

பலதுறைகளைச் சேர்ந்தவர்களும் அவரை நாடி வந்து தத்தம் முயற்சிகளுக்கு அவரின் ஆசியை நாடி நின்றனர்.

'நான் இம்முறைத் தேர்தலிலே வெற்றி பெறுவேனு?' 'எனக்கு இவ்வாண்டு பதவி உயர்வு கிடைக்குமா?' 'எனது படம் நூறு நாள் ஓடி வெற்றி விழாக் கொண்டாடுமா?' என்று இவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சுவாமிஜி பதில் இறுக்க வேண்டியவரானார்.

சிலவேளைகளிலே அவருக்கு எரிச்சல் மூண்டுவிடும். அவர் கண்டபடி வாயில் வந்தவாறெல்லாம் தம்மை நாடி வருபவர்களை நோக்கி ஏசத் தொடங்கிவிடுவார். அந்த ஏச்சுப் பேச்சுக்கு இலக்கானவர்கள், அவரின் அத்தகைய பேச்சுக்களுக்கும் தமக்குத் தோன்றியவாறு தத்துவ விளக்கமும், வியாக்கியானமும் செய்து திருப்திப்படலாயினர்!

தாம் புதிதாக வாங்கிய பெறுமதி வாய்ந்த காரிலே சுவாமி வெள்ளோட்டம் செல்ல வேண்டும். தமது புது மனையிலே சுவாமி வந்து விருந்தயர்ந்து ஆசி கூறிச் செல்ல வேண்டும். தமது பிள்ளைகளின் திருமண, ருது சாந்தி வைபவங்களுக்கு அவர் எழுந்தருளி ஆசி கூற வேண்டும்.

இந்நிலையில் சுவாமியை நாடிப் பிரமுகர்கள் வந்ததுபோலப் பிரமுகர்களை நாடிச் சுவாமி செல்ல வேண்டிய கட்டமும் ஏற்பட்டது. தமிழும், சைவமுங் கற்ற பண்டிதர் ஒருவர் திருவெம்பாவைப் பாடல் அடியான,

'தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்' தண்ணளியாளர் எனத் தலைப்பிட்டுச் சுவாமியின் புகழ்ப் புராணத்தைக் கற்பனை நயங்கள் மலியத் தீட்டி வெளியிட்டார்.

அதிலிருந்து சுவாமி ஐந்தாங் குரவர் நிலைக்குத் திடீரென உயர்த்தப்பட்டார். மக்கள் மனத்தில் நினைப்

பவற்றையெல்லாம் அறியவல்ல மகான் என்றும், அற்புதங்கள் பல நிகழ்த்தும் அண்ணல் என்றும் அவரின் பெயர் அடிபடலாயிற்று.

'அடேய்! நீ ஏன் இப்பொழுது இங்கே வந்தாய்? உன் தாய் வீட்டிலே உயிருக்கு மன்ருடுகிருளடா' என்று ஒரு நாள் நான் சுவாமியிடம் போனபொழுது உரைத்தார். உடனேயே பதற்றப்பட்டுக்கொண்டு நூறு மைல் தொலேவிலுள்ள என் அன்னேயை நாடிக் காரில் ஓடினேன். அங்கு என் தாய் எனக்காகவே காத்திருந்தவள் போன்று என் மடியிலே தலே வைத்துச் சிவனடி சேர்ந்தாள்' என்று ஒருவர் கண்ணீரும் கம்பலேயுமாகச் சொல்வார். இன்னொருவர் சுவாமி ஒரே சமயத்தில் இரண்டிடங்களில் தரிசனங் கொடுத்த தாற்பரியத்தைச் சான்றுகாட்டி நிரூபிப்பார்.

இப்படியாகத்தானே சுவாமி சத்தியேந்திரரின் புகழ் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துகொண்டிருந்தது.

## ( 2 )

அவரை, 'அவன்' என்பதா 'அது' என்பதா என்று யாருக்கும் தெரியவில்லே. பரட்டைத் தலே, சிக்குப் பிடித்த பெருந்தாடி, உடம்பெல்லாம் ஒரே அழுக்கு மயம், அரையிலே ஒரு கோவணந்தான் ஆடை.

சத்தியேந்திர சுவாமியின் கிராம ஆச்சிரமத்திலிருந்து இருபத்தைந்து மைல் தொலேவிலுள்ள முருகாலயம் ஒன்றிலே இந்த விஞேதப் பிராணி உலாவி வந்தது.

கோயிற் பூசை நடக்கும் வேளேகளிலே இதனேக் கோபுர வாசலிலே தவருது காணலாம். இது திருநீறு பூசுவதையோ, குளிப்பதையோ யாருங் கண்டதில்லே. சுவாமியின் சந்நிதி முன் நின்று இது ஆடுவதும், பாடுவதும், கோ கோ என்று கொக்கரிப்பதும் பல வேளே

களில் சுவாமியைத் தரிசிக்க வருவோர்க்கும் இடைஞ்சலாகிவிடுதலும் உண்டு.

அந்த வேளைகளில் வெறிபிடித்த நாயை அடித்துக் கலைப்பதுபோல அந்த உருவத்தை அவர்கள் துரத்திவிடுவார்கள். அது, ஏதோ புதுமை கண்டதுபோலப் பேய்ச் சிரிப்புச் சிரித்தபடி அந்த இடத்தைவிட்டு ஓடிப்போகும்.

சொறி நாய்கள், காகங்கள் இவற்ருேடு சேர்ந்து எச்சில் இலைகளைக் கிளறுவதும் கண்டதையெல்லாம் அள்ளித் தின்பதும், கண்ட இடத்திலே உடம்பைப் புரட்டிவிட்டுக் குறட்டை விடுவதும் அதற்குப் பிடித்த விடயங்கள்.

ஒருநாள் அது எதையோ யோசித்துவிட்டு நடையாய் நடந்து சந்தியேந்திரரின் ஆச்சிரமத்திற்கு வந்து சேர்ந்தது.

அவரின் ஆச்சிரமத்து வாசலிலே வந்து நின்று "அடேய் சத்தியேந்திரா! அமுக்கு மூடமே! வாடா வெளியே. உங்கே என்ன செய்துகொண்டிருக்கிருய்?" என்று கரடியாய்க் கத்தியது.

சத்தியேந்திரசுவாமி தியான மண்டபத்திலே வீற்றிருந்த அடியவர்க்குக் காட்சி கொடுக்கின்ற வேளை அது. அந்நேரத்திலே இப்படி ஒரு கதறலா? சத்தியேந்திரர் கூட வியப்படைந்து தமது பேச்சைச் சிறிதே நிறுத்திஞர்.

அவரின் சீடர்களின் விழிகளிலே நெருப்புப் பொறி பறந்தது: அவர்கள் ஓட்டமாய் ஓடி வெளியே வந்து அந்த விநோதப் பிறவியைப் பிடித்துச் சாத்துப்படி வழங்கிஞர்கள்! அடிக்க அடிக்க அந்தப் பிராணி எக்காளமிட்டுச் சிரித்தபடி சத்தியேந்திர சுவாமியைக் கண்டபடி ஏசிக்கொண்டிருந்தது. வாய், நெஞ்சு, கால் கைகளிளெல்லாம் இரத்தம் வழிய வழிய அது தன்

வசைபுராணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே யிருந்தது.

சத்தியேந்திரருக்குப் பொறுக்கவில்லை. அவர் வெளியே ஓடி வந்தார். வழக்கமான அவரது சாந்தம், அன்பு எல்லாம் உள்ளடங்கச் சீற்றமே தாமாகி அவர் வந்த கோலம் 'திரிபுராந்தகரையே' நினைவுபடுத்தியது.

வந்தவர் தம்மை நோக்கிச் சிரித்தபடி நின்ற அந்த உருவத்தின் முகத்தை, விழிகளை ஒரே ஒருகணந்தான் நோக்கினார்...

ஒரே ஒரு கணந்தான்...

அடுத்த கணம் அவரது உடலைப் போர்த்திருந்த காஷாய உடை நழுவிக் கீழே விழுந்தது. ஒரே ஓட்டமாக ஓடிச் சென்று அந்த வடிவத்தின் காலடிகளிலே விழுந்தார். "சுவாமி! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என் சிறையிலிருந்து என்னை விடுவியுங்கள். என் கண்களைத் திறந்து விடுங்கள்" என்று அவர் கதறியழுத போது எல்லாரது வாய்களும் அடைத்துப்போய்விட்டன.

உருவம் அங்கு நெடுநேரம் நிற்கவில்லை. வந்த வழியே திரும்பி ஓடிற்று.

சத்தியேந்திரர் தமது அரைத் துணியையும் அவிழ்த்தெறிந்துவிட்டு அதனைத் தொடர்ந்து "சுவாமி! சுவாமி!" எனக் கதறியபடி ஓடலானார்.

(வீரகேசரி 1968-12-4)

# 11

## சேந்தாங்குளம்

இரண்டு வருடங்களின் முன்பு இலங்கையின் வடக்கே ஏதோ ஒரு பிரதேசத்தில் வேலையை ஏற்கும்படி எனக்கு அழைப்பு வந்தது. சீமேந்துத் தொழிற்சாலையிலே 'இரசாயன எஞ்சினியர்' உத்தியோகம்.

ஆறாயிரம் மைல்களைக் கடந்து சென்று இந்த உத்தியோகத்தை ஏற்கத் தயக்கமாகத்தான் இருந்தது. பொதுவாகக் கிழக்கு நாடுகள் பற்றி நான் அறிந்திருந்தவை, அவ்வளவு உற்சாகம் ஊட்டுவனவாய் இல்லை. அதிலும், ஆசியாவின் காலடியிலே மாங்கனி வடிவிலே அமைந்திருக்கும் சின்னஞ்சிறு தீவாகிய இலங்கை பற்றி, தேவதைக் கதைகள் போல என்னவெல்லாமோ சொன்ஞர்கள். கேட்கக் கேட்க வியப்பாகவும், அச்சமாகவுங் கூட இருந்தது.

ஆனாலும் நான் அங்குப் போய்த்தானுக வேண்டும். எனது சிதைந்துபோன மனத்திற்கு ஓரளவு நிம்மதி கிடைக்கவேண்டுமானுல் இதைவிட வேறு வழியே இல்லை. மரணத்தின் பயங்கர நிழல் படிந்திருந்த அந்த வேளையில் எங்காவது ஓடித் தொலைவதுதான் சாந்தி கிடைக்கும் ஒரேஒரு மார்க்கமாக எனக்குப் புலப்பட்டது.

ஆந்தரீகமான இதயச் சிதைவுகள், கண்ணுடித் துண்டுகள் போல, எனது உயிரையே குத்திக் குதறிக் கொண்டிருந்த நாள்கள் அவை. அந்தகாரச் சூனிய நினைவுகளிலே கருகிப் போவதிலும் சாவதே மேலென்றும், அவ்வாறு சாவது

கோழைத்தனம் என்று தள்ளிவிட வேண்டுமானால், எனது உற்றார், உறவினர், இனசனம் என்போரைக் காணமுடியாத எல்லைக்கு ஓடிவிடவேண்டுமென்றும், நான் முடிவுகட்டியிருந்த வேளை.

ஒரே நாளில் எனது மனைவியும், அருமை மகள் ரேசலினும் கார் விபத்தால் என்னிலிருந்து பிரிக்கப் பட்டனர். மெல்லிய தென்றலிலே சிலிர்த்துக் கிடந்த ரோசாச் செடியை அதன் முட்களே இறுக்கிப்பிடித்து நசித்துச் சீரழித்துவிட்டது போன்ற உணர்ச்சி. பாசத் தின் பயங்கரக் கொடுமையை அப்பொழுதுதான் என் னால் உணரமுடிந்தது.

எனது ஆத்மாவின் மீது முதலாவது ஒளிக் கதிரைப் பாய்ச்சி அதற்கு விளக்கத்தையும், அர்த்தத்தையும் தந்தவள் எனது அன்பு மனைவி எவாஞ்சலின்.

'மாலைப்பொன் வெயில் மணக்கின்ற வேளைதனில்
வேலை விழியை மலர்த்தி வழிநின்று
வாருங்கள் என்றே வரவேற்கும் வாய்ப்பரிய
தேனே! கனியே! தெவிட்டாத நற்பாகே!'

என்று அவளுக்காக எனது நெஞ்சிலே கவிதைகள் ஊறிப் பிரவாகித்து, என்னையே மூழ்கடித்துக்கொண் டிருந்தன.

எனது அருமை மகள் ரேசலின்...? வாழ்வெனும் நறுமலர்ச்சோலையிலே எவாஞ்சலின் என்ற புதுமலரின் திரள்பயனாக, அத்தராக நின்று உள்ளும், புறமும் மணக்க வைத்தாளே என்குழந்தை ரேசலின்? என்னால் அடையப்படக்கூடாத, அனைத்திலும் மேலான ஒரு கன வாக, எனது உயிரிலே பதிந்து ஆக்கிரமிக்கத் தொடங்கி விட்ட அவளை நான் மறப்பது எப்படி? இந்தக் கணத் திலேகூட அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சுக் கால்கள் எனது இதயத்திலே உதைத்துக்கொண்டிருக்கின்றன.

என்னைத் தழுவிக்கொண்டு, தனது குழிவுக்கன் னத்தை எனது கன்னத்தோடு ஒட்ட வைத்துக்கொண்டு,

எனக்குள்ளே என்னைக் காட்டி, என்னையே தாளுக்கிக் கொண்ட அந்தச் சிறுமியை மறப்பதிலும், நினைத்துப் பார்ப்பதே மகா கொடிய அனுபவமாக இருந்தது...

அவள் என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தாள். என்னைச் சூழ்ந்திருந்த தாவர, சங்கமங்கள் அனைத்தையும் விழுங்கிக்கொண்டு, விசுவரூபித்தவளாய் என்னை அரித்தரித்து, அழித்தழித்துச் சாகாமல் சாக வைத்துக் கொண்டிருந்தாள்.

எல்லாமே வெறுத்தன .. ஜேருசலின் போன்ற உரு வெளித் தோற்றமே ஏற்படாத ஒரு மூலைக்கு நான் போய்விடல் வேண்டும்...

ஆயிற்று. இன்னும் ஒரு மாதம்.

## (2)

இலங்கை வந்தடைந்தேன்; வடக்கே சென்று கடமையை ஏற்றேன்.

எனக்குச் சொல்லப்பட்டவையும், நானே வாசித்துக் கொண்டவையுமான செய்திகள் யாவும் பொய்யாய்ப் பழங்கதையாகிவிட, நிருவாண உண்மை என் முன்னால் கவர்ச்சியோடு நிமிர்ந்து நின்றது. அந்த உண்மையில் அழகு இருந்தது; திருப்தி இருந்தது; நம்பிக்கை இருந்தது. வேறு என்ன வேண்டும்?

சுதந்திரம் கிடைத்ததும், புதிய நல்வாழ்வை எதிர் நோக்கிப் பிரசவ வேதனைப்படும் ஓர் இளம் சமுதாயத்தின் பிரதிபலிப்பை நான் இந்த அழகிய தீவிலே கண்டேன். அது எனக்கு ஒரு புதுப் பலத்தைத் தந்தது. அவர்களுக்கு உதவி, அவர்களின் முயற்சிகளைக் கைதூக்கிவிடுவது எனக்குக் கிடைத்த பெரும்பேறு எனக் கருதினேன்.

அதிகம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? புகையும் புழுதியும் படிந்ததும், இரைச்சல் செறிந்ததுமான

தொழிற்சாலையினுள்ளே என்னையும் ஓர் அங்கமாக்கிக் கொண்டு, எனது கடமையிலேயே மூழ்கிக் கிடந்தேன்.

ஆனால், இவையெல்லாம் எத்தனை நாளைக்கு? உத்தியோக பத்ததியின் கெடுபிடிகளும், எனது வெள்ளைத் தோலும் மற்றவர்களிலிருந்து என்னைப் பிரித்து வைக்கத்தான் உதவின. பாலைவனத்திலே நாளெல்லாம் அலைந்து திரிந்த ஒருவன், பசும்புற்றரையைக் கண்டும் அதை அடையமுடியாது கால்கள் முடமாகிவிட்டது போன்ற பயங்கர வேதனை மீண்டும் என்னைப் பீடிக்கத் தொடங்கிவிட்டது. அசமந்தமான நாள்களின் ஆமை வேகப் பயணத்திலே நான் ஒரு தூசாக, துகளாக ஆகிவிட்டதுபோல இருந்தது. என்னை உணர்ந்து, என்னுடன் சமமாகப் பழகி, எனது விருப்பு வெறுப்புக்களிலே பங்குகொள்ள யாருமே இல்லாத அநாதரவான நிலையில், நான் எதைத் தேடி ஆறுயிரம் மைல்களைக் கடந்து வந்தேனோ, அது எனக்குக் கிடைக்கவில்லை; கிடைக்கவேயில்லை.

பள்ளமும் மேடுமான ஒழுங்கற்ற தெருக்களும், பாதையோரங்களிலே முளைத்துக் கிடந்த பற்றைப் புதர்களும், ஓயாது ஒழியாது பேரிரைச்சல் செய்யும் கடலுந்தான் எனக்குத் துணைவர்களாயின.

## (3)

கே. கே. எஸ். ஸில் இருந்து மூன்று மைல் தூரத்திலே ஏகாந்தமான ஓர் இடம் இருக்கின்றது. அதற்குப் பெயர் 'சேந்தாங்குளம்'. வெண் மணலும், கருங்கடலும் கலந்து உறவாடும் இடம் அது. ஞாயிற்றுக்கிழமைகளிலே என் கீழ் அதிகாரிகள் சிலரை வருந்தி அழைத்துக்கொண்டு அந்த இடத்திற்குச் செல்வேன்.

மாலைவேளையில் வானம் இரத்தக் களரியாக மாறிவிட்டிருக்க அதனுடைய பாதங்களைக் கட்டியணைத்தபடி கடலானது சோக கீதம் எழுப்பிக்கொண்டிருக்கும். மலைப் பாம்புகளைப்போல நுரைத் தோல்களால் தங்

களை மூடியபடி அலைகள் சீறிச் சீறிப் புரளும். நீர்த் திரட்சிக்குள்ளே உடம்பைப் புதைத்துக்கொண்டு காலமெல்லாம் கிடந்துவிடவே தோன்றும். நேரம் போவது தெரியாது.

குழந்தைகள் போல் தத்தித் தவழ்ந்து நடை பயின்று அலைகள் புரளும்போது துள்ளிப் பாய்ந்தும், தெப்பம் போல மிதந்து கிடந்தும், மிக வேகமாகத் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு நீந்தியும் செல்வதிலே எனது துன்ப துயரங்கள் குறைந்து போவதுபோலப் பிரமை ஏற்பட்டது.

ஆனால், இதுவும் நீடிக்கவில்லை. என்னோடு கடலுக்கு வந்தவர்கள் ஒவ்வொருவராக, எனது தலையைக் கண்டாலே ஓடி ஒளிக்கத் தொடங்கினார்கள். உப்புத் தண்ணீரிலே குளிப்பதால் உடம்பு பிசுபிசுக்கிறதாம். தலை மயிரில் அழுக்கு ஏறுகிறதாம்.

மீண்டும் தனிமை, ஏக்கம், சோகம். எனது ரோசலின் மீண்டும் எனது இதயத்தைச் சல்லடைக் கண்களாக்கத் தொடங்கினாள். புலப்படுத்த முடியாத சோக அலைகள் எனக்குள்ளே குமுறி ஆர்ப்பரித்து என்னை விழுங்கலாயின.

மரண தாகம்போல எழுந்த இதய தாகத்திற்கு விஸ்கியும் பிரண்டியும் எவ்வகையிலும் பிரயோசனப் படவில்லை. நான் அழிந்துகொண்டிருந்தேன். சகல நம்பிக்கைகளும் இழந்த அபாக்கியவானாக, இந்தச் சிறிய தீவிலேதான் நான் எனது கடைசி மூச்சை விடப் போகிறேன் போலும்.

(4)

"கர்த்தரே! உமக்கு ஸ்தோத்திரம். நீர் எனது பிரார்த்தனைகளை ஏற்றுக்கொண்டுவிட்டீர். இல்லாவிடில் இத்தகைய பெரும்பேறு எனக்கு என்றைக்குமே கிட்டியிருக்காது."

சேந்தாங் குளத்திலே நான் அடிக்கடி சந்தித்து, ரொபி முதலியன கொடுத்து அறிமுகம் செய்துகொண்ட சிறுவர்கள் தாம். அவர்களுக்கிடையே இந்தச் சிறுமி எப்படி முளைத்தாள்? அவள்...

போதிய போஷாக்கில்லாது சற்றே சோகை பிடித்து உப்பிய முகம். ஆறு வயதுக்கு மேல் போகாது. ஆனால், கிழக்கு நாடுகளுக்கே உரிய வளர்ச்சி குறைந்த தன்மை. பரட்டை மயிர்... அழுக்கேறிய பொத்தல்கள் விழுந்த சிறிய கவுண். அதற்குக் கீழே சோடை பற்றி மெலிந்த கால்கள். மாலைக்கால மஞ்சள் வெயிலுக்கும், கப்பி வரும் இருளுக்கும் இடைப்பட்ட பொது நிறம். இவை எடுத்த எடுப்பில் எவனுடைய மனத்தையும் ஈர்த்துவிடாது என்பது உண்மையே.

ஆனால், எனக்கு அந்தக் கோலத்தைப் பற்றிய அக்கறையோ, வெறுப்புணர்வோ ஏற்படுவதற்கு முன்பே எனது கட்டுப்பாட்டையும் மீறிக்கொண்டு மனம் அவளிலே சென்று லயித்துவிட்டது. அர்த்தமிருந்தோ, அர்த்தமில்லாதோ அவள் சிரிக்கும்பொழுது, அந்தக் கன்னங்கள் குழிந்து... "ஆண்டவனே! என் ரேசலினுக்குத்தான் இப்படிச் சிரிக்கத் தெரியும்."

நான் அந்தச் சிறுமியை வைத்த கண் வாங்காது பார்த்து நிற்கிறேன். அந்தப் பரட்டை மயிர், சுருண்டு தொங்கும் பொன் மயிர்க் கற்றையாகவும் அந்தக் கண்கள் நீலமணிச் சுடர்களாகவும், அந்தக் கன்னக் குழிவுகள் தக்காளிச் சிவப்பும், நெருப்பொளியும் பெற்றுள்ள தீக்கங்குகளாகவும்... என் ரேசலின்... என் கண்மணி...

ஓடிச் சென்று அவளைத் தூக்கி ஆசை தீர முத்தமிட்டு என் நெஞ்சுக்குள்ளே அணைத்துக்கொள்கிறேன்.

அந்தச் சிறுமி பயந்து கதறுகிறாள். சிறுவர்கள் பயப்பிராந்தி கொண்டு ஓடிப்போகிறார்கள். அவளும் பலவந்தமாக என்னிலிருந்து விடுபட்டுக் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக ஓடுகிறாள். பயந்தழுவி நின்ற

நிலையிலே உருண்டு புரண்ட அந்த விழிகளிலும் ருேச லினைத்தான் கண்டு...

நெஞ்சு கரைந்து உருகுகிறது. கண்கள் கசிகின்றன. ருேசலின் ஆவாகனமாகிவிட்டிருந்த அந்தச் சிறுமி யையே நோக்கி நிற்கின்றேன்.

என்ருல் தாளமுடியவில்லை. மீண்டும் கடலினுள் பாய்ந்தபொழுது, எனது கண்ணீர்த் துளிகள் பொல பொலவென்று உப்பு நீரோடு, உப்பு நீராய்க் கலந்துவிடு கின்றன. உடலின் வெப்பம் தணிந்துபோகும்வரை கடல் அலைகளிலேயே மிதந்துகொண்டிருக்கின்றேன்.

## ( 5 )

காலமும், நான் கொடுத்த 'ரொபி' மற்றும் விளை யாட்டுப் பொருள்களும் சேர்ந்து அந்தச் சிறுவர்களை யும், விசேடமாக அந்தச் சிறுமியையும் என் பக்கத் திற்கு இழுத்து வந்தன.

அவளுக்குப் பெயர் லில்லி மலர். கடற்கரையிலே வாழ்ந்த மீனவர் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவ ளுடைய அம்மா நண்டு பிடிக்கவும், அப்பா மீன் பிடிக் கவும் போய்விடுவார்கள். அந்த வேளைகளில் அவளும், அவளுடைய அண்ணன்மாரும் பக்கத்து வீட்டுச் சிறுவர் சிறுமிகளும் கடற்கரையிலே வந்து விளையாடுவார்களாம். அப்படியாக நான் கற்பனை செய்துகொண்டேன். அவர் களுடைய பாஷைதான் எனக்குப் புரியாதே!

ஆனலும், நாங்கள் எங்களின் மூதாதையரது பாஷை யாகிய சைகை முறையிலே பல விஷயங்களைப் பேசிக் கொண்டோம். ஓடிப் பிடிப்பதும், தூக்கித் தோளிலே சுமந்து துள்ளுவதும், எனக்குஞ் சரி அவர்களுக்குஞ் சரி மிக விருப்பமான செயலாக இருந்தன.

இந்தச் சாக்கிலே நான் லில்லியை எனக்கு மிக அருகிலே கொண்டுவந்துவிட்டேன். அவளுக்கு நான் வைத்த பெயர் ருேசலின். எனது இதய தாபங்கள்,

பாசங்களின் சுமைதாங்கியாக அந்தப் பெயர் விளங்கியது. சிறிது நாட்களில் சிறுவரிடையேயும் அதுவே பிரசித்தி பெற்றுவிட்டது.

சிறுவர்களின் இயல்பான நுண்ணறிவு எனக்கும் ரோசலினுக்குமிடையே ஏற்பட்ட பிணைப்பினை நன்கு எடைபோட்டுவிட்டது என்றே சொல்ல வேண்டும். நான் எப்பொழுது போனாலும்சரி ரோசலின் கடற்கரையிலே இல்லாவிட்டால், ஓடிச் சென்று அவள் நித்திரையாக இருந்தால்கூடப் பிடித்து இழுத்து வந்துவிடுவார்கள்'

அவள் எனக்குப் பக்கத்திலே எனது தொடையிலே தனது மெலிந்த குருத்துக் கையைப் போட்டுக்கொண்டு, தலையை ஆட்டி, ஆட்டிக் கன்னங்கள் குழிவிழச் சிரிக்கும்போது... 'ஓ! எனது ரோசலின் இறக்கவில்லை. இதோ எனக்குப் பக்கத்திலே என்னிலே இணைந்தபடி இருக்கிறாளே என்று பெருமை கொண்டு தலைநிமிர முடிகிறது இந்தப் பிணைப்பை, இந்தப் பேரானந்தத்தை என்னால் இழக்கவே முடியாது.

எல்லைகடந்த செக்கர்வானமும், குமுறிக் கொந்தளிக்கும் பெருங் கடலும் ஒன்றை ஒன்று தழுவிக்கொள்கின்றன. வைரப்பாறையிலே தத்தித் தவழ்ந்து ஓடுகிறது சிற்றாறு. கோடிக்கணக்கான மைல்களுக்கப்பால் கிடக்கும் நெருப்புக் கோளத்தின் கதிரொளியிலே மலர்களெல்லாம் மலர்ந்து பரவசமாகின்றன. இந்தப் பிணைப்பிற்கு வியாக்கியானம் செய்வது எவ்வளவு சிரமமானதோ, அவ்வளவு சிரமமானதுதான் எனக்கும். இந்தச் சிறுமிக்குமிடையே ஏற்பட்டுள்ள அன்பிற்கு வியாக்கியானம் செய்வதும்!

கற்களையும், மண் வகைகளையும், அவற்றின் கலப்பையுமெல்லாம் பல்லாண்டுகளாய் ஆராய்ச்சி செய்து வந்தும், எனது மனம் இன்னும் மண்ணாகவோ, கல்லாகவோ ஆகிவிடவில்லையென்றால், அதற்கு ரோசலினும்,

றேசலிஞகிவிட்ட இந்த அன்புச் சிறுமியுமே காரணம் என்று நான் உறுதியாகச் சொல்லமுடியும்.

பாச உணர்ச்சி வளர வளர றேசலினைப் பிரிந்திருப்பதே இயலாத செயலாகிக்கொண்டிருந்தது. பிற்பகல் எப்போது வரும், றேசலினை எப்போது காண்பேன் என்று எதிர்பார்க்கும் அளவிற்கு நான் அவளிலே கலந்துகொண்டிருந்தேன்.

எனது கார் 'கோண்' சத்தம் கேட்டதுமே றேசலின் ஓடிவரப் பழக்கப்பட்டிருந்தாள். அவள் அந்த மணலிலே தனது பஞ்சுப் பாதங்களைப் பதித்து ஓடி வரும்போது, றேசலினே உயிர் பெற்று ஒரு தேவதையாகி, மெல்லப் பறந்து வருவதுபோல எனக்குத் தோற்றும். ஓடிச் சென்று அவளைத் தூக்கி ஆர அணைத்தபடி என்னையே மறந்து போவேன்.

மாலைக் கருக்கல் மங்கி மறைந்து இருள் பரவி றேசலினது தாய் அவளை அழைக்கும் குரல் கேட்கும் வரை, அந்தக் கடற்கரையின் ஒற்றைப் பூவசர மரத்தின் கீழேயே இருவரும் அமர்ந்திருப்போம். அவள் தனது பாஷையிலே பேசுவாள்; நான் எனது பாஷையிலே பேசுவேன். இருவருக்கும் ஒன்றும் புரியாது. புரியவேண்டிய அவசியம்கூட இருக்கவில்லை. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளப் பாஷைதான் அவசியமென்ருல், எமது மூதாதையர் எந்தப் பாஷையிலே பேசிக் கொண்டார்கள்? உள்ளத்தை மூடி மறைத்துப் போலி அரண் எழுப்பி ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்ளவே உதவி வரும் பாஷை எமக்கு வேண்டாம். எமது இதயங்களின் பாஷைதான் பளிங்குபோல தெளிவாக, விளக்கமாக இருக்கிறதே.

எனது அனைத்துலகுமே இந்த மூன்றடிச் சிறுமிக்குள்ளேயே அடங்கிவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட, அந்த உணர்ச்சியிலேயே கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்துகொண்டிருந்தேன்.

"கண்ணீருக்கும் குருதிக்கும், வானத்திற்கும், கடலுக்கும் எவ்விடத்திலும் பேதமற்ற ஒரே நிறந்தான்.

உள்ளுணர்வுகளும், இதய தாகங்களும் இந்த நிறத்தைப் போல அமைந்தவையே. சாதி, மத, இன பேதங்களைக் கடந்தவை இவை."

இந்த ஞானம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, என்னைக் கவிந்திருந்த இனப் பெருமை, உத்தியோகப் பத்ததி எல்லாம் பாம்புத் தோலைப் போலக் கழன்றுவிட, ரேசலின் எனது இதய தேவதையாகி, அவளது குழந்தைமையின் முன்னால் எனது அனைத்துமே சமர்ப்பணமாகிக்கொண்டிருந்தன.

எனது கார் மணலிடையே ஊர்கிறது.

ரேசலின் கார் 'ஹோண்' சப்தம் கேட்டதும் மணலிலே மிதந்து ஓடி வருகின்றாள்.

அவளைத் தூக்கி அணைத்து எனது அன்பு முத்திரையைப் பதித்து...

"மேலும் இரண்டு வருடங்களுக்கு எனது சேவை ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொண்டேன். டார்லிங்! அது உனக்காகத்தான்; உனக்காகவேதான்" என்று விரிவாக, அழகாக, சிரிப்புக் குலுங்கல்களுக்கிடையே சொல்லப்போகிறேன்.

எனது பாஷை அவளுக்கு விளங்காதுதான்.

ஆனால் எனது சிரிப்பு, பாசம், நெஞ்சம் என்பன இருக்கின்றன.

அவை போதும்... அவள் என்னைப் புரிந்துகொள்வாள். அந்தப் புரிதலின் தெளிவிலே அவளது கன்னங்களிலே குழி விழ, அவள் சிரிக்கும்போது...

அந்தச் சிரிப்பிற்குப் பரிசாக அளிப்பதற்கு

என்னிடம்

என்னைத் தவிர

வேறு ஒன்றுமே இல்லை.

(வசந்தம் 1965-12-10)

# 12

## இருவரும் அழுதனர்

"அம்மே மகே அ...ம்...மே"

வேதனையின் பாரத்தையெல்லாம் உயிரிலே ஏற்றி, அந்த உயிரை உதட்டிலே நிறுத்தி ஓலமிட்டாள் விமலவதி.

டொக்டரும், நேஸ்மாரும் திடுக்கிட்டுப் போனார்கள். பிரசவத்தின்போது இவ்வளவு வேதனையை அனுபவிக்கும் ஜீவனை அவர்கள் கண்டது, இதுதான் முதல் தடவை.

நேரம் நொடிகளாகப் பிறந்து, நிமிஷங்களாகத் தவழ்ந்து மணித்தியாலங்களாக நடைபயின்று கொண்டிருந்தது. விமலவதியின் வாழ்க்கை என்ற சிலந்தி வலையிலே பாய்ந்து, அதைச் சீர்குலைக்கக் காலப்பூச்சி தருணம் பார்த்திருந்தது.

ஆனால்... அதற்குத் தோல்விதான். வாழ்வுப் போரிலே விமலவதி, இறுதியில் வெற்றி பெற்றுவிட்டாள்!

மயக்க மருந்தும், டொக்டரின் கடமை உணர்வோடு கலந்திருந்த 'ஒப்பரேசன்' திறமையும் சேர்ந்து, விமலவதியைக் காப்பாற்றி விட்டன.

குழந்தை பிறந்தது.

விமலவதி மயங்கிக் கிடந்தாள்.

அதன் கோலம்...!

குழந்தையா அது?

டொக்டரின் வாய் 'ஹைட்ரோசிபலெஸ்' என முணுமுணுத்தது. மூளைக்குள் நீர் நிறைந்துவிடும் வியாதியாம்.

அங்கு நின்ற எல்லோருடைய கண்களிலும் வேதனையும், அநுதாபமும் குமிழியிட்டு நின்றன. பாவம், விமலவதி!

காலம் வருஷங்களைப் பிரசவித்தபடி இருந்தது. விமலவதியின் குழந்தை என்ற 'அது'வும் வளர்ந்து வந்தது.

மனிதத் தலைகள் இரண்டை ஒன்ருக்கி அமைத்ததைப் போலப் பெரிய தலை; அதிலே குட்டிக் கண்கள், குட்டி மூக்கு, குட்டி வாய், குச்சிக்கால்கள், குச்சிக் கை, சிறிய உடல்.

ஆட்டம் — அசைவு எதுவுமே இல்லை. கிடத்திய கிடைதான். உயிரின் துடிப்பு மாத்திரம் கண்களிலும் மூக்கிலும் ஆடியபடி இருந்தது. அவ்வளவே!

விமலவதி அதைப் பெற்றதும் வேதனைதான், வளர்த்ததும் வேதனைதான். எல்லாமே வேதனை!

அதைப் புதினம் பார்க்க இதயமற்ற சனக்கும்பல் ஒவ்வொரு நாளும் வந்தபடியே இருந்தது. அவர்கள் வரும்போதெல்லாம் அத்தனை பேரையும் கழுத்தைத் திருகிக் கொல்ல வேண்டும் என்று ஆத்திரப்படுவாள் விமலவதி. அவளின் தாயுள்ளம் குமுறிக்குமுறி அடங்கும்.

சாடியுள்ளே அடைக்கப்பட்டிருந்த பூதத்தைப் போல, விமலவதியின் சிறிய நெஞ்சினுள்ளே தாய்மை பூதாகாரமாக வளர்ந்து, உலகத்தைத் தன் கற்பனையிலே சுட்டெரித்தபடி இருந்தது.

விகாரங்களிலே அவள் போடுகின்ற ஒவ்வொரு பூவும், கொடுக்கின்ற ஒவ்வொரு தானமும், அந்தக் குழந்தையின் நன்மையைக் குறிப்பனவாகவே இருந்தன,

"அற்புதம் நிகழத்தான் போகிறது. எனது குழந்தையின் தலைசிறுத்து, அதுவும் குதலை பேசிக் குறுகுறு நடந்து என்னை மகிழ்விக்கத்தான் போகிறது."

விமலவதி பொறுமையோடு காத்திருந்தாள்.

விமலவதியின் கணவன் பியசிறி. ஆள் எப்பொழுதும் ஒரு மாதிரிதான்! ஆடம்பர புருஷன். மடிப்புக் கலையாத 'சேட்' அணிந்து கொலருக்குள் தெரிந்துந் தெரியாதது போல லேஞ்சியை மடித்து வைத்து, 'பளைய காட்' சறம் படபடக்க, கோட்டும் அதுவும் இதுவுமாய் மாப்பிள்ளை போலத்தான், அவன் காட்சி தருவான். ஐந்து ரூபா உழைத்தால் பத்து ரூபாவிற்குச் செலவு காத்திருக்கும். எத்தனை எத்தனையோ ரகச் செலவுகள், பொழுதுபோக்குகள் அவனுக்கு!

சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலே தவறணையில் வாடி விடுவதும், மற்ற நாட்களில் 'திறீறோஸஸ்' சிகரெட்டும் கையுமாக, உலகத்தையே விலைக்கு வாங்கியவன் போலத் திரிவதும் பியசிறியின் வழக்கம்.

இதற்கெல்லாம் உழைக்க வேண்டுமே? 'வாழைப் பழத்தை உரித்துத் தரும் கை அதை ஊட்டியும் விட்டால் என்ன' என்ற நம்பிக்கையிலே, எதிர்பார்ப்பிலே வளர்ந்து ஊறிவிட்ட, சோம்பேறி அவன்.

இப்படிப்பட்டவனுக்கு அந்த மனிதப் பிண்டத்தைப் பார்க்க எப்படி இருக்கும்?

அவன் அதை வெறுத்தான்; நஞ்சுபோல வெறுத்தான்.

விமலவதி 'அதை'க் கட்டியணைத்துத் தாய்மையைப் பொழியும்போதெல்லாம், வெறுப்பிலே அவன் நெளிந்து கொண்டிருப்பான். அருவருப்பால் பாதாதிகேச பரியந்தம் நடுங்கும் அவனுக்கு! அந்தச் 'சனி'யனைப் பியசிறி ஒரு நாளாவது, கடமைக்குக் கூடத் தூக்கிப் பார்த்ததில்லை.

அதைத் தன் குழந்தை என்று நினைக்கும் நினைப்பே அவனைச் சித்திரவதை செய்யும். கூனிக் குறுகிப் போவான்.

"பார், பார். ஒரு நாளைக்கு இந்தச் சவத்தை மண்டையிலே ஒரே போடாகப் போட்டு, வாயைப் பிளக்க வைக்கிறேன். பார்" என்று மிருகம்போல உறுமுவான்.

விமலவதி சிலவேளைகளிலே, அவனோடு சண்டைக்குப் போவாள். "இது என் குழந்தை. பத்து மாதம் சுமந்து பாடாய்ப் பட்டு நான் பெற்ற செல்வம். இதைக் கொல்ல முன்பு என்னைக் கொன்றுவிடு" என்று விமலவதி கண்ணீர் விடுவாள்.

பியசிறி, "பைத்தியக்காரி! பிள்ளையாம் பிள்ளை! இது பேய்" என்று தனக்குள் முணுமுணுப்பான்.

திடீரென்று பியசிறிக்கு ஞானோதயம் பிறந்து விட்டதோ? தன் பிழைகளுக்காய்ப் பிராயச்சித்தம் செய்ய எண்ணிவிட்டானோ?

அன்று வீட்டிற்கு வந்ததிலிருந்து, அதோடு ஒட்டிப் பழகுகிறனே? கொஞ்சுகிறன், தாலாட்டவுமல்லவா தொடங்குகிறன்?

விமலவதிக்கு முதலில் விளங்கவில்லை. பிறகு, அவன் விஷயத்தை உடைத்தபொழுது......

குழந்தையைக் கொண்டு சென்று ஒவ்வோரிடத்திலும், புதினங் காட்டிப் பிழைக்கப் போகிறனும்!

வேறுவிதமாகச் சொன்னல், மக்களின் அநுதாபத்தை வைத்துக் கொண்டு, கடவுளுக்கும், மனிதனுக்குமிடையே, 'தர்ம ஏஜன்ட்' ஆகப் போகிறன்,

"தூ...... நீயும் ஒரு மனிதன? உனக்கு வெட்கம் இல்லையா? உன் பிள்ளையைக் காட்சிப் பொருளாக்கிப் பணஞ் சம்பாதிக்க உன்நெஞ்சு எப்படி இடம் தந்தது"?

விமலவதி அவனைத் திட்டுதிட்டென்று, திட்டிக் கதறி ஒப்பாரி வைத்து......

பியசிறி அசைந்து கொடுக்கவில்லை. "இந்தா! ஏன் கத்துகிருய்? இது எனக்கும் பிள்ளைதான், உன்னளவு உரிமை இதில் எனக்கும் இருக்கிறது. எனக்குக் குறுக்கே நீ நின்ருல்......? அவ்வளவுதான். தொலைத்துத் தலை முழுகிவிடுவேன். உனக்கும் எனக்கும் தொடர்பில்லை என்ருகிவிடும். உன்னைத் திரும்பியும் பார்க்கமாட்டேன். எங்காவது போய்விடுவேன்" என்று அவன் அழுத்தமாக, ஆனல் நிதானமாகச் சொன்ஞன்.

சுரணை நரம்பில்லாத பியசிறி பிடிவாதக்காரனுங் கூட. சொன்னபடி செய்தும் விடுவான். அவனுடைய குணம்சத்தில் இந்தப் 'பிடித்த முயலுக்கு மூன்று கால்' தனம் என்பது மிகமிக முக்கியமானது.

'விமலவதி தாய் மட்டுமல்ல, அவள் பியசிறியின் மனைவி என்பதும், மிகமிக முக்கியமான தவிர்க்கமுடியாத பந்தம்' என்று அவளின் பெண் நெஞ்சு பேசியது.

அவள் பியசிறிக்குப் பணிந்து போய்விட்டாள்.

அடுத்த நாளிலிருந்து பியசிறியின் புதிய உத்தியோகம் ஆரம்பமாகியது.

பட்டினப் பகுதிகள், சனப் புழக்கமான இடங்களுக்கு அவன் குழந்தையைத் தூக்கிச் செல்வான். மர நிழலிலோ, ரோட்டுக் கரைகளிலோ, நடைபாதையிலோ, ஒரு துண்டை விரித்து அதைக் கிடத்தி விடுவான்.

"ஐயா! தருமவான்களே! இந்தக் குழந்தையைப் பாருங்கோ. ஏதோ தெய்வக் குறைபாடாம். இதைப் பெற்ற சீமாட்டி அன்றைக்கே கட்டையைப் போட்டு விட்டாள். நான் சும்மா இருக்க முடியுமா? பெற்ற தகப்பனல்லவா? இந்தக் குஞ்சைக் கொண்டு எத்தனையோ தெய்வ சந்நிதியிலெல்லாம் கிடத்திக் குறையிரந்தேன். இன்னும் நோய் மாறவில்லை, என் பிள்ளையை நினைச்சு

எனக்கு மூளையும் விறைத்துப் போய்விட்டது. இதை விட்டுவிட்டு எப்படி உழைக்கப் போவேன்? தருமதா தாக்களே! எங்களுக்கு இரங்கி உங்கள் தர்ம சிந்தனையைக் காட்டுங்கள். உங்கள் பரம்பரையெல்லாம் சீரோடும் சிறப்போடும் வாழும். புத்த பகவான் கருணை செய்வார்'' என்று அவன் சத்தம் போடுவான்.

முதலில் இப்படிச் சத்தம் போடுவது கஷ்டமாகத் தான் இருந்தது; வெட்கமாகக்கூட இருந்தது. குரலும் நெளிவு குழைவின்றி மறமறப்பாக இருந்ததால், 'தர்மதாதா'க்களின் இரக்கத்தை வரவழைப்பது கஷ்ட மாய் இருந்தது. ஆனால், போகப்போகப் பியசிறி பழகி விட்டான். குரலும் வரவர மெருகேறி இரக்கத்தின் உற்பத்தித் தானமாகிவிட்டது.

கந்தலும், அழுக்குமான துண்டு துணிகளைத் தன் உத்தியோகத்திற்கு, 'யூனிபோம்' ஆக்கிக் கொண்டான். முகத்திலே தாடி வளர்ந்து ஏழ்மைக்கு அழகும் பூரணத் துவமும் அளித்தது.

மக்களின் நெஞ்சைப் பிழிந்து அவர்களின் மடிப் பாரத்தைக் குறைக்கும் கலையிலே பியசிறி நிபுணனாகிக் கொண்டே வந்தான்.

கோயில் உற்சவங்கள், விழாக்களின் போதெல்லாம் அவை நடக்கும் இடங்களுக்குச் சென்று, அவன் நூற் றுக் கணக்கிலே பணம் சம்பாதித்தான்.

குழந்தையில் அவனுக்கு இப்பொழுது எந்த அரு வருப்புமே இல்லை; சமயாசமயங்களிலே மலசலங்கூட எடுத்தான். கிரமமாகக் குளிப்பாட்டினான். நல்ல 'தீனி' யும் கொடுத்தான். முதலான முதல் அல்லவா?

பிச்சைக்காரனாக உழைத்தாலும் மகராஜா போலச் செலவழிக்கத் தெரியும் பியசிறிக்கு.

மாலையானால் குருடோ, முடமோ யாருடைய பொறுப்பிலாவது பிள்ளையை விட்டுவிட்டு அவன்

'சிற்றுலா' போவான்; சினிமா பார்ப்பான்; சிகறற் புகைப்பான்.

இப்பொழுதெல்லாம் அவன் கள்ளின் பக்கமே போவதில்லை. சாராயந்தான் குடிப்பான்.

பணந்தான் குவிகிறதே!

ஒன்றுதான் அவனுக்கு விளங்கவில்லை. வருத்தமாகக் கூட இருந்தது. தன்னுடன் கூடப் பிச்சைப் பிழைப்புக்கு விமலவதியை அழைத்தால், அவள் பிடிவாதமாக அதற்கு மறுத்தே வந்ததுதான் அந்த விளங்காத புதிர்.

தாயின் கண்ணீரிலே, இரக்க உரையிலே தன் வியாபாரத்தை விரிவடையச் செய்ய அவன் விரும்பியதில் என்ன தவறு?

விமலவதிக்கு விளங்கவில்லை.

'பைத்தியக்காரி'

பத்து நாள், இருபது நாள் என்று திரிந்துவிட்டுக் குழந்தையோடு வீட்டிற்கு வருவான் பியசிறி.

அந்த நேரங்களிலே அதைத் தன் அன்பால் முழுக் காட்டி விடுவாள் விமலவதி. 'சீ! அந்தச் சனியனை முகம், வாய் என்று பாராமல் முத்தம் இடுகிறாளே!' என்று பியசிறி ஆச்சரியப்படுவான்.

ஒவ்வொரு தடவையும் "இந்தத் தொழிலை விட்டு விடு. உழைச்சுப் பிழைச்சு என்னையும் பிள்ளையையும் காப்பாற்று" என்று விமலவதி மன்றாடும்பொழுது அவளை ஏசிப்பேசி விரட்டவும் பியசிறி தவறவில்லை.

இந்த மிரட்டலிலே ஒன்றிற்கு என்றைக்குமே செவிசாய்க்காது அவள் இருந்து வந்தாள்.

அவன் சம்பாதிக்கும் பணத்திலே ஒரு செம்புச் சல்லியைக்கூட அவள் தீண்டுவதில்லை.

வீடுவீடாய்ச் சென்று விமலவதி கூலிவேலை செய்வாள், வயல்களிலே, தோட்டங்களிலே சென்று நாலு

காசு உழைப்பாள். அந்தப் பணத்திலேதான் அவள் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடித்து வந்தாள்.

"புத்ததேவா! என் பிள்ளையைக் காட்சிப் பொருளாக்கி உழைக்கிற பணம் எனக்கு நஞ்சு. அதைத் தொடாமலே இருக்க எனக்கு அருள் தா. என் செல்வத்தின் தலையை நல்ல மாதிரி ஆக்கு." என்று மண்டியிட்டு நின்று, கண்ணீரை மலரோடு சேர்த்துப் புத்த தேவனின் காலடியிலே ஒவ்வொரு நாளும் சமர்ப்பித்தே வந்தாள், அவள்.

எப்படியோ நாலு காசு மிச்சம் பிடித்துத் தன் பிள்ளைக்கு ஒரு பொன்சங்கிலி கூடச் செய்து போட்டாள். அந்த வேளையிலே ஒவ்வொரு தாயும் அடையும் பெருமையை அவளும் அடையவே செய்தாள்.

பியசிறியின் தொழில் முடங்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

'வெசாக்' விழாவிற்கு அநுரதபுரத்திற்குச் சென்றிருந்தபொழுது அது நடந்தது.

சனநெரிசலிலே அது தவறிக் கீழே விழுந்து......

பலமான அடி.

மண்டை உடைந்து விட்டது. பியசிறி குழந்தையை ஆசுப்பத்திரிக்குக் கொண்டு சென்றான்.

தந்தி பறந்தது. விமலவதி ஓடோடி வந்தாள். குழந்தையின் நிலைகண்டு இருவரும் அழுதனர்.

"ஐயா என் பிள்ளையைக் காப்பாற்றுங்க, ஐயா! என் உயிரை வேணுமென்றாலும் கொடுக்கிறேன். அதைக் காப்பாற்றுங்க" என்று விமலவதி 'டொக்டரி'ன் காலடியிலே வீழ்ந்து கதறினாள்.

"ஐயா! ஐயா! அதைக் காப்பாற்றுங்க ஐயா! ஆயிரம் ரூபா வேணுமென்றாலுந் தருகிறேன்" என்று பியசிறி கதறினான்.

இருவரையும் ஏமாற்றிவிட்டு அது அமைதியில் கலந்தது.

பியசிறியும் விமலவதியும் அதன்மீது விழுந்து விம்மி விம்மிக் கதறிக் கதறி அழுதார்கள்.

(கலைவாணி டிசம். 1964)

# 13

பிரபல எழுத்தாளரும், தமிழறிஞருமாகிய சுந்தர ராஜன் காலமாகிவிட்டார். அவரது படிப்பறையாக வும், சயனக்கிருகமாகவும், பண்டசாலையாகவும் சாமி யறையாகவும் எல்லாமாயிருந்த அறையில் ஒரு மரக் கட்டிலின்மீது அவரது சடலம் கிடத்தப்பட்டு வெள் ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது. தலைப்பக்கத்திலே ஒரு குத்துவிளக்கு. கால்பக்கத்திலே கண்ணீருங் கம்பலை யுமாக அவர் மனைவி சிவபாக்கியம். ஒன்று எரிந்து கொண்டிருந்தது; மற்றது புகைந்தபடியிருந்தது.

சுற்றிவர உற்றாரும், உறவினருமாகிய பெண்களின் கூட்டம். அவர்களின் ஒப்பாரி இடைக்கிடை எழுந்து சிவபாக்கியத்தின் நெஞ்சக் குருத்தைக் கருக்கி அவளை அழவும் சக்தியற்றவளாய் ஆக்கியபடி இருந்தது.

பற்றுக் குறையும், பஞ்சமும், நோயுமாக வாடி வதங்கிய வேளையிலும் முற்றாகக் கருகிப்போகாத ஒரு குளிர்மையைத் தமது பேச்சாலும், ஆதரவாலும், அன் பாலும் ஏற்படுத்தி வந்த அவர், அவளைத் தவிக்கவிட் டுப் போய்விட்டார். தாய், தந்தை, சகோதர சகோ தரிகள் யாருமற்ற அநாதையான அவளுக்கு எல்லாமா யிருந்த அன்புருவம் வெறும் சவமாகக் கிடக்கிறது. இனி அவளுக்கு யார் துணை?

கண்களோடு இதயமும் இருண்டுகொண்டு வந்தது. சிந்தனையோடு உயிரும் செத்துக் கொண்டிருந்தது. சிவபாக்கியம் சுருண்டு 'அவராயிருந்த' அதன் கால்களிலே தலையை வைத்துக் கிடந்தாள்.

## உறவு முறை

வெளியிலே இடைக்கிடை சந்தம் பிசகாது எழுந்து கொண்டிருந்த பறைச் சத்தமும், பந்தல் போடுபவர்களின் ஆரவாரமும், வருவோர் போவோரின் ஒலிகளும், ஏன், உள்ளே வந்து தன்னைக் கட்டிப்பிடித்துக் கதறி அழுது அநுதாபத்தை வெளியிடும் பெண்களின் ஓலமுங்கூட அவளுக்குக் கேட்கவேயில்லை.

எங்கோ ஆழத்திலே அதல பாதாளத்திலே தலைகுப்புற விழுகின்ற ஓர் அந்தர நிலையிலே —

படுபாதலம் — கச இருட்டு — பயங்கர சூனியம், இனி —

(2)

சரியாகப் பத்தாண்டுகளுக்கு முன்பு சிவபாக்கியம் சுந்தரராஜனின் கைத்தலம் பற்றி ஸ்ரீமதி சுந்தரராஜனுனள். சிறந்த எழுத்தாளர், தமிழ் அறிஞர், நாடறிந்த பிரபலமானவர் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு அவள் அவருக்குக் கழுத்தை நீட்டவில்லை. கலையுணர்வு பற்றியோ, அழகு ரசனை பற்றியோ அவளுக்கு ஒரு மண்ணும் தெரியாது. பாவாடை கட்டும் பருவம் கழியுமுன்னரே, பாடசாலையை விட்டுக் குச்சுக் கொட்டிலில் உரல் உலக்கைகளோடும், அம்மி குழவிகளோடும் உறவாடி வளர்ந்த ஓர் அப்பாவிக் கிராமப் பெண் அவள்.

திருமணச் சந்தையிலே மலிவுச் சரக்காயிருந்த சுந்தரராஜனை, அவளின் தாய், தான் குத்தியிடித்து இரத்தம் பிழிந்து உழைத்த பணத்திற்குப் பெற்றுக் கொடுத்தாள். அவர்களுடைய திருமணம் ஏழ்மைக்கும் ஏழ்மைக்கும், அநாதைத் தனத்திற்கும் அநாதைத் தனத்திற்குமிடையே ஏற்பட்ட ஒரு பந்தமேயல்லாது வேறன்று.

சுந்தரராஜன் ஒரு தமிழாசிரியர்; இருநூறு ரூபா சம்பளத்திற்குப் பெட்டி படுக்கை சகிதம் ஊர் விட்டு

ஊர் செல்லும் தலைவிதியைப் பூண்டவர். அவருடைய கல்வித் தாரதரம் அரிவரி தொடங்கி ஐந்தாம் வகுப்பு வரை 'படித்துக் கொடுக்கும்' அளவிற்குத்தான் தகுதி பெற்றிருந்தது.

ஆனால், அவரது திறமை அந்தத் தராதரப் பத்திரத்தினுள்ளே சிறை செய்யப்படவில்லை என்பதை ஈழத்துத் தமிழுலகமும், அறிஞருலகும் அறிந்திருந்தன. 'சுந்தரன்', 'ராஜன்', 'அமுதன்' என்ற புனைபெயர்களிலே கவிஞனாக, சிறுகதை எழுத்தாளனாக, கட்டுரையாசிரியனாக, நாடக மேதையாக அவர் பத்திரிகை உலகிலும், கலையுலகிலும் உலாவி வந்தார். இலக்கிய, சமயக் கூட்டங்களில் தேன் மாரியாகப் பிரசங்க மாரி பொழிந்தார். இலங்கையின் எங்கோ ஒரு மூலையில் மாதத்தில் ஒரு தடவையாவது நடைபெறும் இலக்கிய, சமய மகாநாடுகளில் அவர் சொற்பெருக்காற்றுவது கடந்த பத்தாண்டுகளிலே சர்வ சாதாரணமாகியிருந்தது.

இவை அவருக்குப் பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. சில சந்தர்ப்பங்களிற் கையைக் கடிப்பதும் உண்டு. ஆனாலும், ஓயாத கலைத்தாகமும், புகழ் வெறியுங்கொண்டு அவர் அலைந்து திரிந்தார்.

இவ்வேளையில் சிவபாக்கியத்திற்கு அவரின் மீது பத்திரிகைகள் அவ்வப்போது பாடிய புகழ்மாலைகளும், பத்திரிகைகளில் வந்த அவரின் புகைப்படங்களும் நினைவில் வந்தன. ஒரு குழந்தையின் உற்சாகத்தோடு சுந்தரராஜன் அவற்றைத் தனக்குக் காட்டி மகிழ்ந்த நாள்கள் அவளுள்ளே படங்களாய் விரிந்தன.

அவர் ஒரு குழந்தைப்பிள்ளைதான்! பொறுப்பில்லாமல் திரிவது தொடங்கி, உணர்ச்சிவசப்பட்டு அழுவது, சிரிப்பது வரை சுந்தரராஜன் குழந்தையிலும் குழந்தையாகத்தான் இருந்தார். ''என்ன இப்படிச் சிறுபிள்ளை மாதிரி இருக்கிறீர்களே? கொஞ்சங்கூடப் பொறுப்புணர்ச்சி இல்லையே உங்களுக்கு'' என்று அவள் சொன்

ஞல், "இதோ பார் ராணி! உனக்கு ஆறு குழந்தைகள் இருக்கின்றன. அந்த ஆருேடு என்னையும் ஏழாக நினைத்துக் கொள்ளேன். இதில் என்ன குறைந்துவிட்டது?" என்று சொல்லிவிட்டு, குழந்தைகள் பக்கத்தில் இருந்தாலும் பொருட்படுத்தாமல் சிவபாக்கியத்தின் மடியிலே படுத்துவிடுவார். அந்த நேரத்தில் அவர் இடி இடி என்று சிரிக்கும் அந்தச் சிரிப்பு!

"அத்தான்! உங்கள் ராணி, இன்று ஆறு குஞ்சுகளோடு அநாதையாய் நிற்கிருளே, தெரியவில்லையா உங்களுக்கு?" என்று சிவபாக்கியம் குருதிக் கண்ணீர் வடிக்கையில் —

நடந்ததையும், நடக்கப் போவதையும் புரிந்து கொள்ளாத அவளின் குழந்தைகள் அங்குமிங்கும் ஓடியாடித் திரிவது மங்கிய நிழல் வடிவாய் அவளுக்குத் தோற்றுகின்றது.

அந்தக் குழந்தைகளைப் பரிதாபத்தோடும், ஆதுரத்தோடும் பார்க்கிறவர்களின் பார்வையும், கைகளாலே தடவுகின்ற தடவலும் —

அவள் வயிற்றைக் கலக்கி, இதயத்தைச் சுக்கு நூருக்கி —

"கடவுளே! என் குழந்தைகளின் எதிர்காலம் —"

சிவபாக்கியம் தன்னுள்ளே தாஞகிச் சமாதி நிலையில் கண்மூடிக் கிடக்கிருள்.

பறை முழங்குகின்றது. பெண்கள், ஆண்கள் மாறிமாறி வருகின்றனர். போகின்றனர். வேலைகள் துரிதமாக நடக்கின்றன.

சவமாகிவிட்ட சுந்தரராஜன் சாம்பராக இன்னும் சில மணித்தியாலங்களே இருக்கின்றன.

குருக்களும் வந்துவிட்டார்.

## (3)

பாடசாலைகளை அரசாங்கம் எடுத்ததால் யாருக்காவது நன்மை ஏற்பட்டிருந்தால், அவ்வாறு நன்மை பெற்ற ஒரு சிலரில் சுந்தரராஜனும் ஒருவர். இது நாள்வரை வெளியூர்களிலே கடமையாற்றி இலங்கைப் புகையிரதப் பகுதிக்கும், இ. போ. ச. விற்கும், உணவு விடுதிகளுக்குமே தமது சம்பளத்தைப் பகிர்ந்து கொடுத்துவிட்டுத் தமது குடும்பத்தை அரைப்பட்டினியிலே போட்டு வந்த அவருக்கு ஊரோடு மாற்றம் வந்தது பெரும் வரப்பிரசாதமாகவேயிருந்தது. ஐந்து வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திற்கு அதுவும் பெரியதொரு கல்லூரிக்கு மாற்ற உத்தரவு கிடைத்த பொழுது சுந்தரராஜன் மகிழ்ச்சி வெள்ளத்திலே முக்குளித்தார் என்றே சொல்ல வேண்டும்.

சிவபாக்கியத்திற்கோ ஆனந்தம் அளவிடவியலாததாய் இருந்தது. சுந்தரராஜனிலும் நூறு மடங்கு கூடிய நிம்மதி அவளுக்குத்தான் ஏற்பட்டது. கொட்டில் வீட்டைக் கல்வீடாய் மாற்றி அமைக்கலாம் என்றும், அடகிலே கிடக்கும் நகைகளை மீட்கலாம் என்றும், குழந்தைகளுக்கு வயிறுர உணவு கொடுத்து, மரியாதையைக் காக்க நல்ல துணிமணிகளை வாங்கலாம் என்றும் அவள் எத்தனையோ கனவுகளைக் கண்டாள். எல்லாவற்றிலும் மேலாக அவர் என்றைக்கும் பக்கத்திலேயே இருப்பார் என்ற நினைவே அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

ஆனால் — குச்சு வீடு குச்சு வீடாகத்தான் இருந்தது. நகைகள் சுவரில் அடித்த பந்துபோலச் சில நாள்கள் வீடுதிரும்பி அவளிடம் இருந்துவிட்டு மீண்டும் அடகுக் கடையையே நாடிச் சென்றன. பிள்ளைகள் போஷாக்குக் குறைந்தவர்களாயும், பிணிகொள் கலங்களாயுந்தான் இருந்தார்கள்.

சுந்தரராஜன் வந்த வழி அது. தமிழாசிரியரின் சிக்கன சுபாவத்திற்கு மாருக ஒரு கலைஞனின் ஊதா

ரிக் குணத்திற்குத்தான் அவர் எடுத்துக்காட்டாயிருந்தார். மாதம் முழுவதும் கல்லூரியிலே கத்துவதற்குக் கிடைத்த பணம், கிடைத்த இரண்டொரு நாட்களில் அந்தர்த்தியானமாகிவிட எஞ்சிய நாள்களை அவர் கழிப்பதற்கு முடியாது திண்டாடுவது வழக்கமாகிவிட்டது.

சிவபாக்கியம் ஏழ்மை வாழ்விற்குப் பழக்கப்பட்டவள்தான்; ஆனால், ஊதாரித்தனத்தால் கணவன் ஏற்படுத்துகின்ற வறுமையைத்தான் அவளால் சகிக்க முடியாதிருந்தது.

சம்பளம் கிடைத்த அன்று குடும்பம் முழுவதும் கார் பிடித்துக்கொண்டு படத்திற்குச் செல்லவேண்டும் என்பது சுந்தரராஜனின் நியதி. பணம் இருக்கையில் குழந்தைகள் எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுத்துவிடுவார். அவை ஒரு நிமிடத்தில் வாங்கியதைப் போட்டு உடைத்து நொருக்கினுலென்ன, கிழித்துக் குதறினுலென்ன அதைப்பற்றிச் சிறிதும் வருத்தப்படமாட்டார்.

இந்த அநியாயச் செலவுகளைப் பற்றிச் சிவபாக்கியம் மூச்சுவிடக்கூடாது. ''அநுபவிக்கவேண்டிய காலத்தில் எல்லாம் அநுபவித்துவிட வேண்டும். பணத்தைச் சுடலைக்குப் போகும்போது கட்டிக்கொண்டா போகப் போகிருேம்? குழந்தைகளின் முகங்களிலே காணப்படும் ஒரு நிமிஷ மலர்ச்சியின் பெறுமதி, நான் செலவழிக்கும் பணத்திலும் எவ்வளவோ மேலானது'' என்றெல்லாம் அவர் பேசும்பொழுது சிவபாக்கியத்திற்குக் கோபம் கோபமாக வரும். வந்து என்ன செய்வது? சுந்தரராஜனைத் திருத்தக் கடவுளாலும் முடியாது.

அநுபவிக்க வேண்டியதையெல்லாம் அநுபவித்துவிட்டு அவர் போய்விட்டார்.

இனி அவள் கதி? குஞ்சுங் குருமானுமான பிள்ளைகளின் கதி?

கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கக்கூட நாதியற்ற அவளுக்கு இனி யார் துணை? எந்த ஆதாரத்

திலே அவள் தனது வாழ்க்கையைக் கொண்டிழுக்கப் போகிறுள்?

மிச்சம் மீதியென்றிருந்த ஒரே ஒரு சங்கிலி இன்று சுந்தரராஜனின் கடைசிப் பயணச் செலவுகளுக்காய் நகைக்கடையை நாடிச் சென்றுவிட்டது.

நாளை?

திரும்பிய பக்கமெல்லாம் அநாதரவும், அந்தகார மூமாய்த் தெரிய அவள் கிடந்த இடத்திலேயே, சுந்தர ராஜனின் குளிர்ந்த கால்களுக்குமேல் சுருள்கிறுள்.

பலவந்தமாக அவளை அப்பால் விட்டு நாலுபேர் வந்து கட்டிலோடு சடலத்தைத் தூக்கிச் செல்கிருர்கள்.

குளிப்பாட்டவாம்!

குழந்தைகள் ஒன்றும் புரியாது விழித்துப் பார்க்கின்றன. சவத்தின் பின்னுல் ஓடுகின்றன.

சிவபாக்கியம் நிலத்திலே விழுந்து குப்புறக் கிடக்கிருள். அறிவுக்கும், அந்தகாரத்திற்கும் இடைப்பட்ட நிலை.

சுந்தரராஜனுக்குச் சிறிய தாய் முறையான கிழவி ஒருத்தி தன் சேலைத் தலைப்பால் அவளுக்கு விசிறுவது கனவுக்காட்சி போலத் தெரிகிறது.

அவள் கிடக்கிருள் —

## (4)

"அந்தாள் தமிழ் வாத்திதான். எண்டாலும் பெரிய வீரனல்லே? இலங்கையிலை அந்நாளைப் போலத் தமிழ் எழுத இரண்டொருதராலைதான் முடியும். பேச்செண்டால் சுந்தரராஜன் தான் எண்டு பேரும் எடுத்துப்போட்டுது, இந்த இளம் வயசிலை. எத்தனை தமிழ்ச் சங்கங்களுக்குத் தலைவர், காரியதரிசி தெரியுமே? உம் — என்ன இருந்தென்ன? வாழத் தெரியேல்லை. இப்பிடிக்

குறுக்காலே யமன் வந்திட்டான். பொடிச்சிதான் பாவம்.'' இளைப்பாறிய சிங்கப்பூர்ச் சந்திரசேகரம் இவ்வாறு பேசுவது சிவபாக்கியத்தின் காதுகளிலே விழுகிறது.

சிவபாக்கியம் உள்ளுக்குள்ளே சிரித்துக்கொள்கிருள். செத்தபின் வாய் வார்த்தைகளால் அபிஷேகம் செய்துவிடுவது சுலபந்தான். ஆனல், இந்த வார்த்தைகள் அவளின் வாழ்க்கைப் பாதையிலே எவ்வளவு தூரம் தொடர்ந்து வரப்போகின்றன?

சிவபாக்கியம் பல விஷயங்களை நினைவுத் திரையிலே ஓட்டி ஓட்டிப் பார்க்கிருள். இவ்வளவு பேசுகின்ற இந்தச் சந்திரசேகரம், நோட்டுக்கு ஆயிரம் ரூபா கடன் தருமாறு சுந்தரராஜன் கேட்டபொழுது சொன்ன வாசகங்களை, வாழ்க்கையிலே மறந்துவிட முடியுமா?

''இஞ்சை பாரும் மாஸ்டர்! நீர் பிள்ளைகுட்டிக்காரன். சும்மா கூட்டங்கள் நாட்டங்களெண்டு திரியிற ஒரு விசரன். உம்மிட்டை என்ன பொறுப்பு இருக்கெண்டு நான் கடன் தாறது? சும்மா கசாம், புசாமெண்டு பத்திரிகையிலை நீர் எழுதின இரண்டொரு கதையைப் பொறுப்பாய் வைச்சே காசுதரச் சொல்லுகிறீர்? எனக்கு ஒளிச்சு மறைச்சுப் பேசத் தெரியாது. சொல்லுறன் கேளும். உமக்குக் காசு வேணுமெண்டால் உம்முடைய இரண்டு பரப்புக் காணியை ஈட்டுக்குத் தாரும். ஆயிரமல்ல இரண்டாயிரந் தாரன்.''

இத்தனைக்கும் சந்திரசேகரம் சுந்தரராஜனுக்கு ஒன்று விட்ட தாய்மாமன் முறையானவர். ஆனல், அவர் அன்று பேசின அந்தக் கொழுத்த பேச்சு!

சுந்தரராஜன் உணர்ச்சி வசப்படுபவரல்லவா? அவர் கண்டபடி பேசிவிட்டு வீட்டிலே வந்து பாக்கியத்தின் தோள்களிலே தலையைச் சாய்த்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார். சிவபாக்கியமும் அவரோடு சேர்ந்து அழுதாள்.

அவளால் வேறு என்னதான் செய்யமுடியும்?

ஒழுகுகின்ற கிடுகுக் கூரையை ஓட்டுக் கூரையாக மாற்ற அவர் எடுத்த முயற்சி இப்படிப் பிசுபிசுத்துப் போகவும், அவர் அவமானப்படவும் காரணம் — ?

சந்திரசேகரம் அன்று பேசிய பேச்சு! அவர்தாம் இன்று சுந்தரராஜனுக்குப் புகழ்மாலை சூட்டுகிறார்!

சுந்தரராஜன் அன்று பாடிய பட்டினத்தார் பாடல் வரிகள் சிவபாக்கியத்தின் நினைவில் மிதக்கின்றன.

'ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப் பெற்ற பேருஞ் சதமல்லப்
பெண்டிர் சதமல்ல..........,

சிவபாக்கியத்தை அணைத்துப்பிடித்துக்கொண்டு, கடைசித் தடவையாக அரப்பு எலுமிச்சங்காய் வைப்பதற்காகச் சுந்தரராஜனைக் குளிப்பாட்டும் இடத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

குழந்தைகளுக்கு எண்ணெய் வைக்கையில் அவர்களோடு வரிசையில் வந்து நின்று தாமும் ஒரு குழந்தையாகி எண்ணெய் வைப்பிக்கும் சுந்தரராஜனுக்கு, அவள் அரப்பும், எண்ணெயும் வைக்கப் போகிறாள்.

கடைசித் தடவையாக —

அடிவயிற்றிலிருந்து குடலைக் கிழிப்பதுபோல ஓர் ஓலம் எழுகிறது. சிவபாக்கியத்திடமிருந்து.

ஆண்கள்கூடத் தங்கள் சால்வைகளால் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்கள்.

## ( 5 )

அன்றைக்குப் பிறகு சுந்தரராஜன் யாரிடமும் கடன் கேட்பதில்லை. பத்து ரூபாவுக்கும், பதினைந்து ரூபாவுக்கும் 'டியூசன்' கொடுக்கப்போய் ஓடாய் உழைத்

தார்; இரவும் பகலும் கதை, கட்டுரை என்று எழுதி எழுதித் தள்ளினர்.

ஆனல், அவர் எதிர்பார்த்த பணவருவாய்தான் எட்டாக் கனியாய் நின்று ஏய்த்தது. எப்பொழுதாவது இருந்திருந்து பத்திரிகையில் வெளியாகும் கதை, கட்டுரைகளுக்குப் பத்தோ, பதினைந்தோ, இருபதோ அனுப்புவார்கள்.

ஒரு தடவை சுந்தரராஜன் ஒரு கிழமை இரவும் பகலும் முயன்று கம்பனின் கவிதைகளிற் சிலவற்றிற்கு நீண்டதொரு விமர்சனம் எழுதினர். அந்தக் கவிதைகள் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவருக்குப் பாடமாய் இருந்தபடியால், பத்திரிகைகளில் அக்கட்டுரைக்கு வரவேற்பு இருக்கும் என்ற நம்பிக்கை அவருக்கு! பத்து இதழ்களிலாவது அது வெளியாகும். ஓர் இதழுக்கு இருபத்தைந்து ரூபா வீதம் இருநூற்றைம்பது ரூபாவாவது கிடைக்கும், என்று அவர் மனக் கோட்டை கட்டினர்.

அவரது நம்பிக்கை பழுதாகவில்லை. பத்திரிகையில் அக்கட்டுரைகள் வெளியானபோது பாராட்டுக்கள் குவிந்தன. தனிப்படக்கூடப் பல தமிழறிஞர்கள் அவருக்குப் புகழ்மாலை சூட்டிக் கடிதங்கள் எழுதினர்கள்.

ஆனல் பணம்...? அவர் கட்டிய மனக்கோட்டை நொருங்கிச் சரிந்து போகும் வகையில், கட்டுரைகளை வெளியிட்ட பத்திரிகை மௌனமாகவே இருந்து விட்டது. ஒரு சதங்கூட அனுப்பவில்லை.

சுந்தரராஜன் மனம் நொந்துபோனர். "இந்தக் கட்டுரையை எழுத எத்தனை நூல்களை ஆராய்ந்து குறிப்புக்கள் எடுத்திருப்பேன்! எவ்வளவு நாள் சிந்தித்திருப்பேன்! எத்தனை நாள்கள் கண் விழித்து எழுதியிருப்பேன்! குறைந்தது நான் எழுதிய தாள்களுக்கும், மைக்குங்கூட, ஒரு பத்து ரூபாக் காசு கிடைக்கவில்லை, பார்த்தாயா?" என்று அவர் கண்கலங்கிச் சொன்ன வேளையில்...;

சிவபாக்கியத்தால் அழத்தான் முடிந்தது.

வேறு என்ன செய்வாள்?

பந்தலிலே கட்டிலைப் போட்டுப் பிரேதப் பெட்டியை அதன்மீது வைத்துச் சுந்தரராஜனைக் கிடத்தியிருக்கிறார்கள். வெள்ளை வேட்டி, நேஷனல் சட்டை, தோளில் உத்தரீயமாய்ப் போட்டிருக்கும் பட்டுச் சால்வை, தலைப்பாகை, பூமாலை சகிதம் சுந்தரராஜன் மாப்பிள்ளைக்கோலத்திலே கிடக்கிறார்; இல்லை — கிடக்கிறது.

அழுகை, ஆரவாரங்கள் எல்லாம் அடங்கிப் போய் விடுகின்றன. குருக்களின் மணியோசையும், மந்திரங்களும் அங்குக் கம்பீர நாதமாய் எழுந்து கொண்டிருக்கின்றன.

சுற்றிவர ஒரே மனிதக் கும்பல். அது நின்றும் இருந்தும் புதினம் பார்க்கிறது ஆசிரியர்கள், சுந்தரராஜன் கல்வி கற்பித்த கல்லூரி அதிபர், மற்றும் ஊழியர்கள், பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள்... இன்னும் பலர்...

மாவிலையோடு சேர்த்து உரலின் இடையிலே வெள்ளைத் துணி கட்டி, அதனுள்ளே உலக்கையையிட்டு அதிலே ஒரு கையைப் பிடித்தவண்ணம், மூத்தவன் — எட்டே வயதானவன் — இராஜராஜன் நிற்கிறான். தலை மயிரை ஒட்டவெட்டி, மார்பு, கையெல்லாம் குறிகளோடு, வெள்ளைத் துணியொன்றை அரையில் உடுத்து, மார்பிலே பூணூல் அணிந்து, ஐயோ!

அவனைத் தாங்கிக்கொண்டு சந்திரசேகரம் நிற்கிறார். திருப்பொற்சுண்ணம் தொடங்குகின்றது.

'முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி...'

இராஜராஜனுக்குப் பக்கத்தில் தேன்மொழி, மங்கை, தயாளன், சீராளன். சுந்தரராஜனின் சிறிய தாய், கடைசிக் குழந்தை இராஜேந்திரனைத் தூக்கி இடுப்பில் வைத்து நிற்கிறாள். அது தனது சிறிய வாயிலே விரலை வைத்துச் சூப்பியபடி, சூழ இருக்கும்

உலகினை விழித்து விழித்து மிரள மிரள நோக்குகிறது.

திருப்பொற்சுண்ணம் முடியும்வரை சிவபாக்கியம் வாய்விட்டுக் கதறி அழக்கூடாது.

கைகளும் கால்களும், உடலும் சோர்ந்து விழ அவன் இதயத்தினுள்ளே குலுங்கிக் குலுங்கித் தேம்பித் தேம்பிக் குமுறிக் குமுறி அழுகிறாள்.

(6)

எல்லாம் நடந்து முடிந்துவிட்டன. இனிப் பிணத்தைப் பாடையிலே ஏற்றவேண்டியதுதான்.

ஆனால்... திடீரென்று பிணவீடு மேடைப் பேச்சரங்காய் மாறுகின்றது.

சுந்தரராஜனின் படிப்பித்தற்றிறமை, பழகும் பண்பு, பலதரப்பட்ட ஆற்றல்கள்பற்றி அவர் படிப்பித்த கல்லூரி அதிபர் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறார். அவரைத் தொடர்ந்து சில ஆசிரியர்கள் சுந்தரராஜனுக்குப் 'பரவல்' செய்கின்றனர்.

"சுந்தரராஜனைப் போன்ற சிறந்த எழுத்தாளர்கள் அடிக்கடி தோன்றுவதில்லை. அவரது எழுத்தாற்றல், நாடறிந்த செய்தி. எங்கள் பத்திரிகை அவரது கதை, கட்டுரை, கவிதைகளால் பெருமை பெற்றது என்று தயங்காது கூற விரும்புகிறேன். கலை, கலைக்காகவே என்று அவர் வாழ்ந்தார். அவர் நினைத்திருந்தால் தமது எழுத்தாலேயே ஆயிரம் ஆயிரமாய் உழைத்திருக்கலாம். ஆனால், இலக்கியத்தைக் கொண்டு பணம் பண்ண விரும்பாத பண்பாளராய் அவர் வாழ்ந்து மறைந்தார். இப்படிப்பட்ட பெருமகனை இனி என்று காணப்போகின்றோம்? அவரது ஆன்மா சாந்தியடைவதாக."

பிரபல நாளிதழொன்றின் ஆசிரியரும், மாதம் ஆயிரம் ரூபா சம்பளம் பெறுபவரும், ஆடம்பரமான

பெரிய கார் ஒன்றிலே வந்திறங்கியவருமாகிய திருவாளர் பொன். செண்பகராசன் வழங்கிய மதிப்புரை — பாராட்டுரை — இறுதியுரைதாம் இந்த வாசகங்கள். இவர்தாம் சுந்தரராஜனது 'கம்பன் கவிதை' விமர்சனக் கட்டுரையை வெளியிட்டவர்.

தமது பேச்சு முடிந்ததும், சந்திரசேகரத்தைக் கொண்டு, வீட்டுச் சுவரில் தூங்கிய சுந்தரராஜனது நிழற்படத்தை வாங்கியவராய் அவர் தமது காரை நோக்கிச் செல்கிறார். அவரைத் தொடர்ந்து எழுத்தாளர் சிலர் ஏதோ பேசிக்கொண்டு செல்கிறார்கள். "நாளைப் பத்திரிகையில் சுந்தரராஜனின் படத்தோடு வெளியிட ஒரு கட்டுரை எழுதித் தாரும்" என்று அவர் தம் பக்கத்திலே செல்லும் எழுத்தாள நண்பரைக் கேட்பது, சிவபாக்கியத்தின் காதுகளிலே தெளிவாக விழுகின்றது. அவள் சிரித்து, அழுகிறாள்......

பாடை தூக்கப்படுகிறது. பெண்களின் ஒப்பாரி கிளம்பி வளர்கிறது. சிவபாக்கியம் அழவும் மறந்து, சோர்ந்துபோய்ப் பந்தல் தூண் ஒன்றைப் பற்றியவண்ணம் இருக்கிறாள். இராஜராஜனையும், கைக்குழந்தையையுந் தவிர்ந்த மற்றைய குழந்தைகள் அவளுக்கு அருகிலே வந்துநின்று இப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தவைபோலக் கதறி அழுகின்றன. அவளோ சமாதியாகி நிலந்தோய அமர்ந்திருக்கிறாள்.

சந்திரசேகரம் திடீரென்று அவளருகே ஓடிவந்து கீழே குந்திக்கொண்டு, "பிள்ளை! ஒரு விஷயம்" என்று குசுகுசுக்கிறார். அவள் 'என்ன?' என்று விழியாலும் துடிக்கின்ற உதடுகளாலும் கேட்கிறாள்.

"பிள்ளை! நீ தந்த சங்கிலிக் காசு கொஞ்சம் போதாதுபோலையிருக்குது. பறைகாரன், பாடைக்காரனுக்கெல்லாம் காசு குடுக்கவேணும். என்ன செய்யிறது?" தயங்கித் தயங்கிப் பேசுவதுபோலச் சந்திரசேகரம் கேட்கிறார்.

சிவபாக்கியம் ஒன்றும் பேசாது தனது காதோலைகளைக் கழற்றி அவரிடம் கொடுக்கிறாள்.

அவர் வேதனைப்படுவதுபோலக் காட்டிச் சிறிதே நின்றவர், "உம்... உன் நிலையும் இப்படியாய்ப் போச்சுது. என்ன செய்யிறது? நான் இதை அடகாய் வைச்சுக்கொண்டு நூறு ரூபா செலவழிக்கிறன். நீ வசதி போலைத்தா" என்று சொல்லியவராய், வராத கண்ணீரைச் சால்வையால் துடைத்துக்கொண்டு எழுந்து சவத்தைத் தொடர விரைவாய் நடக்கிறார்.

பறையின் சப்தம், சிவபுராண ஒலி, கதறல்கள், அழுகைகள் எழுந்துகொண்டிருக்கின்றன.

பிரபல எழுத்தாளர் சுந்தரராஜனின் இறுதிப் பயணத்திற்கு அவை கட்டியம் கூறுகின்றன.

(தினகரன் 1967-12-16)

# 14

ஆனந்தமும், ஒளியும் போட்டியிட்டு ஆக்கிரமிக்கும் சுவர்க்க உலகத்தின் ஒரு வெளியிலே இரு நாய்கள் நின்றன.

அவை அழகாய் இருந்தன; கண்களைக் கூசவைக்கும் ஒளிப்பிழம்புகளாய்க் காட்சி தந்தன. எல்லையற்ற ஆனந்த வாரிதியிலே அவை மிதந்து கொண்டிருந்தன.

ஒன்று ஆண். மற்றது பெண்.

பூவுலகிலே, வாழ்வின் வசந்த காலமாகிய இளமைப் பருவத்திலே அந்த ஆண் நாயின் உயிர்க்காதலியாய் இருந்ததாம் அது.

இன்று உடற்சட்டையைக் கழற்றி எறிந்து, சுவர்க்க உலகின் நிரந்தரவாசிகள் ஆனபின்னரும் பழைய உறவை மறந்து விடவில்லை.

ஒன்று மற்றதன் முகத்தை நக்கிவிட்டது. மனித பாஷையிலே சொல்வதானால் ஒன்றை ஒன்று முத்தமிட்டது.

## குட்டை நாய்

"இந்த வாழ்க்கை உனக்கு இனிமையாக இருக்கிறதா? எனக்கென்னவோ இது திருப்திப்படவில்லை. ஆசையுடன் என்னைக் கூவி அழைக்கும் எஜமானரையும், மடியிலே வைத்துத் தடவிக் கொடுக்கும் அவரின் மனைவி, குழந்தைகளையும் என்னால் மறக்கவே கூடவில்லை. அவர்கள் ஆசையோடு தந்த மீன் பொரியல், இறைச்சித்துண்டு, 'பிஸ்கட்' இவற்றை

இப்பொழுது நினைத்தாலும் வாய் ஊறுகின்றது.'' இவ்வாறு பெண் நாய் சொல்லிற்று. அந்த வேளையில் அதன் நீண்ட நாக்கிலிருந்து நீர் ஒழுகலாயிற்று. 'நடுச் சமுத்திரத்திலும் நாய்க்கு நக்குத் தண்ணீர்' என்ற பழமொழிக்கு அந்த வேளையில் அது சாட்சியாயிற்று.

பெண்ணின் அறியாமை நிறைந்த வார்த்தைகளைக் கேட்ட ஆண் கலகல என்று நகைத்தது. அதன் சிரிப்பு, காதலிக்கு எரிச்சலை மூட்டிற்று. அது சொல்லியது, ''நன்றி கெட்டவனே! எம் இனத்திற்கே உரிய நன்றி விசுவாசம் உனக்கு மட்டும் இல்லாமற் போனதேன்?''

ஆண் நாய் பெருமூச்சுவிட்டது. ''உண்மையை உணர்ந்தால் நீ இப்படியெல்லாம் பேசமாட்டாய். எனது துன்பம் நிறைந்த அநுபவந்தான் உன் முட்டாள் தனமான பேச்சைக் கேட்டுச் சிரிக்கவைத்தது. மனிதர்கள் பொல்லாதவர்களடி, பொல்லாதவர்கள்'' என்று அது நிதானமாக ஆனால், வெறுப்பிலே குமைந்தவண்ணம் கூறிற்று.

பெண் மீண்டும் படபடத்தது. ''உன் கூற்று அர்த்தமற்றது. மனிதர்களின் செல்லப்பிள்ளைகள்தாம் நாம்; அவர்கள் எம்மீது காட்டும் பரிவே நிரந்தரமானது; அதைப் புரிந்துகொள்ளும் இதயம் உனக்கு இல்லை. நீ ஓர் அரக்கன்.''

இப்பொழுது ஆண் சிரிக்கவில்லை: ''உண்மையின் ஒரு பக்கத்தைத்தான் நீ கண்டிருக்கிறாய். அதன் மறு பக்கம் எவ்வளவு பயங்கரமானது என்று உனக்குத் தெரியாது.'' என்று வேதனை ஊறி வழியுங் குரலிலே அது சொன்னது.

பெண்ணுக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது: ''நீ என்னதான் சொல்கிறாய்?'' என்று அது ஆணை நோக்கிக் கேட்டது.

''நீ எனக்கு முந்திவிட்டாய்: இல்லா விட்டால் நான் அனுபவித்த சித்திரவதை உன் கண்களிலே குரு

திக் கண்ணீரை வடியச் செய்திருக்கும். அடியின் வேதனையால் நான் அலறிய குரல் உனக்குக் கேட்டிருக்க நியாயமில்லை. நீதான் நித்தியானந்தப் பெருவாழ்விலே நிலை பெற்று விட்டாயே! நான் அசக்தனுய், குட்டையனுய்த் துடிதுடித்தபோது என் எஜமான் என்ன செய்தான் தெரியுமா? கண்ணீரின் நெடியே வீசப்பெருத இந்த உலகத்திலே என் துன்பக் கதையைச் சொல்லக் கூடாது. வா. எல்லையற்ற வானவெளியிலே நீந்திய வண்ணம் அதைச் சொல்கிறேன்.''

இவ்வாறு சொல்லிய வண்ணம் ஆண், வானவெளியிலே தனது விந்தைச் சிறகுகளை விரித்துப் பறக்கத் தொடங்கியது. கேள்விக் குறிகளால் நிறைந்து பாரமாகி விட்ட உள்ளத்தோடு பெண் அதைத் தொடர்ந்தது.

"நீ மறந்திருக்க மாட்டாய் என்றே நினைக்கிறேன். ஒருநாள் என் எஜமானின் வீட்டிற்குத் திருடர்கள் வந்ததும், நான் குரைத்த குரைப்பும், அதனுல், திருடர்கள் பிடிபட்டதும் ஞாபகம் இருகிறதா?''

"அந்தத் திருடர்களிலே ஒருவன் என் வயிற்றில் உதைத்த உதையால் நான் வாதைப்பட்டதும் உன் நினைவுத் திரையிலே அழியாமல் இருக்கும் என்று நம்புகிறேன். உன் அன்பான அரவணைப்பும், எஜமானதும், அவன் குடும்பத்தினரதும் பாராட்டும் என் நோவை ஒரளவு மறக்கச் செய்தன.'' என்று கூறி ஆண் சற்றே தன் பேச்சை நிறுத்தியது. பெண் இதுதான் சந்தர்ப்பம் என்று பிடித்துக்கொண்டது. "பார்த்தாயா, பார்த்தாயா? உன் எஜமானும், குடும்பத்தினரும் உன்னில் எவ்வளவு அன்பாய் இருந்திருக்கின்றனர்! எவ்வளவு நன்றியுள்ளவராய் உன்னைப் பாராட்டியிருக்கின்றனர்! இவ்வளவையும் மறந்து நீ மனித வர்க்கத்தையே திட்டத்தொடங்கி விட்டாய். நன்றிக்கு இலட்சியமாய் வாழும் நாய்க்குலத்திற்கே நீ ஓர் அவமானச் சின்னம்!'' என்று அது பொரிந்து தள்ளியது.

ஆண், அது பேசி முடிக்கும்வரை பொறுமையோடு காத்திருந்தது. உலகிலே கடவுளுக்காக வாத விவாதங்களிலே இறங்கி மண்டையை உடைத்துக் கொள்ளும் அதிபக்த சிகாமணி போன்று மூச்சுவிடாது பேசித் தள்ளிய தன் காதலியை அது, அநுதாபங்கலந்த கேலியோடு நோக்கியது. போன ஜென்மத்தில் தன் எஜமானால் கழுத்திற் சங்கிலிபூட்டி வைக்கப்பட்டுத் தழும்பேறி அதன் அடையாளம் இன்னமும் முற்றாய் மறைந்து போகாத இடத்தை, அது ஒரு தடவை நக்கிவிட்டுப் பெண்ணைப் பார்த்துப் பேசலாயிற்று. "நீ அறியாது பேசுகிறாய். மனிதர்கள் பழுத்த சுயநலமிகள். அன்பே இல்லாதவர்கள். இரக்கமற்றவர்கள். அவர்களின் உள்ளங்கள் பாறாங்கற்கள். புத்தியற்ற நாம் அவற்றோடு மோதிக்கொள்கிறோம். இதன் பயன் எம் மண்டைகள் உடைவதுதான். குழந்தைகளுக்கு நாங்கள் விளையாட்டுக்கருவிகள். சீமாட்டிகளின் நாகரிகத்திற்குச் சின்னங்கள் நாம். அணைக்கும் அவர்களின் கைகளே பல சமயங்களில் எம்மை அடித்துத் துன்புறுத்துவதையும் நீ அறியாதவள் போலப் பேசுகிறாய்!"

இவற்றிற்குப் பதிலிறுக்கும் வகையில் பெண் ஏதோ சொல்ல வாயைத் திறந்தது. ஆண் அதைத் தன் பார்வையாலே அடக்கிவிட்டு, "சரி! சரி! நாம் வீணே வாதிப்பதால் ஆவதொன்றும் இல்லை, எங்கோ தொடங்கி எங்கோ முடித்து விட்டேன், பார்த்தாயா? இருக்கட்டும். மிகுதிக் கதையைக் கூறுகிறேன் கேள்." என்று அது தன் கதையைத் தொடர்ந்தது. பெண், அதன் வார்த்தைகளைக் கேட்டபடி அதன் பக்கலிலே படுத்தபடியிருந்தது.

"நாள்கள் சென்றன: என் நோவும் சிறிது சிறிதாய்க் குறைந்து. மறைந்தது. பழைய அணைப்பிற்கும், அடிகளுக்குமிடையே, நான் உன் அன்பிலும், ஆதரவிலும் வாழ்வைச் சுவைத்து மலர்ந்து கொண்டிருந்தேன்."

"ஒருநாள் மோட்டார் வாகனம் ஒன்று யமனாய் வந்து உன் உயிரைக் கவர்ந்து சென்றது. என் வாழ்வின் ஒளி விளக்கே அணைந்தது போலாகிவிட்டது. அன்பே! அந்நாள்களில் நான் பட்டவேதனை இருக்கிறதே! அதை வார்த்தைகளில் வருணிக்கவே முடியாது. வேனிற்பருவத்து நிலா மலர்ந்த இரவுகளிலும், சரற்காலத்தின் இனிய காலைப் பொழுதுகளிலும் உனக்காக, என் தனிமைக்காக நான் ஏங்கிப் பிரலாபித்துக் கதறியமை இன்றும் என் நினைவிலே பசுமை மாறாமல் இருக்கிறது." இதைச் சொல்லியதும் ஒருமுறை அது தன் காதலியைக் கனிவோடு நோக்கியது. பெண்ணும் நாணித் தலைகுனிந்து தன் விழிப்பார்வையால் ஆணை ஆதாரத்தோடு நோக்கிவிட்டு, "சரி! மேலே சொல்" என்றது.

ஆண் தொடர்ந்தது.

"காலம் சென்றது. பருவங்கள் மாறி மாறி வந்தன. என் இளமையும் கருகிக்கருகி வந்தது; முதுமை என்மீது படையெடுத்தது. என் தோற்றத்தின் கவர்ச்சி மறைய, அதே வேகத்தில் என் எஜமானுக்கும், குடும்பத்தவர்க்கும் என்மீதிருந்த பற்றுதலும் மங்கலாயிற்று."

"ஒருநாள் என் வீட்டிற்குப் புதியவன் ஒருவன் வந்தான். என் இளமைப்பருவத்து வனப்பை நினைவூட்டிய அவன், வீட்டாரின் செல்லப்பிள்ளை யாகிவிட்டதில் எனக்கேற்பட்ட பொறாமை கொஞ்சமல்ல. மீண்டும் நான் எனது உரிமையை நிலைநாட்டப்புரிந்த போராட்டங்கள் வெட்கக்கேடானவை. சுருங்கச் சொன்னால் அவர்களுக்கு நான் வேண்டாத விருந்தாளியாகிவிட்டேன். எனினும், எனது நாய்க்குணத்தால் அவர்களின் உதைக்கும் கால்களிடையே சுருண்டு கிடப்பதே என் வழக்கமாயிற்று."

"வீட்டில் புதியவனுக்குத்தான் எல்லா உபசாரமும். அவன் தின்ற மிச்சசொச்சங்களையே நான் தின்னுமாறு எதிர்பார்க்கப்பட்டேன். சிலவேளைகளில் இந்த மிச்சிலுக்கும் அவன் பங்குபோட வந்து விடுவான். அந்நேரங்களில் நான் கோபத்தோடு அவன்மீது பாய்வேன். அவன் இளைஞன் அல்லவா? என்னைக் கடித்துக் குதறி விடுவான். அந்த வேளையில் எஜமான் கண்டானோ தொலைந்தது! என் எலும்புகளை அவன் நொறுக்கும் வேளையில் வீட்டாரெல்லாம் வேடிக்கை பார்ப்பார்கள்."

"நானோ அவமானத்தில் கூனிக்குறுகிப் போய் ஒரு மூலையிலே போய்க்கிடந்து, உடல் வேதனையாலும், உள்ள வேதனையாலும் அழுது குமுறி அங்கலாய்த்துக் கொண்டிருப்பேன். என் அநாதைத்தனம். மிகப் பயங்கரமாக என்னை வதைத்து, வாட்டிக் கொண்டிருந்தது."

இதைச் சொல்லியதும் பழைய நினைவுகள் மனத்திரையிலே படம்விரிக்க, ஆண் விம்மி விம்மி அழுதது. பெண் அதனை நெருங்கி, மிகுந்த கனிவோடு தன் நாவினால் அதன் கண்ணீரைரைத் துடைத்துவிட்டது. நீண்ட ஒரு பெருமூச்சை உதிர்த்துவிட்டு, ஆண் மேலும் தன் கதையைத் தொடர்ந்து சொல்லியது.

"முதுமையின் இளைய சகோதரனாக நோய் வந்து என்னை ஆக்கிரமித்தது. புதியவன் கடித்த காயங்கள் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பெருத்து என் உடம்பெல்லாம் புண்களாயின. குட்டை நோய் ஏற்பட்டது. என் உடம்பே அழுகி ஒழுகலாயிற்று. இலையான்களும், தெள்ளும் நல்ல விருந்து கிடைத்து விட்டது என்று என்னைப் பதம்பார்த்தன. அவற்றைக் கலைத்துக் கலைத்து என் வாலும் சோர்ந்து போயிற்று. வாழ்வே நரகமாகி விட்டது."

"இந்நிலையில் ஒருநாள் என் பக்கத்தில் நின்று எஜமானும், அவன் வேலைக்காரனும் இவ்வாறு பேசிக்கொண்டார்கள்."

"இந்தச் சனியனை இனியும் வைத்திருக்கக்கூடாது; கொன்றுவிட வேண்டும்." எஜமான் சொன்னவை இவை.

"கட்டாயம் கொல்லவேண்டும். குட்டை பிடித்த நாய்க்கு விசர்பிடிக்க நாட்செல்லாது ஐயா. துவக்கை எடுத்து வரட்டுமா?" என்று வேலையாள் கேட்டான்.

"எஜமான் மிக அலட்சியமாக, "சீச்சீ! இதற்கொரு தோட்டாவை வீணுக்குவதா? ஒரு உலக்கையை எடுத்து வந்து போடு தலையில் இரண்டு" என்ருன்."

"உடனே அந்த வேலையாள் ஓர் உலக்கையைக் கொண்டு வந்து, என் தலையைக் குறிபார்த்து ஓங்கினுன்; அந்தப் பசாசைப் பரிதாபமாக நோக்கியபடி மெல்ல எழுந்து ஓட முயன்றேன். முதுமையும், பிணியும் கொண்ட என் உடலைத் தூக்கியபடி ஓட நினைத்த நினைப்பு நினைப்பேயாய் நிற்க, நான் அவன் காலடியிலே சுருண்டு விழுந்து தீனக்குரல் எழுப்பினேன். என் விழிகள் "என்னை விட்டு விடப்பா" என்று அவனைக் கெஞ்சின. அந்த அரக்கனே சற்றும் இரங்கவில்லை."

"ஏற்கெனவே நோயின் கொடுமையால் வாதையுற்றிருந்த எனக்கு இந்த அடி எப்படி இருந்திருக்கும்? ஆ...! அன்று நான் அடைந்த வேதனையை இப்பொழுது நினைத்தாலும் தேகம் நடுங்குகிறது!"

"துப்பாக்கியாற் சுட்டாலும் ஒரு நிமிஷத்திலேயே விஷயம் முடிந்திருக்கும். ஆனுல், என் எஜமான் எனக்காக ஒரு தோட்டாவைச் செலவழிப்பதைக் கூட விரும்பவில்லை. ஒருநாள் அவன் உயிரையும், செல்வத்தையும் காப்பாற்றிக் கொடுத்த எனக்கு அவன் கொடுத்த நன்றிப் பரிசில்... உலக்கையடி!"

"இப்பொழுது சொல். மனிதர் நல்லவர்களா? அவர்களை நம்பி நாம் வாலைக் குழைப்பதைவிடப் பைத்தியகாரத்தனம் வேறு இருக்கிறதா?"

பெண் மௌனம் சாதித்தது. தோல்வியைக் கௌரவமாக ஏற்றுக்கொள்ளும் வழியே மௌனந்தானே! இந்தச் சமயத்தில் அவை ஒரு வீட்டின் மேல்மாடிக்குமேற் பறந்து கொண்டிருந்தன. அப்பொழுது அந்த மாடியிலிருந்து ஒரு சிறுவன்,

"வாலைக் குழைத்துவரும் நாய்தான் — அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா"

என்று பாடினான்.

பெண்ணும் ஆணும் கலகலவென்று சிரித்தன: அடுத்த நிமிஷம் அவை சுவர்க்கப்பாதையை நோக்கி மேலெழுந்து பறந்தன.

( ஈழகேசரி - 1950-5-14 )

# 15

## கடன் தீர்ந்தது

வேலாயுதம் சந்தையிலிருந்து புறப்பட்டான். மூட்டை தலையில் ஏறியது. வீட்டிற்குச் சரியாக எட்டு மைல் நடந்தாக வேண்டும்.

பாரம் தலையை நெரித்தது. கழுத்தே முறிந்து விழுவது போன்ற பிரமை. தலையின் இரு பக்கங்களையும் கிட்டிபோட்டு நெருக்கிப் பிடிப்பதுபோல ஒரு விறைப்பு. இத்தனைக்கும் மேலாக அடிவயிற்றிலிருந்து நெருப்புப் போலக் கிளம்பிய அகோரப் பசி.

காலையில் பொன்னம்மா தந்த கோப்பிதான். வயிறு 'கடகடா' என்று தந்திப் பாஷையில் தன் அவல நிலையை அறிவித்தது. அந்தச் செய்திக்குப் பதில் கொடுக்கக் குறைந்தது, இருபத்தைந்து சதமாவது வேண்டாமா?

சந்தையிலேதான் எத்தனை வகையான உணவுகள்! அவித்த மரவள்ளிக்கிழங்கு, வாய்ப்பன், பனங்காய்ப் பணியாரம்! அடடா! மனிதனின் கண்களுக்குக் கண்ணியல்லவா வைக்கின்றன?

வேலாயுதத்தின் வாயில் நீர் ஊறியது. மரவள்ளிக் கிழங்கையும், பச்சை மிளகாய்த் துவையலையும் உருசித்து, உருசித்துச் சாப்பிடுவதுபோல அவன் கனவு கண்டான். ஆனால், கனவு கனவாகவே நின்றுவிட்டது! வாய்க்கும் வயிற்றிற்கும் அடிமையாகும் நிலையிலா அவன் இருக்கிறான்? அவன் கையையே எதிர்பார்த்திருக்கும் பத்துச்சீவன்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டுமே!

இப்படியாகக் காலையிலிருந்து மாலைவரை பாசத்திற்கும், கடமைக்கும் நம்பிக்கையூட்டி, அதே சமயத்தில் வயிற்றை ஏமாற்றிக்கொண்டு நேரத்தைப் போக்கி விட்டான் அவன்.

ஒரு விதமாக வியாபாரமும் முடிந்தது. வேட்டித் தலைப்பின் ஒரு மூலையிலே முடிந்து வைத்திருந்த பணத்தோடு, அன்றைய பங்கான பத்துச் சதத்தையும் சேர்த்துப் பார்த்தபொழுது அவன் முகத்திலே ஓர் அலாதியான மலர்ச்சி ஏற்பட்டது. "அப்பாடா! பத்து ரூபா சேர்த்தாய் விட்டது." என்று நிம்மதிப் பெருமூச்சோடு சொல்லிக் கொண்டான். கடந்த நூறு நாள்களாய் வயிற்றிற்கு வஞ்சகம் செய்து மிச்சம் பிடித்த காசல்லவா அது?

"பாவம்! பொன்னம்மா! நான் மத்தியானத்தில் அவித்த மரவள்ளிக்கிழங்கு வாங்கிச் சாப்பிடுகிறேன் என்றதை நம்பி விட்டாள்."

இப்படி நினைத்துக் கொண்டபொழுது சிரிப்புச் சிரிப்பாய் வந்தது அவனுக்கு.

பொன்னம்மா அவனுக்குச் சொந்த மைத்துனி. கடந்த பன்னிரண்டு வருஷங்களாய் 'மனைவி' என்ற ஸ்தானத்தில் அவன் குடிசையிலே அவள் இருந்தாலும், சின்ன வயதிலே அவர்கள் ஒன்ருய்க்கூடி விளையாடித் திரிந்தவர்கள்தாம்!

அந்தக் காலத்திலே கூடப் பொன்னம்மாவை ஏமாற்றுவதில் அவனுக்குப் புரிபடாத ஓர் உற்சாகம்! இருவரும் 'கீச்சுமாச்சுத் தம்பலம்' விளையாடுவார்கள். மண்ணைக் கைகளால் கூட்டி "கீச்சுமாச்சுத் தம்பலம் கீயா மாயாத் தம்பலம்" என்று சொல்லிக் கொண்டே ஈர்க்கைக் கையிடுக்கிலே ஒளித்துவிடுவான் வேலாயுதம். பொன்னம்மா மண்ணைக் கிளறிக் கிளறி அலுத்துவிட்ட பிறகுதான், ஈர்க்கைக் காட்டுவான். நினைவை இனிக்க வைக்கும் பழைய சம்பவங்கள் அவை.

வேலாயுதம் பெருமூச்சோடு எழுந்துபோய்ச் சில்ல றையை மாற்றித் தாளாக்கினன்; அதோடு வீட்டிற்குத் தேவையான சாமான்களையும் வாங்கினன். இந்தக் காலத்திலே ஆறு ரூபாவுக்குச் சந்தை முழுவதையுமே வாங்க முடியுமா என்ன? ஏதோ 'பொன் வைக்கிற இடத்திலே பூ வைப்பது போல' அவள் சொல்லிவிட்ட சமான்களிலும் அரைக்கரைவாசிதான் வாங்க முடிந்தது.

ஒருபடியாகச் சாமான்களும் வாங்கியாயிற்று. ஒரே ஒரு பத்து ரூபாவைத் தவிரத் துடைத்து விட்டது போலக் 'கொட்டப் பெட்டி' வெறுமையாகவே இருந் தது.

வேலாயுதம் நடந்துகொண்டிருந்தான். சிந்தனையோ அந்தப் பத்து ரூபாவின் மேலேயே வலைபின்னிக் கொண் டிருந்தது.

பத்து ரூபா! அதில் ஒரு பெரிய சரித்திரமே புதைந்து கிடக்கிறது. வேலாயுதம் கொட்டப்பெட்டியை ஒரு தடவைக்கு, இரண்டு தடவையாய் நசித்துப் பார்த் தான். அதற்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த 'தாள்' ஓர் இன்பக் கிளுகிளுப்பையே ஏற்படுத்தியது. வேலா யுதம் சிந்தித்தான்.

ஊரிலே அவன் செய்யாத வேலைகளே இல்லை. நாழி அரிசிக்கு நாய்படாத பாடுபட்டான், அவன். தோட்ட வேலையிலே தொடங்கி, வேலி அடைப்பது, கிடுகு வண் டிக்காரனுக்கு உதவியாளனாய்ப் போவதுவரை எல் லாமே செய்து பார்த்து அலுத்துவிட்டான். குடும்பம் பெருகியதுபோல, வறுமையும் பெருகியதுதான் கண்ட பலன்!

இந்த நிலையிலே, உழைப்பிற்காக மாங்குளத்திற்குப் புறப்பட்டதை நினைத்துக் கொண்டான். போவதற்குப் பணம் வேண்டுமே? அழைத்தவர்கள் "நீ அங்கே வா. வயலிலை வேலை பிடிச்சுத் தாறம்" என்று மட்டுந்தானே சொன்னர்கள்? பணத்திற்கு வழி என்ன?

இரண்டு நாள்களாய் வேலாயுதம் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டான். பிரயாணச் செலவிற்கு ஒன்று கடன்படவேண்டும்; அல்லது களவு எடுக்க வேண்டும். இரண்டுமே அவனுக்குத் தெரியாத விஷயங்கள். வேறுவழி ஒன்றுமே விளங்கவில்லை. வீட்டிலே பசி, முணுமுணுப்பில் தொடங்கி, ஓலமாய் வளர்வதையும் சகிக்கமுடியவில்லை.

அப்பொழுதுதான் பொன்னம்மா ஒரு யோசனையைச் சொன்னாள். அதனைக் கேட்டபொழுது அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இருக்கிறதே? அதை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது. இப்பொழுது நினைத்தாலும் மயிர் சிலிர்க்கிறது.

ஒருவன் எதையும் செய்யலாம். பெண்சாதியின் தாலியை அடகு வைக்கலாமா? பரம்பரை பரம்பரையாய், பவித்திரத்திற்கு எடுத்துக் காட்டாய் விளங்கி வரும் ஒன்றை அடகுக் கடைக்காரனிடம் கொடுப்பதா? வேலாயுதம் இப்படித்தான் நினைத்தான். கடைசியில், "சேச்சே! அது கூடவே கூடாது" என்று முடிவும் செய்து விட்டான்.

"அவளின் இரட்டைவடச் சங்கிலியிலிருந்து மூக்குமின்னிவரை எல்லாவற்றையும் விற்றேன். அதிர்ஷ்டம் வரும், வரும் என்று எண்ணித் தோட்டத்தில் கொண்டு போய்க் கொட்டினேன். ஒவ்வொரு முறையும் புயலும், மழையும் வந்து எல்லாமே பாழாகிவிட்டன. கடைசியில் தோட்டமும் போய்விட்டது."

"அவைதான் போகட்டும். தாலியிலுமா விளையாட்டு? சரி! மனத்தைக் கல்லாக்கி, நம்பிக்கையையும் பொசுக்கிவிட்டுத் தாலியை அடகு வைக்கப் போகிறேன் என்றே வைத்துக்கொள்வோம். அடகு வாங்குபவன்கூட என்னை ஏளனமாகப் பார்ப்பானே? அந்தப் பார்வை ஒன்றே என் உயிரை எடுக்கமாட்டாதா?" என்று எண்ணி வேலாயுதம் மனம் புழுங்கினான். வேதனை அவன் நெஞ்சைக் குத்திக் குதறிய வண்ணம்

இருந்தது. மனச்சாட்சி சிந்தனையைக் கீறிக் கிழித்துச் சித்திரவதை செய்தது.

எல்லாம் சில நிமிஷங்களுக்குத்தான். வேறு வழி எதுவும் புலப்படாத நிலையில், பொன்னம்மாவின் தாலி அடகுக்கடைக்காரக் கந்தரின் உடுக்குப் பெட்டியைச் சரணடைந்ததுதான் மிச்சம்!

வட்டி என்ற செயற்கைச் சுவாசத்தில் வாழ்ந்த கந்தருக்குக்கூட வேலாயுதத்தின் நிலை பரிதாபமாகத் தான் இருந்தது. ஆனால், அவரும் பிழைக்க வேண்டுமே! தாலிக்கு ஈடாக ஒன்பது ரூபா வாங்கி வந்தான்.

ஆயிற்று. நாலாவது மாதமும் இன்றோடு முடிகிறது. முதலும் வட்டியுமாக எப்படியோ பத்து ரூபா சேர்த்தும் ஆயிற்று.

'கடமை தீர்ந்தது' என்ற மனக் குதிப்பிலே வேலாயுதம் பாரத்தை மறந்து நடந்தான். அந்தப் பத்து ரூபாவின் மேற் பரப்பப்பட்ட நம்பிக்கை என்ற பூக் குவியலின்மீது, நடப்பது போலக் கம்பீரமாய் நடந்தான்.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. தை மாதத்துப் பனிப்புகார் வானத்துக்கும் பூமிக்குமிடையே மண்டலமிட்டது. வெளிச்சக் கம்பங்களைச் சுற்றி, ஈசல்கள் 'ஙொய்' என்று சப்தமிட்டுப் பறந்தன. வானத்து நீலப்பட்டாடையின் ஒரு மூலையிலே குளிர்சாந்து வட்டமாய் வழிந்து தெறித்துக் கிடந்தது.

தெருவின் இரண்டு பக்கங்களிலும் இருந்த வயல்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. பயிர்த்தலையே தெரியாத அவ்வளவு வெள்ளம்.

நேற்றும், இன்றுந்தான் மழை இல்லை. அதற்கு முதல் மழையா பெய்தது? மேகத்தைத் தாறுதாறாய், வாழைத் தாறைக் கிழிப்பது போலக் கிழித்துக் கொண்டல்லவா மழை கொட்டியது? யாழ்ப்பாணக்

கமக்காரனின் எதிர்காலக் கனவுகள் எல்லாம் அந்த மழையோடு சேர்ந்து கரைந்துதான் போய்விட்டன. இனி அடுத்த வருடம்வரை யாழ்ப்பாணக் கிராமங்களில் கலியாணச் சந்தடி இருக்காது. இந்த மழை வேண்டுமென்றுதானு யாழ்ப்பாணத்தார் 'கொடும்பாவி' கட்டி இழுத்தார்கள்?

நாலு மாதங்களின் முன்னுல் மாங்குளத்தில் பெய்த மழையோடு இந்த மழையை ஒப்பிட்டுப் பார்த்தான். அந்த மழைக்கு இந்த மழை ஒரு தூசு!

'தாலி! தாலி! தாலி!' இதை மறக்கவே முடியாதோ? வேலாயுதத்தின் நெஞ்சை அந்த நினைவு சாறுக அல்லவா பிழிகிறது? அவன் தாலியை மீட்கத்தான் போகிருன். ஆனுல்... ஆனுல்... செய்த அந்தப் பிழை மறைந்துவிடப் போகிறதா?

இத்தனைக்கும் காரணம் பொன்னம்மாதானே? அவள் தூண்டாவிட்டால் அவன் இதைச் செய்திருப்பானு? ஏன் அவளைக் கோபிக்க வேண்டும்? அவள் செய்த தியாகங்களுக்குப் பிரதியுபகாரமா இது?

வேலாயுதத்தின் கால்கள் தளர்ந்தன. தலையில் இருந்த மூட்டையின் பாரம் திடீரென நூறுமடங்கு கூடிவிட்டது போல இருந்தது. மூட்டையை வலது தோளுக்கு மாற்றினுன். இருந்தாற்போலிருந்து நெஞ்சைக் குடைவது போன்ற 'வலி' ஏற்பட்டு வளர்ந்தது. அடிக்கடி இந்த வலி ஏற்படுவது வழக்கந்தான். ஆனுல், இன்றே அதைத் தாங்க முடியவில்லை. அலுப்போடு மூட்டையை இறக்கி வைத்துவிட்டு ஒரு விளக்குக் கம்பத்தின் கீழ் உட்கார்ந்தான்.

நோவுக்கிடையிலும் நினைவுகள் பொன்னம்மாவைச் சுற்றியே படர்ந்தன. அவள் மிகுந்த அழுத்தக்காரி! எந்தத் துன்பத்தையும், தன் இதழ்க்கடையிலே சிறைவைத்து, முறுவல் பூப்பதில் அவள் வல்லவள்! இரண்டாயிரம் கன்றுப் புகையிலையும் மழையில் அழுகி நாசமான

போதும், அவள் எப்படிச் சகித்துக் கொண்டு, ஒன்றும் நடவாதபடி முகம்மலர்ந்து திரிந்தாள்!

பொன்னம்மா அழுததை அவன் கண்டதேயில்லை. வேதனைகள் புயலாக வந்து மோதியபொழுதெல்லாம் தன் இமைக்கதவுகளை மூடி, நெஞ்சைப் பாதுகாத்துக் கொண்டாள் அவள்.

வேலாயுதம் வெறுப்போடு எழுந்தான். விறைத்துப் போன கால்களை உதறிவிட்டுக் கொண்டான் இடுப்பில் வலக்கையை வைத்து, உடலை வளைத்து, இடக்கையை உதறினன். இடுப்பில் 'படக்' என்ற சப்தம். இடுப்பே முறிந்து விட்டதோ? இருக்காது. ஆனல் இடுப்பில் ஏற்பட்ட வேதனை? அதனையும் மீறிய நெஞ்சுவலி. 'உம்! எப்படியும் வீட்டிற்குப் போய்த்தானே ஆக வேண்டும்?'

வேலாயுதம் மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்த படி மெதுவாக நடந்தான்.

(2)

"பொன்னு! இண்டைக்கு நான் ஓர் உண்மை சொல்லப் போறன். சொல்லட்டே? கோபிக்க மாட்டாயே? என்ன? தலையை ஆட்டுறியா?"

"உன்ரை தாலியை அடகுவைச்ச நாளிலிருந்து எனக்கு ஒரே வேதனை. மரம் மாதிரி உனக்கு முன்னலை இருந்து கொண்டு உன்னை அறுதலிக் கோலம் பண்ணியதை நினைக்க..."

"பஞ்சானும் குஞ்சுமாய் எட்டுச் சீவன்களுக்குச் சாப்பாடும் குடுத்து, பத்து ரூபா மிச்சமும் பிடிக்கிறது இலேசுப்பட்ட சங்கதியே? அதனலைதான் மத்தியானத்திலை சாப்பிடுறதை விட்டுட்டன். "சந்தையிலை கிழங்கை

முழங்கைச் சாப்பிடுறஞன்'' என்று உனக்குச் சொன்னது ஞாபகமிருக்கே? அது பொய்! உண்மையிலே நான் ஒண்டும் சாப்பிடுறதில்லே. அந்தச் சாப்பாட்டுக் காசைக் கொஞ்சங் கொஞ்சமாய் மிச்சம் பிடிச்சுத்தான் இண்டைக்கு வாறவழியிலே கந்தர் வீட்டுக்குப் போய்த் தாலியையும் மீட்டுக்கொண்டு வந்தஞன்.''

"எங்கை உன்ரை முகம்? அழுகிறியே? ஆ! இல்லே! நீ அழேல்லே! ஆஞ ஏன் கண்ணே மூடியிருக்கிருய்? பொன்னு! நீ வேணுமெண்டால் அழு. ஆஞல், உன் கண்ணே மட்டும் மூடாதை. எனக்குத் தெரியும் உன்ரை வேதனையெல்லாம் இரண்டு இமைக்குள்ளேயுந்தான் எண்டு எனக்குத் தெரியும். சத்தியமாய் உன்ரை அத்தாஞணே உன்ரை கண்ணேத்திற. திறந்திட்டியே? அதுதான் சரி.''

"அப்பாடா! நான்பட்ட கடன் இண்டைக்குத்தான் தீர்ந்தது.''

இதைச் சொல்லியதும் வேலாயுதம் பொன்னம்மாவின் மார்பிலே தொங்கிய தாலியை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பொன்னம்மா தன் கரங்களே அகல நீட்டி வேலாயுதத்தைத் தழுவிக்கொண்டு, அவனது மார்பிலே நெஞ்சைப் புதைத்து முதன் முறையாகத் தன் கண்களிலிருந்து திறந்த நீர் மடையிஞல் அவன் மார்பைக் கழுவிஞள்.

வேலாயுதத்தின் நெஞ்சுநோ சிறிது சிறிதாகக் குறையலாயிற்று. அவன் நீண்ட பெருமூச்சு விட்டான்.

அன்றிரவு அவர்கள் இருவரும் நெடுநேரம் விழித்திருந்தார்கள்.

(தினகரன் 1961)

## " சொக்கன் "

" ஈழகேசரி வாசகர்களுக்குச் " சொக்கன் " புதியவரல்லர். அவருடைய கதைகள் இப்பத்திரிகையிலே வெளியாகின்றன. தமக்குரித்தான தனிச்சிறப்புடன் கதைகளை இலாவகமாக எழுதிவருகிறார்."

ஆசிரியர், ஈழகேசரி ( 50-2-5 )

" அவர் எழுதிய கதைகளுள்ளே எனக்குப் பிடித்தது 'குட்டை நாய்' என்பதுதான். ஆனந்தமும் ஒளியும் போட்டியிட்டு ஆக்கிரமிக்கும் சுவர்க்க உலகத்தின் ஒரு வெளியிலே ஓர் ஆண் நாயையும் அதன் காதலியையுஞ் சந்திக்கச் செய்து, பெண் நாயின் வாயால் மனிதர்களின் புகழையும், ஆண் நாயின் வாயால் அவர்களின் இராக்கதத் தன்மையையும் காணும்படி படைத்த அந்தச் சிறுகதை இருக்கிறதே? அது ஈழநாட்டின் முதல்தரமானதொன்று என்பதை யாரும் மறுக்கமுடியாது."

இரசிகமணி கனக செந்திநாதன்
(ஈழகேசரி 55-8-21 )

'கடன் தீர்ந்தது' இவ்வருடத்தில் இதுவரை வெளியான கதைகளில் சிறந்தது. மூன்று தடவை படித்துவிட்டேன்...... பொதுவாகச் சொக்கனின் பார்வை கூர்மையாகிக் கொண்டு வருகிறது.

இளங்கீரன்
( கலைச்செல்வி 60-7-25)

" கதைகளின் கருப்பொருளும், ஒவ்வொரு சொல்லும், சொற்றொடரும், வசனமும் அவருடைய சிந்தனையின் புதுமையையும், வாழ்க்கை அநுபவத்தையும், எழுத்தின் அழகையும் எடுத்தியம்பும்."

நந்தி
( கடல் - முன்னுரை 72-5-15 )